# தமிழரசு

ஏப்ரல் 2002




உழைப்பே உயர்வுதரும்

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2033
பங்குனி – சித்திரை
ஏப்ரல் – 2002
மலர்: 33 இதழ்: 19 & 20
விலை : ரூ.10

இந்த இதழில்....

★ தமிழக சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் உரை ............ 2
★ முதல்நிலை நோக்கி முன்னேறும் தமிழகம் ............ 18
★ சங்கரலிங்கபுரம் கிராமத்தில் முதல்வர் ............ 34
★ திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் ............ 37
★ *தொழில்நுட்பக் கல்வி நுழைவுத் தேர்வு :*
ஆன்லைன் மூலம் ஹால் டிக்கெட் ............ 39
★ தகவல் தொழில் நுட்பத்தில் தமிழகம் உலகத் தலைநகராக உருவெடுக்கும் ............ 41
★ மக்கள் – நல்வாழ்வுத்துறைக்கு வலைதளம் ............ 43
★ நிதிநிலை அறிக்கை – 2002–2003 ............ 49

*முதல் பக்க அட்டையில்...*

2002–2003ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினை சட்டப்பேரவையில் சமர்ப்பிக்க மாண்புமிகு முதலமைச்சருடன் வரும் மாண்புமிகு நிதியமைச்சர்

*இரண்டாம் பக்க அட்டையில் :*

மேதகு ஆளுநர் உரை மீதான விவாதங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் சட்டப்பேரவையில் பதிலளிக்கிறார்.

*கடைசிப் பக்க அட்டையில் :*

திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் தொடக்க விழா



# அனைவருக்கும் ஆரோக்கியமான, வளமான வாழ்வு அமைப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதே இவ்வரசின் இலக்கு

– மேதகு ஆளுநர் திரு. பி.எஸ்.ராமமோகன் ராவ்

மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே,

2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதல் கூட்டத் தொடரில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என் உளம்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டு ஆளுநராக நான் பொறுப்பேற்ற பிறகு, இதுவே இம் மாமன்றத்தின் பெருமைக்குரிய உறுப்பினர்களிடையே நான் ஆற்றும் முதல் உரையாகும். உங்கள் கனிவான வரவேற்பிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இம்மாநிலத்தின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் என் பேராதரவும் ஒத்துழைப்பும் எப்போதும் உண்டு என்பதையும் உறுதிப்படுத்த விரும்புகிறேன்.

2001ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பான நிகழ்வுகளுக்குப் பின் மீண்டும் முதல்வராக வந்துள்ள செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை வரவேற்கிறேன். அவருடைய திறமையான, உறுதியான தலைமையின் கீழ் இம்மாநிலம் எல்லா வகையிலும் வளமும் நலமும் பெறுமென நம்புகிறேன்.

இந்திய நாடு, பலதரப்பட்ட பண்பாடுகள், மொழிகள் மற்றும் வரலாற்றைக் கொண்ட மிகத் தொன்மை வாய்ந்த நாடாகும். நம்மிடையே பல்வேறு வேற்றுமைகள் இருப்பினும், நாம் அனைவரும் ஒரே நாட்டினர் என்னும் உணர்வோடு, ஒன்றுபட்டிருப்பதை எவரும் மறுக்க இயலாது. 2001ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13ஆம் நாளன்று இந்திய நாடாளுமன்றத்தின் மீது பயங்கரவாதிகளாலும், அழிவு சக்திகளாலும் நடத்தப்பட்ட தாக்குதல், நமது இறையாண்மை மீதும் தேசியத்தின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலாகும். இந்த அர்த்தமற்ற வன்முறைச் செயலை நான் வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்திய ஜனநாயகக் கோட்டையைப் பாதுகாப்பதில் ஈடுபட்டு தங்கள் இன்னுயிரை ஈந்த நமது பாதுகாப்புப் பணியாளர்களின்

குடும்பங்களுக்குத் தமிழ்நாட்டு மக்களின் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். பயங்கரவாதத்திற்கு எதிராக, குறிப்பாக பயங்கரவாதத்தைத் தடுப்பதற்காக மத்திய அரசு தேசியச் சட்டம் ஒன்றை இயற்றும் முயற்சிக்கு இவ்வரசு தனது முழு ஆதரவை அளிக்கும்.

அண்மையில் இந்தியாவின் மேற்குப் பகுதியில் குறிப்பாக குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட கலவரத்தில் அப்பாவி மக்கள், முக்கியமாக பெண்களும், குழந்தைகளும், தங்கள் இன்னுயிரை இழக்க நேர்ந்தது. நம்முடைய சகோதர, சகோதரிகளின் உயிரிழப்புக்கு தமிழ்நாட்டு மக்களுடன் நானும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மனிதத் தன்மையற்ற இப்படுகொலைக்குக் காரணமானவர்களை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இம்மாநில மக்கள் எக்காலத்துக்கும் பொருந்தும் கொள்கைகளான சமூக நல்லிணக்கத்தையும் சகோதரத்துவத்தையும்

கோரியுள்ளதாகவும், விடுதலைப் புலிகளின் கொள்கை ஆலோசகர் ஆன்டன் பாலசிங்கமும் அவருடைய மனைவியும் அமைதிப்பேச்சு வார்த்தை நடத்துவதற்கு ஏதுவாக சென்னையில் இருக்கக் கோரப்பட்டுள்ளது என்றும் செய்திகள், பத்திரிகை மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களில் பரவலாக வெளியிடப்பட்டுள்ளன. அத்தகைய முயற்சிக்கு இந்த அரசு, தனது திட்டவட்டமான எதிர்ப்பை மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது.

அண்மையில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கடலூர் ஆகிய மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில் பருவமல்லாத காலத்தில் பெய்த பெரு மழையால், உயிர்ச் சேதமும், நெற்பயிருக்கும், ஏனைய பயிர்களுக்கும் பெருத்த சேதமும் ஏற்பட்டது. மத்திய அரசு நிர்ணயித்த வரையறைகளின் அடிப்படையில், இயற்கைச் சீற்ற நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகையாக ரூ.49 கோடியை இவ்வரசு உடனடியாக வழங்கியுள்ளது. வடிநிலப் பகுதியில் விவசாயிகளுக்கு



கட்டிக்காத்து வருவதுடன், அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதில் அரசுக்குத் தொடர்ந்து துணை நின்று வருகின்றனர். இம்மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கைப் பராமரிப்பதில் மிக உயரிய முன்னுரிமையை இவ்வரசு தொடர்ந்து அளிக்கும்.

விடுதலைப் புலிகள், ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த இந்திய அரசின் உதவியைக்

ஏற்பட்டுள்ள பெரும் இழப்பை ஈடு செய்ய இத்தொகை போதுமானதல்ல என்பதை அரசு அறியும். பாதிக்கப்பட்ட மக்களின் துயரைத் துடைக்க கூடுதலாக நிவாரணத்தை விரைந்து அளிக்குமாறு மத்திய அரசைக் கேட்டுள்ளோம்.

காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பில் வரையறுக்கப்பட்ட அளவிற்கான தண்ணீர் அந்தந்த காலத்தில் பெறப்படாததால், தமிழ்நாட்டில் காவிரிப் பாசன

ஏற்பாட்டை நம்பியிருக்கும் நிலங்கள் வறண்டுபோகக் கூடிய நிலை ஏற்பட்டு வருகிறது. காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் இந்த அரசு தன் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்துவருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இப்பிரச்சினையில் மத்திய அரசு, நடுநிலைப்போக்கைக் கடைபிடிக்கும் என்று இவ்வரசு எதிர்பார்க்கிறது. நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பைச் செயல்படுத்தி, அதனைக் கண்காணிப்பதற்கு ஏதுவாக உரிய அதிகாரங்களுடன் கூடிய தொழில்நுட்பக் குழு ஒன்றை ஏற்படுத்துமாறு தொடர்ந்து இவ்வரசு வலியுறுத்தும். இதற்காக, உரிய விதிகளையும், விதிமுறைகளையும் உடனடியாக இயற்றுவதும் அவசியமாகும். மத்திய அரசு ஏற்படுத்திய ஒரு வல்லுநர் குழு தெரிவித்த முடிவுகளுக்கு இணங்க, முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை முதற்கண் **142** அடியாகவும், பின்னர் **152** அடியாகவும் உயர்த்த அனுமதிக்கக்கோரி உச்ச நீதி மன்றத்தில் இந்த அரசு முறையீடு செய்யும். ஆந்திரப்பிரதேச அரசின் ஒத்துழைப்புடன் 'கிருஷ்ணா நதிநீர்த் திட்டம்' விரைவில் நிறைவேற்றி முடிக்கப்படும்.

இம்மாநிலத்தில், மக்களாட்சிக்கு அடித்தளத்திலிருந்து புத்துயிரூட்ட வேண்டுமென்ற உறுதியை நிறைவுசெய்யும் நோக்குடன், உள்ளாட்சி அமைப்புகளின் மூன்று அடுக்குகளிலும் தேர்தல்களை இவ்வரசு நியாயமாகவும் நேர்மையாகவும் நடத்தியுள்ளது. சில நிருவாகச் சிக்கல்கள் காரணமாக, இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கான தேர்தல்களை நடத்த இயலவில்லை. கூட்டுறவு நிறுவனங்களுக்கு விரைவில் தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளித்தல், உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த நிதி ஆதாரங்களையும், அவை நல்கும் பணிகளின் தரத்தையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய **2002–2007** கால அளவிற்காக இரண்டாம் மாநில நிதிக் குழு தெரிவித்த பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. இப்பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட முடிவுகள் அறிவிக்கப்பட்டு வரும் நிதி ஆண்டிற்கான வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில், தேவையான நிதியொதுக்கம் செய்யப்படும்.

மக்களாட்சி முறையில், அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்ற அரசியலமைப்புக் கொள்கை நிறைவேற்றப்பட வேண்டுமானால், நமது உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறனை மேம்படுத்தவும், பங்கேற்புத் தரத்தை உயர்த்தவும் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம். உள்ளாட்சி அமைப்புகளில் முடிவு எடுக்கும் நடைமுறையை மேம்படுத்தும் வகையில், புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் பயிற்சியளிப்பதற்கான விரிவான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுவருகிறது. இப்பயிற்சியின் மூலம், தமது பகுதிகளில் ஒட்டுமொத்த மேம்பாட்டுப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள அவர்களால் இயலும்.

மத்திய அரசு அமைத்த அடுத்தடுத்து வந்த நிதிக் குழுக்களினால், மத்திய நிதிப் பகிர்வில், தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பங்களவு மறுக்கப்பட்டுள்ளது. வரிவிதிப்பு நடவடிக்கை, நல்ல நிருவாகம், மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தல், தனிநபர் வருவாய், அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு குறியீட்டுச் சாதனைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில், அறிவார்ந்த, நியாயமான வரிப் பகிர்வு நடைமுறை ஒன்றைப் பன்னிரெண்டாவது நிதிக்குழு பின்பற்ற வேண்டும் என்று இவ்வரசு வலியுறுத்தும். சமூக – பொருளாதார மேம்பாட்டில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ள காரணத்திற்காக, தமிழ்நாடு தண்டிக்கப்படக் கூடாது என்பதில் கவனமெடுத்துக் கொள்வதே முக்கிய நோக்கமாகும்.

இவ்வரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது நிலவிய கடும் நிதி நெருக்கடியை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த நெருக்கடியின் அளவையும், இதற்கான காரணங்களையும் அறியும் முதல் நடவடிக்கையாக, அரசு, கடந்த வரவு–செலவுக் கூட்டத் தொடரில் ''தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கையை'' சமர்ப்பித்தது. இதைத் தொடர்ந்து, பணியாளர் – செலவு சீர்திருத்தக் குழு ஒன்று அமைக்கப்பட்டும், அரசின் திட்டம் சாரா செலவைக் குறைக்க ஏதுவாக பல சீரமைப்பு நடவடிக்கைகளும் அறிவிக்கப்பட்டன.

கடந்த சில ஆண்டுகளில் மிகச் சீர்கேடடைந்துள்ள மாநில நிதி நிலையை மேம்படுத்த இந்நடவடிக்கைகள் மட்டும் போதுமானதல்ல. இம்மாநிலம் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இத்தருணத்தில், மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கை நடப்பாண்டில் ரூ.**512** கோடி அளவிற்கு குறைப்பதற்கு மத்திய அரசு எடுத்த முடிவு, பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது. தேசியப் பொருளாதாரத்தில் குறிப்பாக உற்பத்தித் துறையில் நிலவும் தற்போதைய மந்த நிலை காரணமாக, நடப்பு நிதியாண்டில் மாநில அரசின் வணிக வரி வசூல் வெகுவாகக் குறைந்தது, நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளது. இப்பிரச்சினை, தமிழ்நாடு மட்டுமே எதிர்நோக்கியுள்ள பிரச்சினை அல்ல; பொருளாதாரத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பின்னடைவு, ஏனைய மாநிலங்களின் நிதி நிலைமையிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது; அதன் காரணமாக, பல மாநிலங்கள் அவற்றின் திட்டச் செலவை பெருமளவுக்குக் குறைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

அரசு, நடப்பு நிதியாண்டிற்கான திட்ட அளவு ரூ.**6,040** கோடி என்று அறிவித்தது. மாநில அரசின் வரவுகள்

கடுமையாகக் குறைந்ததால், கூடுதல் வருவாய் ஆதாரங்களைத் திரட்டுவதன் மூலம்தான் மேற்சொன்ன இலக்கை எய்த இயலும். நடப்பு நிதியாண்டு விரைவில் முடியவிருப்பதால், இதற்கான சாத்தியக்கூறு இல்லாத நிலை உருவாகலாம்; இந்த பின்னணியில், கிடைக்கக்கூடிய அனைத்து வாய்ப்புகளையும் கருதிப்பார்த்த பின்னர், 2001–02ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் ஏற்பளிக்கப்பட்ட திட்ட அளவை எய்தக்கூடிய இலக்கான ரூ.5,200 கோடியாகக் குறைப்பதற்கு இவ்வரசு முடிவு செய்துள்ளது.

சமச்சீரற்ற நிதி நிலைமையைச் சரிசெய்ய தேவையான நடவடிக்கையை எடுக்கும் அதே சமயத்தில் வளர்ச்சிக்கான திட்டங்களையும் அரசு தொடர்ந்து நிறைவேற்றும். தமிழ்நாட்டை ஒவ்வொரு துறையிலும் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக விளங்கச் செய்ய, தான் உறுதிபூண்டிருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அறிவித்துள்ளார். ''அனைவருக்கும் ஆரோக்கியமான, வளமான வாழ்வு அமைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதே'' இவ்வரசின் இலக்காகும். இத்தொலைநோக்கினை எய்திட பின்வரும் 15 அம்சங்களை உள்ளடக்கிய திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

1) தொடர் பசுமைப் புரட்சி: பண்ணை உற்பத்தித் திறன் என்றென்றும் நிலைத்து இருக்கும் வகையில் அதிகரிக்கச் செய்தல்; ஒவ்வொரு மழைத் துளியையும் சேமித்தல்; குறைந்த அளவு நீரைக் கொண்டு அதிக அளவில் உற்பத்தி.

2) உணவுப் பாதுகாப்பு: ஆண், பெண் மற்றும் குழந்தைகள் அனைவருக்கும் சரிவிகித உணவு கிடைப்பதற்கான பொருளாதார, சமூக வழிமுறைகளை உருவாக்குதல்.

3) கால்நடைப் பாதுகாப்பு: கால்நடைகளின் தரத்தை மேம்படுத்துதல்; கால்நடைகளை நன்கு பேணுதல்; பண்ணைத் துணை வருவாயைப் பெருக்குதல்; பல்வகை மீன் வளர்ப்பை மேம்படுத்துதல்; மீன் வளத்தை அதிகரித்தல்.

4) நீர்வளப் பாதுகாப்பு: பாதுகாப்பான குடிநீர், வேளாண்மை மற்றும் தொழில் ஆகியவற்றிற்குப் போதுமான நீர்வளத்தை ஏற்படுத்துதல் மற்றும் உயிரின வாழ்க்கைச் சூழல் பராமரிப்பு.

5) சுகாதாரப் பாதுகாப்பு: தொழுநோய், காசநோய், தவிர்க்கக்கூடிய பார்வையின்மை உள்ளிட்ட அனைத்து தடுக்கத்தக்க நோய்களையும் கட்டுப்படுத்துதல்; தடுப்பூசிகள்மூலம் தவிர்க்கக்கூடிய நோய்களை முழுமையாக ஒழித்தல்; பிறப்பு, இறப்பு விகிதங்களைக் குறைத்து சராசரி ஆயுட்காலத்தை அதிகரித்தல்; சிசு இறப்பு வீதம், மகப்பேறுகால இறப்பு வீதம் மற்றும் எடை குறைவான குழந்தை பிறப்பு வீதம் ஆகியவற்றைக் குறைத்தல்; தாய்–சேய் நலப் பாதுகாப்புக்கேற்ற நெறிமுறைகளைப் பின்பற்றுதல்; எச்.ஐ.வி./ எய்ட்ஸ்க்கு எதிரான தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் உடல் ஊனமுற்ற, மனநலம்





குன்றிய ஆண், பெண் மற்றும் குழந்தைகள் நலன் பேணுவதில் தனி கவனம் செலுத்துதல்.

6) வாழ்வாதாரப் பாதுகாப்பு: "அனைவருக்கும் வேலை வாய்ப்பு'', தேர்ச்சிபெறா தொழிலாளர்களை தேர்ச்சிபெற்ற நிலைக்குக் கொண்டுவருதல்; கிராமப்புற பண்ணை மற்றும் பண்ணை சாரா வேலை வாய்ப்பிற்கும் சிறு அளவில் கடன் பெறுகின்ற சிறிய தொழில்களுக்கும் ஒருங்கிணைந்த தனி கவனம் செலுத்துதல்; தொழில்நுட்பம், பயிற்சி, தொழில்நுட்பக் கட்டமைப்பு வசதி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகம் ஆகியவற்றின் வாயிலாக சுய வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு புதிய வழிவகைகளை ஏற்படுத்துதல்.

7) உறைவிடப் பாதுகாப்பு: சூரிய சக்தி பயன்பாடு மற்றும் மழைநீர் சேகரிப்பு ஆகிய இரண்டும் அனைவரின் பொறுப்பு என்பதன் அடிப்படைக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட வீட்டுவசதிப் பணிகளை மேம்படுத்துதல்.

8) உயிரின வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பு: நிலம், நீர், வனங்கள், பல்வகை உயிரின வகைகள், கடல், தூய்மையான காற்று போன்ற வாழ்க்கைக்கு ஆதாரமான வளங்களைப் பாதுகாத்து தரம் உயர்த்தல்; திட திரவக் கழிவுகளை மீண்டும் பயன்படுத்தல்; அனைத்து உயிரினக் கழிவுகளை உரமாக்குதல்; மருத்துவமனைக் கழிவுகளைப் பாதுகாப்பாக அகற்றுதல்; மலேரியா நோய்க்குக் காரணமான உயிரினச் சுற்றுச்சூழல் கட்டுப்பாடு.

9) எரிசக்தி பாதுகாப்பு: அனல், புனல், அணுசக்தி ஆகிய எரிசக்தி ஆதாரங்கள் மற்றும் காற்று, சூரியசக்தி, உயிரின கழிவு எரிசக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க வகையிலான எரிசக்தி ஆதாரங்கள் ஆகியவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்தி நிலைபெற்ற ஆதாரங்களை ஏற்படுத்துதல்; வேளாண்மை, தொழில் மற்றும் வீட்டுப் பயனுக்காக எரிசக்தியில் தன்னிறைவை எய்துதல்.

10) வளர்ச்சிக்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதி: கிராம, நகர்ப்புற பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல்; 500க்கு மேல் மக்கள் தொகை கொண்ட அனைத்து சிற்றூர்களுக்கும் தொடர்பு வசதிகள் அளித்தல்; கிராம–நகர்ப்புற ஏற்றத் தாழ்வுகளை அகற்றுதல்.

11) எழுத்தறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவு: பாலர் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை கல்வியைத் தரம் உயர்த்துவதில் கவனம் செலுத்துதல்; எழுதப்படிக்கத் தெரிந்த அல்லது ஓரளவு எழுதப்படிக்கத் தெரிந்த ஆண் பெண்களுக்குத் தொழில்நுட்பம் மற்றும் திறமைப் பயிற்சி அளிக்க தனிகவனம் செலுத்துதல்; குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல்.

12) நாட்டுப்புற, பாரம்பரிய மற்றும் நவீன கலை, பண்பாடு, நாடகம்: தமிழ்நாட்டின் பாரம்பரிய பண்பாடு குறித்த


விழிப்புணர்வை ஏற்படுத்தி ஆர்வத்தைப் பெருக்குதல்; தெரு நாடகங்கள் உள்ளிட்ட பண்பாட்டு மரபுகளுக்குப் புத்துயிரூட்டுதல்.

13) பாலின நேர்மை நெறி (Gender equity) பாலினப் பாகுபாட்டை நீக்குதல், ஆண், பெண் விகிதாச்சார முரண்பாடுகளைக் களைதல்; பணிபுரியும் மகளிரின் அன்றாட வாழ்க்கைச் சுமைகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஆதரவான சேவைகளை அளித்தல்.

14) ஒடுக்கப்பட்ட மக்களுக்கான புதிய அணுகுமுறை: ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியோரின் கல்வி மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.

15) அதி விரைவுத் தொழில்நுட்ப முன்னேற்றம்: உயிரித் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற முன்னணி அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை ஊக்குவித்தல்; கல்வியறிவையும் களச் செயல்பாட்டையும் ஒருங்கிணைக்கும் முயற்சிகள்; மக்களிடையே அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அறிவியல் வல்லுநர்களுக்கும் சமுதாயத்திற்குமிடையே புதிய சமூகத் தொடர்பை ஏற்படுத்தவும், இயக்கம் ஒன்றைத் தொடங்குதல்; கணினி அறிவு அடிப்படையில் உருவாகும் ஏற்றத் தாழ்வுகளைப் போக்குகின்ற கட்டமைப்பு மற்றும் தகவல் அளிப்பு முயற்சிகளுக்கு சமமான கவனம் செலுத்துதல்; குறைந்தளவு அடிப்படைத் தேவைத் திட்டத்தில் பொருத்தமான தொழில்நுட்ப வசதிகளைக் கிடைக்கச் செய்வதும் இதில் அடங்கும்.

இவ்வாறமைந்துள்ள முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டம், அடுத்த நான்காண்டுகளில் அரசுக்கு வழிகாட்டியாக அமையும். 2006 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் இந்த நோக்கத்தை அடைவதே இவ்வரசின் குறிக்கோளாகும்.



வேளாண் பொருளாதாரத்திற்குப் புத்துயிரூட்டும் வகையில் தகுந்த சாகுபடிப் பயிர்களைத் தேர்ந்தெடுத்தல், உர மற்றும் நீர் நிருவாக தொழில் உத்திகள், பாசன வசதிகளை நவீனப்படுத்தி விரிவுபடுத்தல், பண்ணை உற்பத்திப் பொருள்களைத் திறம்பட விற்பனை செய்தல் போன்றவற்றின் வாயிலாக, உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் பெருக்குவதற்கு இவ்வரசு உரிய கவனம் செலுத்தும். வேளாண்மைப் பயன்பாட்டிற்காக, பெருமளவில் தரிசு நிலங்களைச் சீரமைப்பதாக அளித்த உறுதிமொழியை இவ்வரசு ஏற்கெனவே செயற்படுத்தத் தொடங்கியுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வெளி நிதி ஆதாரங்கள்


மூலம் நீர்வரத்து மேம்பாட்டு முகவரமைப்பு இப்பெரும் திட்டத்தைச் செயல்படுத்தும். 10 மாவட்டங்களில் 1,35,905 ஏக்கர் தரிசு நிலத்தை மேம்படுத்தும் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. தரிசு நிலங்களைக் கண்டறிதல், நீர்வரத்துப் பகுதி ஒவ்வொன்றுக்கும் திட்டம் தயாரித்தல், நாற்றுப் பண்ணைகள் அமைத்தல் ஆகியன இத்திட்டத்தில் அடங்கும். ஆதாயம் தரத்தக்க பயிர்களைப் பயிரிடவும், அவற்றுக்குச் சிறந்த முறையில் பாசனமளிக்கவும் இயலும் வகையில், நிலத்தடி நீர் வளத்தை அதிகரிக்க முக்கியத்துவம் அளிக்கப்படும். மூலிகைச் செடிகள் பயிரிட்டு விற்பனை செய்யவும், இயற்கை வழி வேளாண்மைக்கும் பெருமளவில் ஊக்கம் அளிக்கப்படும்.

தரிசு நில மேம்பாட்டுக்காக செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களின் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளை முடிவு செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின்கீழ் தரிசுநில மேம்பாட்டு அதிகார மன்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்றே, வேளாண்மை வர்க்கத்தையும் உணவுப் பொருள் பதப்படுத்துவதையும் மேம்படுத்தும் பணி வேளாண்மை விற்பனைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, இத்துறை வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வர்த்தகத் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் முதன் முதலாக ஒசூரில் மலர்கள் ஏற்றுமதி வர்த்தக மண்டலம் ஏற்படுத்தப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இம்மாநிலத்தின் வெவ்வேறு மாவட்டங்களில் இவ்வகையான வேளாண் ஏற்றுமதி வர்த்தக மண்டலங்களையும் வேளாண் வணிக மையங்களையும் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வு நடைபெற்று வருகிறது.

வேளாண்மைத் துறையின் வளர்ச்சி இயந்திரமாக அண்மை ஆண்டுகளில் தோட்டக்கலை உருவாகி வருகிறது. காய்கறிகள், கனிகள், மலர்கள் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கும், பதப்படுத்தி மதிப்புக் கூட்டி அவற்றை விற்பனை செய்வதற்கும் ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாட்டில் தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் (Mission for Horticulture Development) ஒன்றை அமைக்க இவ்வரசு கருதியுள்ளது. புன்செய் தோட்டக்கலை, சொட்டு நீர்ப்பாசனம் மூலம் நீர்வளப் பாதுகாப்பு, தோட்டக்கலை விளைபொருள்களின் அறுவடைக்குப்பின் பாதுகாத்து விற்பனை செய்வதற்காக வேளாண் பொருளாதார ஏற்றுமதி வர்த்தக மண்டலத்தை ஏற்படுத்துதல் ஆகியவை குறித்து தனி கவனம் செலுத்துவதுடன், பயிரிடுவதிலிருந்து விற்பனை செய்யும் வரை தோட்டக்கலை மேம்பாட்டின் பல்வேறு அம்சங்களை ஒருங்கிணைத்து செயல்படுவது ஆகியவை இவ்வியக்கமுறை செயல்பாடுகளில் (mission mode) அடங்கும்.

ஊரகக் குடும்பங்களின் கூடுதல் வருமானத்தை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் வகையில் கால்நடை மேம்பாட்டில் இவ்வரசு தனி கவனம் செலுத்தும். கால்நடைகளுக்கு கோமாரி நோயினால் ஏற்படும் பாதிப்பு, அதனால் உழவர்களுக்கு ஏற்படும் பொருளாதார இழப்பு ஆகியவற்றை அறிந்து, இத்தொற்று நோயினால்





இயக்கம் (Fisheries Development Mission) ஒன்றை அமைக்க இவ்வரசு கருதியுள்ளது. இது மீன் உற்பத்திக்கும் ஏற்றுமதிக்கும் ஊக்கமளிப்பதாக அமையும். கடல்சார் சிறு மீனவர்களின் வருமானத்தை உயர்த்துவதற்காக கரையோர மீன் வளத்தை அதிகரிக்க தனி கவனம் செலுத்தப்படும். மீனளம் சார்ந்த துணைத் தொழில்களை ஏற்படுத்துவதன் மூலம் இச் சமுதாயத்தினருக்கு வேலைவாய்ப்பும், கூடுதல் வருமானமும் பெறுவதற்கான வாய்ப்புகள் உருவாகும். பயன்படுத்தப் படாத சுரங்கங்கள் மற்றும் குவாரிகள், நெல்வயல்–மீன் பண்ணைகள், மாதிரி மீன்பிடி கிராமங்கள் ஆகியவற்றில் மீன்வளத்தைப் பெருக்குவதற்கான புதுமையான திட்டங்களை வகுப்பதன் மூலம், உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளை இவ்வியக்கம் ஆராயும்.

2001ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் மிகக் கடுமையாக நிலவிய குடிநீர்ப் பிரச்சினை திறமையுடன் சமாளிக்கப் பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். இம் மாநிலத்தில் தொடர்ந்து நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறை பிரச்சினைக்குப் பல்முனை அணுகுமுறை மூலம் நீண்டகாலத் தீர்வைக் கண்டறிய இவ்வரசு மிகவும் ஆர்வம் கொண்டுள்ளது.

★ இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மழைநீரைச் சேகரிக்கும் பெரும் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அரசுக்குச் சொந்தமான அனைத்துக் கட்டடங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான கட்டடங்கள், புதிதாகக் கட்டப்படும் தனியார் கட்டடங்கள் ஆகியவற்றில் நிலத்தடி நீர் பெருக்கும் அமைப்புகள் இருக்கவேண்டியது கட்டாயமாக்கப்படும்.

★ சென்னையில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறை பிரச்சினையைச் சீர்படுத்துவதற்காக, வீராணம் திட்டம் என்னும் சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்–Iஐ செயற்படுத்துவதற்கு அரசு ஏற்கெனவே அனுமதியளித்துள்ளது. பாலாறு, கொற்றலையாறு, அடையாறு ஆகிய ஆறுகளின் குறுக்கே புதிய நீர்த் தேக்கங்கள் மற்றும் தடுப்பாணைகள் கட்டுதல், சென்னையைச் சுற்றிலுமுள்ள ஏரிகளை ஆழப்படுத்தி, தூர்வாருதல் ஆகியவை அடங்கிய சென்னை குடிநீர் வழங்கல்

பாதிக்கப்படக்கூடிய, இம்மாநிலத்திலுள்ள அனைத்து கால்நடைகளுக்கும், தடுப்பூசி போடக் கருதப்பட்டுள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கால்நடை – எருமை வளர்ப்பிற்கான புதிய திட்டம் ஒன்று ரூ.93 கோடி செலவில் செயற்படுத்தப்படும். கால்நடை பாதுகாப்பு மற்றும் கால்நடை–கோழி வளர்ப்பு வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு, தகுந்த சுய வேலைவாய்ப்புத் திட்டங்களை உருவாக்குவதன் மூலம், வேலைவாய்ப்பு பெறாத கால்நடை மருத்துவர்களின் பணியைப் பயன்படுத்திக் கொள்ள இவ்வரசு கருதியுள்ளது.

மிக நீண்ட கடற்கரையைக் கொண்ட தமிழகத்தில் மீன்வளத்துறை பெருமளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திறன் கொண்டுள்ளது. சுற்றுச் சூழலுக்கு ஏற்ற முறையில், கடல் மற்றும் உள்நாட்டு மீன் பிடிக்கும் பகுதியை அதிகரிப்பதன் மூலம், மீனள மேம்பாட்டு


பெருக்கத் திட்டம்– II வகுக்கப்பட்டு **2002–03**ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

★ மாநிலத்தில், குடிநீர்ப் பற்றாக்குறை நிலவும் மாவட்டங்கள் சிலவற்றின் ஊரகப் பகுதிகளுக்குக் குடிநீர் மற்றும் துப்புரவு வசதிகளை அளிக்கும் நோக்குடன், ரூ.**2,300** கோடி மதிப்பீட்டுச் செலவில், ''தமிழ்நாடு ஊரகப் பகுதிகளுக்கான குடிநீர் வழங்கல் – துப்புரவுத் திட்டம்'' என்ற புதிய திட்டம், மத்தியத் திட்டக் குழுவினால் இசைவளிக்கப்பட்டு, நிதியுதவி வேண்டி உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தற்போதுள்ள நடுத்தர மற்றும் சிறிய நீர்த் தேக்கங்களைத் தூர்வாரி, ஆழப்படுத்தும் பெருந்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, வெளி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும். பாசன வசதி மற்றும் மக்களின் குடிநீர் வசதி ஆகிய தேவைகளை நிறைவு செய்வதற்கேற்ப, நிலத்தடி நீர் அளவை உயர்த்துவதற்காக, புதிய தடுப்பாணைகள், கசிவு நீர்க் குட்டைகள் போன்றவைகளை அமைப்பதும் இத்திட்டத்தில் அடங்கும். ''தீபகற்ப ஆற்று நீர் இணைப்புத்'' திட்டத்தைச் செயல்படுத்த, மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும். இத்திட்டத்தில் முதற்கட்டமாக, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணார், குண்டார், காவிரி மற்றும் வைகை ஆகிய நதிகளை இணைக்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கோரப்படும். இவ்வாறு செய்வது, கடலில் வீணாகச் சென்றடையும் வற்றாத ஜீவ நதிகளின் நீர், உரிய வகையில் பயன்பாட்டுக்கு வருவதை உறுதிசெய்வதோடு, தமிழ்நாட்டிலுள்ள ஊரகப் பகுதிப் பொருளாதாரத்திற்கு ஊக்கம் அளிப்பதாகவும் அமையும். தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் பாசன ஏற்பாடுகளை மேம்படுத்தும் வகையில், பம்பா, அச்சன் கோயில் மற்றும் வைப்பார் ஆகிய நதிகளை இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துமாறு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்படும்.

மக்கள் அனைவருக்கும் தரமான மற்றும் குறைந்த செலவிலான சுகாதாரப் பணிகள் கிடைக்கச் செய்வதை உறுதி செய்தல், தனியார் துறை பங்கேற்பை ஊக்குவித்தல் ஆகியவை அடங்கிய, விரிவான சுகாதாரக் கொள்கை ஒன்றை உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது. நோயின்மையே, மக்களின் சுகாதாரத் தர உயர்விற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். மாநகர மருத்துவமனைகளில் அதிக எண்ணிக்கையிலான நோயாளிகளின் வருகையைத் தவிர்க்க இயலும் வகையில், புறநகர் மருத்துவமனைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த சிறப்புக் கவனம் செலுத்தப்படும். அடுத்த நிதியாண்டில் நகர்ப் பகுதிகளில் தொடக்கச் சுகாதார பாதுகாப்புக்கு அரசு தனி கவனம் செலுத்தும்.

ஆயுர்வேதம், சித்தா, யுனானி, அக்யூ பஞ்சர் சிகிச்சை முறை போன்ற மாற்று மருத்துவமுறை மேம்பாட்டில் தனியார் துறை பங்கேற்பை இவ்வரசு ஊக்குவிக்கும். மாவட்டங்களில் மாற்று மருத்துவமுறைகளுக்காக தற்போதுள்ள அடிப்படை வசதிகள் வலுப்படுத்தப்படுவதோடு, அவை இல்லாத இடங்களில்



புதிய வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

மகளிருக்கான ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்களை அமைப்பதற்கான இவ்வரசின் திட்டம் நமது மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. வெளி நிதியுதவியுடனும், தனியார் துறை பங்கேற்புடனும், சென்னையிலும், ஏனைய நகர்ப்புறப் பகுதிகளிலும் கட்டண துப்புரவு வளாகங்களைக் கட்டி பராமரிக்க முக்கியத்துவம் அளிக்கப்படும். இம்மாநிலத்தின் பெரியநகர்ப் பகுதிகளிலும் ஒருங்கிணைந்த முக்கிய மையங்களிலும் பாதாள சாக்கடை வசதிகள் அமைப்பதற்குப் புதிய திட்டம் ஒன்று செயற்படுத்தப்படும்.

2002–2003ஆம் ஆண்டில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதும் வறுமையை ஒழிப்பதும் இவ்வரசின் முதன்மை நோக்கங்களாக அமையும். தரமான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம், வேளாண்மை மற்றும் தொழில் துறைகளில் வளர்ச்சியை விரைவுபடுத்தி, அதன் மூலமாக, மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். நமது சமுதாயத்தில், குறிப்பாக ஊரகப்பகுதிகளில் ஏழ்மை நிலையிலும், ஒடுக்கப்பட்ட நிலையிலும் உள்ள மக்கள் பின்னடைவு கொள்ளாமலிருப்பதை உறுதிசெய்யும் வகையில், வறுமையை ஒழிப்பதில் தன்னுடைய முதன்மையான மற்றும் நேரடியான பங்கை இவ்வரசு நிலைநிறுத்தும். 2006ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குப் பிறகு, எந்தவொரு குடும்பமும் வறுமைக் கோட்டிற்குக் கீழில்லை என்பதை உறுதி செய்வதே இவ்வரசின் நோக்கமாகும்.

ஊரகப் பகுதிகளில் போதிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது, ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்திலும் அவர்களது பொருளாதாரத்திலும் பல்வகை மாற்றங்களை ஏற்படுத்தும் என்பது ஒப்புக்கொண்ட கருத்தாகும். எனவே, ஊரக வளர்ச்சி, தொடர்ந்து இவ்வரசின் மிக உயர்ந்த முன்னுரிமைகளில் ஒன்றாக இருக்கும். வேளாண் பொருள்களின் பயன் தரத்தைக் கூட்டும் நோக்கத்தோடு, ஊரகப் பகுதிகளில் சிறிய மற்றும் குடிசைத் தொழில்களாக அமைந்துள்ள வேளாண் தொழில்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படும். இதனால், உழவர்களுக்கு ஆதாயம் தரத்தக்க வருவாய் கிடைப்பது மட்டுமன்றி, வேளாண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதும் உறுதி செய்யப்படும்.

ஊரக வளர்ச்சியைப் பொறுத்தவரை, அப்பகுதிகளிடையே தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிகள் அமைந்திருப்பது மிக முக்கியமான தேவையாகும். ஐநூறுக்கு அதிகமான மக்கள் தொகை உள்ள குடியிருப்புகளைக் கொண்ட ஊரகப் பகுதிகளிலும் 2004ஆம் ஆண்டுக்குள் அனைத்து பருவ காலத்திற்கேற்ற சாலை இணைப்பு வசதிகள் அளிக்க இவ்வரசு தீவிரமாக முயலும்.

'வறுமை ஒழிப்பு' என்பது, வறுமைக்கோட்டிற்குக் கீழேயிருப்போருக்கு, பிழைப்பிற்கான வருமானம், உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றை வழங்குவது மட்டும் ஆகாது. வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களுக்கு, வேளாண்மை, தொழில் மற்றும் சேவைத் துறைகளில் பயனுள்ள வேலை வாய்ப்பு வசதிகளைச் செய்துகொடுப்பதும் இதில் அடங்கும். வேளாண்மைத் துறையில்லாத பிற துறைகளில் குறிப்பாக கைத்தறிகள், கைத்திறத் தொழில்கள், பட்டுப்புழு வளர்ப்பு, ஏனைய ஊரகத் தொழில் துறைகளில் வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்க இவ்வரசு முயற்சி மேற்கொள்ளும். கிராம கைவினைஞர்களின் திறமைகளை மேம்படுத்துவதிலும் அவர்கள் தம் உற்பத்திப் பொருள்களின் மதிப்பை உயர்த்துவதிலும் மேற்கொள்ளப்படும் தொடர் முயற்சிகள் வாயிலாக அவர்களது திறமைகுன்றாதவாறு பாதுகாக்கப்படுவர். இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நல்ல வருவாய் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், உற்பத்திப் பொருள்களை சிறந்த முறையில் விற்பனை செய்வதற்கான வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இம் மாநிலத்தில் தயாரிக்கப்பட்ட பொருள்களின் ஏற்றுமதிக்கு ஊக்கம் அளிக்கும்வகையில் மாவட்ட அளவில் ஏற்றுமதி வழிகாட்டி பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

வேளாண்மை, தொழில் மற்றும் சேவைத் துறைகளை நவீனமயமாக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் நகர்ப்புற மற்றும் ஊரக இளைஞர்களுக்காக ஆதாயம் தரத்தக்க புதிய வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதுடன், சுய வேலைவாய்ப்பு வளமும் அதிகரிக்கும். நீடித்த, திறன்வாய்ந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கவல்ல வேளாண் தொழிற் பிரிவு ஒன்றாவது இம்மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ஏற்படுத்தப்படும்.

அரசுக் கொள்முதல்களில் சிறு தொழில்கள் 1997 வரை அனுபவித்துவந்த விலை மற்றும் கொள்முதல் முன்னுரிமைகளை, மீண்டும் வழங்கி, தனது தேர்தல் உறுதிமொழியை இவ்வரசு நிறைவேற்றியுள்ளது. இந்த முடிவு, இம்மாநிலத்தில் தொய்வு நிலையிலுள்ள சிறுதொழில்கள் உடனடியாக மீண்டும் தொடங்கி புத்துயிர்பெற பெரிதும் உதவும் என இந்த அரசு உறுதியாக நம்புகிறது. இத்துறையில், தொழில்கள் வளர்ச்சியடைவதற்குத் தேவையான சூழல்களை ஏற்படுத்திக் கொடுக்க, இயன்ற முயற்சிகளை இவ்வரசு நிச்சயமாக மேற்கொள்ளும். அதே நேரத்தில், உலக மயமாக்கல் மற்றும் தொழில் போட்டிகள் மலிந்துள்ள இக்காலக் கட்டத்தின் பெருந்தாக்கங்களைத் தொழில்

முனைவோர் உணர்ந்து, செயல்பட வேண்டியதும் அவசியமாகும். செலவுக்கேற்ற பயனளிக்கும் வகையில் பொருத்தமான தொழில்நுட்ப உத்தியைப் பயன்படுத்தியும், சந்தையில் போட்டியிடும் வகையில் பொருட்களின் தரத்தை உயர்த்தியும், சிறுதொழில் நிறுவனங்கள் தங்களுடைய சொந்தத் தொழில் பிரிவுகளை சீரமைத்துக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு, சிறந்த அறிவாற்றல் மற்றும் திறமையைத் தன்னகத்தே கொண்ட பெருமையை உடையது. இந்த ஆற்றல்களில் பெருமளவு பயன்படுத்தப்படாமலுள்ளன. வெவ்வேறு வள ஆதாரங்களிலிருந்து உருவாகும் புதுமையான திட்டங்களைப் பரிசீலிக்க சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள் துறை (Department of Special Initiatives and Projects) ஒன்று ஏற்படுத்தப்படும். இத்துறை மாண்புமிகு முதலமைச்சரின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயல்படும்.

பொருளாதாரத்தின் முதன்மை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைத் துறைகளில் உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தங்களின் தாக்கம் குறித்து இவ்வரசு மிகவும் கவலை கொண்டுள்ளது. குறிப்பாக வேளாண்மை, துணித் தொழில் துறை மற்றும் சிறு தொழில் துறைகளில் உலக வர்த்தக அமைப்பின் ஆதரவின் கீழ் வர்த்தக தாராளமயமாக்கலின் விளைவுகளை ஆய்வு செய்ய, உலக வர்த்தக அமைப்புப் பிரிவு ஒன்று அமைக்கப்படும். வர்த்தகம், வேளாண்மை, கல்வி ஆகிய துறைகளைச் சேர்ந்த வல்லுநர்களைக் கொண்ட இப்பிரிவு தொடர்ந்து செயல்பட்டு, ஏற்றுமதி மற்றும் வர்த்தகம், வணிகம் ஆகியவற்றின் அளவைப் பெருக்கும் வகையில் உலக வர்த்தக அமைப்பிடமிருந்து உயரளவு அனுகூலங்களைப் பெறும் உத்திகளை வகுக்கும். ஒப்புநோக்கு அனுகூலங்களை நாம் பயன்படுத்திக் கொள்ளவும், நம்முடைய விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோரின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டும் உலக வர்த்தக அமைப்பின் கடப்பாடுகள் அடிப்படையில் முடிவு எடுக்கும்போது மத்திய அரசை அனைத்து மாநிலங்களையும் கலந்தாலோசிப்பதை உறுதி செய்வோம்.

தொழில், வணிகம், வேளாண்மை ஆகியவற்றின் நீடித்த வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். தமிழ்நாடு மின் வாரியத்தின் நலிவடைந்த நிதி நிலை குறித்து இவ்வரசு மிகவும் கவலை கொண்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். மின் துறையில், பெரும் சீர்திருத்தங்கள் குறித்து மாநில அரசுக்கும், மத்திய அரசுக்குமிடையே உடன்படிக்கை ஒன்று 9.1.2002 அன்று கையொப்பமிடப்பட்டுள்ளது. மாநில மின் ஒழுங்குமுறை ஆணையத்தின் செயல்பாட்டை விரைவுபடுத்த, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொது போக்குவரத்து கட்டமைப்பு, அரசின் உயரிய முன்னுரிமை பெறும் மற்றுமொரு முக்கிய கட்டமைப்பு வசதியாகும். போக்குவரத்துத் துறையில்



தெரிந்தெடுக்கப்பட்ட பேருந்து வழித்தடங்களையும், சேவைகளையும், பணிகளையும், படிப்படியாகத் தனியார் மயமாக்க இவ்வரசு முடிவுசெய்துள்ளது. நிதி இடர்ப்பாட்டில் சிக்கியுள்ள அரசுப் போக்குவரத்து நிறுவனங்களின் ஒட்டுமொத்த நிருவாகச் சீரமைப்பு மற்றும் போக்குவரத்தில் தனியார் துறை பங்கேற்பு ஆகியவை இத்துறையில் ஆரோக்கியமான போட்டிகளையும் அதன்மூலம் பணித் திறனையும் ஊக்குவிக்கும்.

சேதுசமுத்திரம் திட்டத்தை விரைவில் செயல்படுத்துமாறு தமிழ்நாடு நீண்டகாலமாக வலியுறுத்திவருகிறது. தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் இத்திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

பெரும் சவாலாக அமைந்துள்ள 'அனைவருக்கும் இலவச தொடக்கக் கல்வி' என்ற குறிக்கோள் இன்னும் கனவாகவே இருந்து வருகிறது. ''அனைவருக்கும் தொடக்கக் கல்வி'' என்ற குறிக்கோளை எய்தும் பொருட்டு, 2003ஆம் ஆண்டுக்குள் பள்ளியில் குழந்தைகளின் சேர்க்கையை 100 சதவீதம் கொண்டுவரவும், 14 வயது வரையில் அவர்கள் அனைவரும் கல்வி பெறுவதற்கு வசதிசெய்யவும் இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. ஒரு கி.மீ. சுற்றளவுக்குள் பள்ளிகளே இல்லாத குடியிருப்புகளில் உள்ள குழந்தைகள் எளிதில் கல்வி கற்க ஏதுவாக திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

ஆதாயம் தரத்தக்க வேலைவாய்ப்பு பெறுவதற்கு அவசியமான பயிற்சி தேவைப்படும், வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்களைச் சார்ந்த சிறுவயதினருக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் முழுநேர தொழில் பயிற்சி பள்ளிகளை ஏற்படுத்த அரசு முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பள்ளிகளில் அடிப்படைக் கல்வி மற்றும் வேளாண்மை, தோட்டக்கலை, கட்டுமானம், தச்சுவேலை, குழாய்வேலை, மின்பணிகள் முதலிய வாழ்க்கைத் தொழில் முனைப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும். இம்மாணவ மாணவியருக்கு உணவு, உடை மற்றும் உறைவிட வசதிகள் அளிக்கப்படும்.


''ஆரோக்கியமான உடல் நலத்தில் ஆரோக்கியமான மனவளம்'' இதுவே அனைத்து கல்வித் திட்டங்களுக்கு அடிப்படையாக அமையும். இந்நோக்கத்தை எய்துவதற்காக, அடுத்த கல்வியாண்டிலிருந்து அனைத்து உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் இளைஞர் விளையாட்டுத் திறன் திட்டம் என்னும் புதிய திட்டம் கொண்டு வரப்படும். இத்திட்டத்தின்கீழ் பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்டு, உடல் வலிமை அல்லது கல்வி தொடர்பான ஏதேனும் ஒன்றிலாவது கூடுதல் திறமை பெறுவது கட்டாயமாக்கப்படும். இதனுடன், ஒவ்வொரு பள்ளியிலும் குறைந்தது ஒரு விளையாட்டிலாவது திறமையை வளர்க்க வேண்டியது அவசியமாக்கப்படும். இளம் திறமையாளர்களைக் கண்டறிய ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும்.

இவ்வரசு ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்குத் தற்போது பின்பற்றும் வெளிப்படையான கலந்தாய்வு முறை இலஞ்ச ஊழலை ஒழித்துள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடாகும். ஆசிரியர்களிடையே இந்தமுறை நல்ல வரவேற்பைப் பெற்றிருப்பதுடன், நாடு முழுவதும் பாராட்டையும் பெற்றுள்ளது. இக்கொள்கையைத் தொடர்ந்து செயல்படுத்துவதுடன், உபரியாக உள்ள ஆசிரியர்களை தேவைப்படும் பள்ளிகளுக்கு மாற்றவும் இவ்வரசு நடவடிக்கை எடுக்கும்.

இந்தியாவிலேயே மிகவும் விரும்பத்தக்க சுற்றுலா மையங்களில் ஒன்றாகத் தமிழ்நாட்டை உருவாக்க, இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. நடப்பாண்டு வரவு–செலவுத் திட்டத்தில், இத்துறைக்கான நிதியொதுக்கத்தைக் கணிசமான அளவு அதிகரிப்பதோடு, சுற்றுலா வளர்ச்சி நடவடிக்கைகளில் தனியார் துறையினரும் பங்கேற்கும்வகையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாமல்லபுரத்திலும் கன்னியாகுமரியிலும் உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான பெருந் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நமது மாநிலத்தின் பெருமைவாய்ந்த பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பிரபலப்படுத்தும் வகையில், உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே கிராமச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு இவ்வரசு முழு முயற்சி மேற்கொள்ளும்.

அமெரிக்க நாட்டு மக்களின் சுதந்திர–மக்களாட்சி உணர்வுகளை அங்குள்ள சுதந்திர தேவி சிலை பிரதிபலிப்பது போல, சாதி, மதம், பண்பாட்டு ஒற்றுமையைச் சித்தரிக்கும் சிலையுடன் கூடிய அமைதிப் பூங்கா ஒன்று சென்னை மாநகரை ஒட்டி அமைக்கப்படும். இவ்வளாகத்தில் பிரமாண்டமானதொரு கருத்தரங்கம், அனைத்து சமயச் சின்னங்கள் பொறிக்கப்பட்ட பெரியதொரு தியான மண்டபம் பல்வேறு சமயங்கள் பற்றிய புத்தகங்களைக் கொண்ட தனியொரு நூலகம் மற்றும் புத்தக மையம் ஆகியன இடம் பெற்றிருக்கும். இத்திட்டம், உலக அமைதியை எடுத்துரைக்கும் கருத்துக் கூடமாகவும், இந்தியர்களும் வெளிநாட்டவர்களும் வருகை தரக்கூடிய ஒரு சுற்றுலா மையமாகவும் இருக்கும்.

சென்னையில் பெரும் திறந்த வெளி சாக்கடையாக தற்போது மாறிவிட்ட கூவம் ஆற்றைத் தூர்வாரி, ஆழப்படுத்தி, தடையின்றி தண்ணீர் செல்லும் வகையில் மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. இருகரைகளிலும் பூந்தோட்டங்கள் அமையப்பெற்று மாசுக்கேடின்றி



உள்நாட்டு படகுப் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் இதை மாற்றி அமைப்பதற்கு விரிவான திட்டம் ஒன்று வகுக்கப்படும்.

அன்றாட நிருவாகத்தில் தமிழ்மொழி பயன்பாட்டை அதிகரிக்க இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய தமிழ்–ஆங்கில இருமொழிக் கொள்கைக்குத் தொடர்ந்து இவ்வரசு ஆதரவளிக்கும். மாநிலத்திலுள்ள அனைத்து பள்ளிகளிலும் பாடத் திட்டங்களில் தமிழ்மொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுவது உறுதி செய்யப்படும்.

தெரிந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் நன்கொடையாளர்கள் பங்கேற்புடன் பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கும் ''அன்னதானத் திட்டம்'' ஒன்று தொடங்கப்படும். இதற்காக பக்தர்கள் காணிக்கை செலுத்துவதற்கு வசதியாக இக்கோவில்களில் தனி உண்டியல் ஒன்று வைக்கப்படும். தொடக்கத்தில், ஆலய நிதியுடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்படும். இத்தகைய கோயில்கள் அனைத்திலும் குழந்தைகளுக்கு ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறியைப் போதிப்பதற்காக ஞாயிறுதோறும் குறைந்தது ஒரு மணி நேரம் வகுப்புகள் நடத்தப்படும்.

நேற்றைய தினம் உலகம் முழுவதும் மகளிர்தினம் கொண்டாடப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். மகளிர் கல்வி மற்றும் மகளிர் தொடர்பான கல்வி ஆராய்ச்சி குறித்து ஊக்கமளிக்கும் பொருட்டு கொடைக்கானல் பகுதியிலுள்ள அனைத்து மகளிர் கல்லூரிகளையும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்துடன் இணைக்கக் கருதப்பட்டுள்ளது. அடுத்த இரண்டாண்டுகளில் இப்பல்கலைக் கழகத்தில் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

வளர்ச்சித் திட்டங்களை வகுப்பதில், மகளிரைப் பெருமளவில் பங்கேற்கச் செய்ய இவ்வரசு ஆர்வம் கொண்டுள்ளது. இதனால், அவர்கள் கணிசமான அளவுக்கு இத்திட்டங்களில் பங்கு கொள்வதுடன், இத்திட்டங்களிலிருந்து கிடைக்கும் பயனையும் பெற இயலும். ஏற்கெனவே உறுதியளித்தவாறு, மாநில அரசின் அனைத்து சட்டபூர்வமான மற்றும் சட்டம்சாரா குழுக்களில் மகளிருக்கு **33** சதவீத இட ஒதுக்கீடு செய்வதற்குத் தேவையான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஐந்தாண்டு கால அளவில் பல்வேறு சுயவேலைவாய்ப்புத் தொழில்களில் **5** இலட்சம் மகளிர் தொழில் முனைவோருக்குப் பயிற்சியளிக்கும் பெருந்திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் தொடர் நடவடிக்கையாக, பொருளாதார உரிமைகளைப் பெறும் வகையில், அவர்களுக்காக இம்மாநிலத்தில் சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள் பெருமளவில் செயற்படுத்தப்படும். கடன் வழங்கு நிறுவனங்கள் மூலமாக நிதியுதவி அளித்தல், தொழில்நுட்ப உதவி மற்றும் உற்பத்தியான பொருட்களை விற்பனை செய்வதற்கு வசதி

செய்து கொடுத்தல் ஆகியன இத்திட்டங்களில் அடங்கும்.

நமது சமுதாயத்தில் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் குழந்தைகள், உடல் ஊனமுற்றோர், மூளை வளர்ச்சி குன்றியோர், முதியோர் போன்றவர்களின் நலனிலும் தனிக் கவனம் செலுத்தப்படும். அநாதை இல்லங்கள் அமைப்பதற்கும், முதியோர், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்றோர் ஆகியோருக்கு காப்பகங்கள் அமைப்பதற்கும், தெருவில் சுற்றித் திரியும் குழந்தைகளுக்கு இரவில் தங்க இடவசதி செய்து கொடுப்பதற்கும், தனியார் துறையை அரசு ஊக்குவிக்கும். மேலும், இலாப நோக்கின்றி இத்திட்டத்தை மேற்கொள்ள முன்வருவோருக்கு இலவசமாக நிலம் அளிக்கவும் அரசு முன்வரும்.

பழங்குடியின மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டி அளிக்கும் புதிய திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது என்பது மிகவும் மனநிறைவளிக்கிறது. அடுத்த ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் உள்ளிட்ட ஒடுக்கப்பட்ட பிரிவினரின் பொருளாதார, சமூக மேம்பாட்டை முக்கிய நோக்கமாகக் கொண்ட புதிய பல்கலைக் கழகம் ஒன்று வேலூர் நகரில் ஏற்படுத்தப்படும். இப்பல்கலைக் கழகத்திற்கு தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெயர் சூட்டப்படும். இப்பல்கலைக் கழகம் சமூக மாற்றத்திற்கு ஒரு தன்னிகரற்ற முன்னோடி



ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகிய பிரிவினருக்குத் தக்க உரிமைகளை அளித்தல் மற்றும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இவ்வரசு உணர்ந்துள்ளது. கல்வி, பொருளாதார வளர்ச்சி மற்றும் அடிப்படை வசதிகள் அளித்து இச்சமுதாயத்தினரின் நலன் பேணுவதற்கு தகுந்த உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வசதி வாய்ப்பற்ற இப்பிரிவினருக்கு சுயவேலை வாய்ப்பு அளிப்பதிலும் முன்னுரிமை அளிக்கப்படும். அரசுப் பள்ளிகளில் பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கும் ஆதி திராவிட, முயற்சியாக இருக்கும்.

வரவு–செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்படவிருக்கும் "புதிய தொழில் கொள்கை", ஒளிவு மறைவற்றதாகவும் தொழில்முனைவோர் நேயமிக்கதாகவும் அமையும். இக்கொள்கை, வெளிநாட்டு, உள்நாட்டு தனியார் முதலீடுகளை ஈர்ப்பதற்கு முக்கியத்துவம் அளிப்பதாக இருக்கும். ஜவுளித்துறை மிக முக்கியமான வேலை வாய்ப்பு ஆதாரம் உள்ள ஒரு துறை ஆகும். பருத்தி சாகுபடியில் உற்பத்தித்திறனை பெருக்குதல், நெசவு முறைகளில் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது உள்ளடக்கிய சாகுபடி முதல் விற்பனை

வரையான தொடர்புகளைப் பெருக்குவதன் மூலம் இத்துறைக்கு ஊக்கமளிக்கப்படும்.

அறிவியல் துறையில் உயிரி தொழில்நுட்பம் ஒரு முக்கிய அம்சமாக உருவாகி வருவதைக் கருத்தில்கொண்டு, அரசு இத்துறைக்கு புதிய ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும். மக்களின் சுகாதார நிலையை மேம்படுத்துவதற்குத் தேவையான முதலீடுகளை உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்பத் துறையில் முன்னணியிலுள்ள நிறுவனங்களிடமிருந்து ஈர்க்கவும், அத்தகைய முதலீடுகளைப் பெருக்குவதற்கு உகந்த சூழ்நிலைகளை உருவாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வளம் மற்றும் வேலைவாய்ப்பினை அனைத்து வகையிலும் பெருக்குவதில், இன்றைய உலகில் தகவல் ஒரு முக்கிய காரணியாக விளங்குகிறது. தகவல் தொழில்நுட்பம் தனித்தும் அதனைச் சார்ந்த ஏனைய பணிகளின் வாயிலாகவும் உலக முழுவதும் பொருளாதார வளர்ச்சியின் உந்துவிசையாக அமைந்துள்ளது. நாட்டிலேயே ஒப்புயர்வற்ற நிலையை எய்தும் பொருட்டு தகவல் தொழில்நுட்பத் துறைக்கும் இதனைச் சார்ந்த பிறபணிகளின் வளர்ச்சிக்கும் புத்துயிர் ஊட்டுவது இந்த அரசின் நோக்கமாகும். இதை உறுதி செய்யும் வண்ணம் இவ்வரசின் தகவல்–தொழில்நுட்பக் கொள்கையில் பின்வருவன அடங்கும்.

அ) நகர்ப்பகுதிகளில் கணினி சேவை மையங்கள் (Call Centres) ஏற்படுத்துதல், கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் மேம்படுத்துதல், ஊரகப் பகுதிகளிலும், ஓரளவு நகர்சார்ந்த பகுதிகளிலும் வசிப்பவர்களுக்காக தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஏனைய பணிகள் உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம், வேலை வாய்ப்பு மற்றும் வருமானத்தைப் பெருக்குதல். குறிப்பாக ஊரகப் பகுதிகளில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தரமான தகவல் தொழில்நுட்பப் பணி கிடைப்பதற்கு ஊக்கமளித்தல்.

ஆ) துறைகளுக்குள்ளும் துறைகளுக்கிடையேயும் நிருவாகப் பணிகளில், தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்காக, அனைத்து அரசுத் துறை மற்றும் முகவரமைப்புகளோடு ஒருங்கிணைந்த செயல்பாடுகள்.


இ) அனைத்துவகை வளர்ச்சிக்காக வேளாண், வர்த்தகம் மற்றும் தொழில்துறைகளோடு ஒருங்கிணைந்த தொடர்புகளை உருவாக்குதல்.

ஈ) பொது மற்றும் தனியார் துறை பங்கேற்புடன் இத்துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான இன்னபிற வாயில்களை கண்டறிதல்.

"தாமதிக்கப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதிக்கு ஒப்பாகும்'' என்ற முதுமொழியைக் கருத்தில்கொண்டு, வழக்குகளை விரைவாகவும், நன்முறையிலும் தீர்வு செய்வதற்காக இவ்வரசு, நீதித்துறையுடன் இணைந்து செயலாற்றும். 49 விரைவு நீதிமன்றங்கள் (Fast Track Courts) தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டு அவை அனைத்தும், செயல்படத் தொடங்கிவிட்டன. இந்த நீதிமன்றங்களுக்கு பணியாளர்கள் உட்பட, தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் அளிக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம், மாவட்ட நீதிமன்றங்களில் நீண்டகாலமாக நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை கணிசமான அளவிற்குக் குறைவதற்கும், மக்களுக்கு விரைவில் நீதி கிடைப்பதற்கும் வழி வகுக்கப்படும்.

மக்களின் பெருகிவரும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற, இவ்வரசு பெரும் பொறுப்புகளை ஏற்கவேண்டியுள்ளது. மாநிலத்தின் ஒட்டுமொத்த நலனைக் கருத்தில்கொண்டு, பொருளாதாரத் துறையைப் பொறுத்தவரையில், சில கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டிய இக்கட்டான நிலையில் இவ்வரசு உள்ளது. வீண் செலவைக் குறைத்தல், ஏழை எளியோருக்கு மட்டும் பயனளிக்கக்கூடிய வகையில் உதவித் திட்டங்களை செயல்படுத்துதல், பொதுத் துறை நிறுவனங்களை பொறுப்புணர்வோடு இயங்கச் செய்தல், ஒரு சில நிறுவனங்களில் அரசு முதலீட்டைத் திரும்பப்பெற்று சீரிய முறையில் மறு முதலீடு செய்தல், மக்களின் வரிப்பணத்தை வீணாக்கும் நிறுவனங்களை மூடிவிடுதல் ஆகியவை இதில் அடங்கும். தமிழக அரசு சீரமைப்பு நோக்கமற்ற அரசு என்ற தோற்றம், கடந்த சில ஆண்டுகளில் உருவாக்கப்பட்டுள்ளது. இதை மாற்றி ஏழை எளியோருக்கு அதிக அளவில் பாதிப்பு ஏற்படாத வகையில் மாநில அரசின் நிதிநிலையை மீண்டும் சரியான வழித் தடத்திற்கு இவ்வரசு கொண்டுவரும் என்ற தெளிவான செய்தியை அனைத்து நிதி நிறுவனங்களுக்கும் தெரிவித்துக் கொள்ள இந்த அரசு விரும்புகிறது.

பதினொன்றாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், மத்திய அரசு அமைத்த நிதிநிலைச் சீரமைப்பு வசதி நிதியத்திலிருந்து நிதியைப் பெற ஏதுவாக, நடுத்தர கால நிதிநிலைச் சீரமைப்புத் திட்டம் குறித்து மத்திய அரசுடன் உடன்படிக்கை ஒன்றில் மாநில அரசு கையொப்பமிட உள்ளது. சீரமைப்புத் திட்டங்கள் வெற்றியடைய வேண்டுமாயின், மத்திய அரசு, மாநிலங்களுக்குப் போதுமான ஆதரவு அளிக்க வேண்டும். உண்மையான கூட்டாட்சிக் கோட்பாடுகளின்படி, நிதிப் பற்றாக்குறை உள்ள மாநிலங்களுக்கு, அதிக நிதியுதவி அளிக்க மத்திய அரசு முன்வரவேண்டும். அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தி, சேவைத் துறையின் மீதும் வரி விதிக்க மாநிலங்களுக்கு அதிகாரம் அளிக்குமாறு இவ்வரசு, மத்திய அரசை வலியுறுத்தும்.



இம்மாநிலத்தின் வளர்ச்சிக்கு அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் ஆற்றிவரும் மதிப்புவாய்ந்த பணியை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது. தற்போதைய நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக, அவர்கள் அளித்துவரும் ஒத்துழைப்புக்கு நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செலவைக் குறைக்கவும், நிருவாகத் திறனை மேம்படுத்தவும், அரியலூர் மாவட்டத்தைப் பெரம்பலூர் மாவட்டத்துடன் இணைக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. விரிவுபடுத்தப்பட்ட பெரம்பலூர் மாவட்டத்தின் தலைமையிடம் பெரம்பலூராக இருக்கும். இருப்பினும், சில முக்கியமான மாவட்டநிலை அலுவலகங்கள் அரியலூரில் செயல்படும்.

பத்திரப் பதிவு, வருவாய், போக்குவரத்து போன்ற பல அரசுத் துறைகளில் கணினி வழி நிருவாகம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இக் கணினி வழி நிருவாகம் மற்ற துறைகளுக்கும் விரிவுபடுத்தப்படும்; அனைத்து மாவட்டங்களிலும் தொலைக்காட்சி வழி கருத்தாய்வு (Video Conferencing) வசதி அளிக்கப்பட்டு, நிருவாகத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் பயன்படுத்தப்படும். தற்போதுள்ள அரசுத் திட்டங்களை மதிப்பிடவும், கொள்கை மாற்றங்கள் மற்றும் புதிய கொள்கைகள் தொடர்பான கருத்துக்கள் அவ்வப்போது தெரிவிக்கவும், வேளாண்மை, தொழில், கல்வி, சமூகநலம் போன்ற முக்கிய துறைகளுக்கு, ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படும். இக்குழுக்களில் தனியார் துறை, பொதுமக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளிலிருந்து வல்லுநர்கள் இடம்பெறுவர்.


மாவட்ட அளவில் அரசின் அனைத்து முக்கிய திட்டங்களையும் விரைந்து செயல்படுத்தும் பொருட்டு, அரசு செயலாளர்களை, கண்காணிப்பு அதிகாரிகளாக நியமனம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு செயலர் பொறுப்பேற்பார். மேலும், இத்திட்டங்களை செயல்படுத்துவதில் தலைமையேற்கும் வகையில், ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்களுக்கு அமைச்சர் ஒருவர் பொறுப்பேற்பார்.

இவ்வாண்டில் அரசு எடுக்கக் கருதியுள்ள கொள்கை நெறிமுறைகள் பற்றி என் உரையில் உங்களுக்குக் குறிப்பிட்டுள்ளேன். மக்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்து, தங்கள் பிரதிநிதிகளாக உங்களை இம்மாமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த அவையில் நடைபெறும் உங்களது விவாதங்கள், மாநிலத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த உரியவாறு திட்டமிடுதலுக்கும் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கும், அரசுக்கு உதவியாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

*– மேதகு ஆளுநர் அவர்கள்*
*சட்டமன்றப் பேரவையில்*
*9–3–2002 அன்று ஆற்றிய உரை.*

• • •

# முதல்நிலை நோக்கி முன்னேறும் தமிழகம்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

அன்பிற்குரிய தமிழக மக்களுடைய நல்லெண்ணத்தின் ஓர் அங்கமாகத் திகழும், ஆண்டிபட்டி தொகுதியைச் சார்ந்த வணக்கத்திற் குரிய பெரியோர்களும், என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களும், எனது உயிரினும் மேலான எனதருமை உடன்பிறப்புகளும், மற்றும் ஏனைய வாக்காளப் பெருமக்களும், தங்களது அமோக ஆதரவை எனக்கு நல்கி, ஆண்டிபட்டி சட்டமன்ற இடைத் தேர்தலில், என்னை மகத்தான வெற்றி பெறச் செய்து, சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து, இந்த அவையில் தமிழகத்தின் முதலமைச்சராக வீற்றிருக்கச் செய்ததற்காக, முதற்கண், தமிழக மக்களுக்கு இந்த நேரத்தில், எனது நெஞ்சார்ந்த, உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**6.3.1967** அன்று, தமிழக முதல்வர் பதவியை ஏற்றுக் கொண்ட பின், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் சில பகுதிகளை, இங்கே நினைவு கூர்கிறேன்.

*மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் 9.3.2002 அன்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15.3.2002 அன்று அளித்த பதிலுரை*

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள் :

''இந்நாட்டு மன்னர்களாகிய நீங்கள் பிறப்பித்த ஆணையினை ஏற்றுக் கொண்டு, அவர்கள் சட்டமன்றத்தில் அமர்ந்துள்ளனர். அவர்களின் துணையுடன் நானும், என்னுடன் உள்ள மற்ற அமைச்சர்களும், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளோம். **மன்னர்களாகிய உங்களிடம், எமது வணக்கத்தையும், நன்றி அறிதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**''நான் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பது தமிழ்நாட்டில் – வழிவழி வந்த வல்லவர்கள், வித்தகர்கள் நிரம்பிய தமிழ்நாட்டில் – காவேரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை போன்ற ஆறுகளும், அருவிகளும், பண் பாடி வளமளித்திடும் தமிழ்நாட்டில் – பாட்டு மொழியாம் தமிழ் மொழியுடன் இழைந்துள்ள, பண்பாடு சிறந்திடும் தமிழ்நாட்டில் –பாருக்குள்ளே நல்ல நாடு என்று பாவலர் கொண்டாடிடும் தமிழ்நாட்டில்.**

''உங்களுக்காக நான், என்பது மட்டுமல்ல நண்பர்களே–உண்மையைச் சொல்லுவதானால், உங்களால் நான் – அதனை உணருகிறேன். மறந்திடுபவனும் அல்ல நான்''

என்றார் பேரறிஞர் அண்ணா.

அண்ணா அன்று சொன்னதையே, இன்று நான், தமிழக மக்களுக்கு கூற விரும்புகிறேன்.

''உங்களுக்காக நான் என்பது மட்டுமல்ல – என் ஆருயிர்த் தமிழக மக்களே – உண்மையைச் சொல்லுவதானால், உங்களால் நான் – அதனை உணருகிறேன். மறந்திடுபவனும் அல்ல நான்'' என்று, இந்தப் பேரவையின் வாயிலாக, தமிழக மக்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நான் தேர்தல் பிரச்சாரத்தின் போது, ஜாதி, மத வேறுபாடுகளை எல்லாம் கடந்து, தமிழகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்காக உழைப்பேன், என்று சூளுரைத்திருந்தேன். தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக ஆக்குவேன், என்று உறுதி கூறியிருந்தேன். அந்த வகையில் அமைந்தது தான், மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் இந்த உரை. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு, எனது பதிலுரையைத் துவங்கும் இவ்வேளையில், ஆயிரமாயிரம் எண்ண அலைகள், என் மனதில் அலைமோதுகின்றன.

இந்த உரை, இதற்குக் காரணமான தேர்தல் வெற்றி, அதற்குக் காரணமான என் அன்புக்குரிய தமிழினம், இவற்றை நினைக்கிற இதே வேளையில், வஞ்சகர்களின் சூழ்ச்சிகள், பழிகாரர்கள் வெட்டிய படுகுழிகள், கொச்சை மனிதர்கள் கூறிய அவதூறுகள், வீணர்கள் ஏற்படுத்திய அவமானங்கள், கோயபல்சுகளின் அவதூறு பிரச்சாரங்கள், சகுனிகளின் ஜோடிக்கப்பட்ட வழக்குகள் ஆகியவையும், என் மனக் கண்ணில் நிழலாடுகின்றன.

எந்த அரசியல் தலைவரும் சந்தித்திராத துன்பங்களையும், துயரங்களையும், சோதனை களையும், வேதனைகளையும், போராட்டங்களையும், நான் சந்தித்த பின், மீண்டும் இந்தச் சட்ட மன்றத்தில் நின்று கொண்டிருக்கிறேன்.

"எந்த நாட்டிலும் இந்த அநீதிகள்
ஏற்குமோ ? – தெய்வம் பார்க்குமோ ?"

– என்று பாரதியார் பாடினார்.

நான் பட்ட பாடுகளை நினைத்தே பாடப்பட்ட வரிகளாக, இந்த வரிகள் எனக்கு தோன்றுகின்றன.

நாளொரு வஞ்சனை, பொழுதொரு சூழ்ச்சி என்று வாழ்ந்தவர்கள், ஜோடித்த வழக்குகள் தான் எத்தனை ! எத்தனை !

புளுகும், புனைசுருட்டுமே கைவசமாய்க் கொண்டவர்கள், என்னை ஒவ்வொரு நீதிமன்றமாய் அலைக்கழித்தார்கள். தாங்கள் ஆட்சிக்கு வந்ததே அதற்காகத்தான் என்பதைப் போல், அதிகார துஷ்பிரயோகத்தால் என்னைச் சிறைக்கு அனுப்பினார்கள். நான் அதிர்ச்சியடைவில்லை ! கலங்கவில்லை. அரசியல் காழ்ப்புணர்ச்சி, எந்த அளவுக்கு இவர்களின் ஆன்மாவை, விகாரப்படுத்தி விட்டது, என்று தான் வியப்படைந்தேன்.

தேர்தல் வந்தது. நான் திரும்பவும் தேர்ந்தெடுக்கப் பட்டுவிடக் கூடாது என்பதில் தீர்மானமாய் இருந்தார்கள். எட்டுத் திசையில், நான் எந்தத் திசை சென்றாலும், முட்டுக்கட்டை போடுவதே அவர்களுக்கு வாடிக்கை யாயிற்று.

என்னைத் தேர்தலில் நிற்கவிடாமல் செய்வதன் மூலம், அ.இ.அ.தி.மு.கழகத்தை மாலுமி இல்லாத கப்பலாக்கி விடலாம், என்று கனவு கண்டார்கள். நடந்தது என்ன ? கனவு கண்டவர்கள் காணாமல் போனார்கள் ! அ.இ.அ.தி.மு.க, கரை சேர்கிற கப்பல் மட்டுமல்ல, இந்த நாட்டு மக்களைக் கரை சேர்க்கிற கப்பலும் கூட என்பதை, இந்த நாடு கண்டு கொண்டது.

எனது கால்களைக் கட்டிப் போட்டுவிட்டு, ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டு, வெற்றி வீரர்களாகி விடலாம் என்று நினைத்தவர்களை, மக்கள் தீர்ப்பு, மூலையிலே உட்கார வைத்தது! நான் முதலமைச்சரானேன்!

அத்தோடு விட்டார்களா? சட்டத்தின் சந்துகளில் அலைந்து திரிந்து, என்னை முதல்வராக நீடிக்க விடாமல் செய்யக் காரணம் கண்டு பிடித்தார்கள். அரசியலில் ஆண் காந்தாரிகள் கூட உண்டு என்பதை, அப்போது தான் உலகம் அறிந்து கொண்டது.

நான் நிலைகுலைந்து போவேன் என்று நினைத்தார்கள். நானோ, 'நீதிக்குத் தலை வணங்குவேன்' என்று கம்பீரத்தோடு நின்றேன்.

ஆம்! அவர்களுக்கு, ஜாதிக்குத் தலை வணங்கிப் பழக்கம்! எனக்கு, நீதிக்குத் தலை வணங்கி வழக்கம்!

நீதி தேவதை என்னை நிரபராதி என்றாள்.

வஞ்சகர் வாய் மூடினர்!

துரோகம் தன் தலையில் துண்டு போட்டுக் கொண்டது.

"ஜெயலலிதா தேர்தலில் நிற்க எந்தத் தடையும் இல்லை" என்று நாளிதழ்கள் எழுதின! "இப்போதே ஜெயலலிதா மீண்டும் முதல்வராக பதவி ஏற்க, எந்தத் தடையும் இல்லை" என்று சட்ட மேதைகள் கூறினர்.

நானோ, "மக்களைச் சந்திப்பேன். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு! மக்கள் மன்றத்தின் தீர்ப்பு மூலம் தான், மீண்டும் முதல்வராக இந்தச் சட்டமன்றத்தில் நுழைவேன்" என்றேன்.

ஆண்டிபட்டித் தேர்தல் அறிவிக்கப்பட்டது. தேர்தல் முடிவு எப்படி இருக்கும் என்பது, என்னைவிட, என்னை எதிரியாக நினைத்தவர்களுக்கே நன்றாகத் தெரிந்தது. அதனால், செல்லாத காரணங்களைச் சொல்லி, தேர்தலில் நில்லாமல் சிலர் ஒதுங்கிக் கொண்டார்கள்.

சிலர் துணிச்சல்காரர்கள்! தோற்பதற்காகவே தேர்தலில் நின்றார்கள்!

இந்த மக்களிடமிருந்து என்னையும், என்னிடமிருந்து இந்த மக்களையும், பிரித்துவிட முடியாது என்பதை, மறுபடி மறுபடி மக்கள் உணர்த்தினாலும், அதைப் புரிந்து கொள்ள முடியாத, மக்கு மாணவர்களாக இவர்கள் இருக்கிறார்களே, என்பது தான் என் வருத்தம்!

விரக்திப் பள்ளத்தாக்கில்,
என்னை இவர்கள் வீழ்த்தத் துடிக்கும்
போதெல்லாம் —
வெற்றிச் சிகரங்களிலே என்னை,
மக்கள் உட்கார வைக்கிறார்கள்.

"Calumny requires no proof. The throwing out of malicious imputations against character leaves a stain, which no after refutation can wipe out. The imagination is of so delicate a structure that even words wound it" - என்றார் William Hazlit.

ஒருவரைக் களங்கப்படுத்துவதற்கு ஆதாரம் எதுவும் தேவையில்லை. ஒருவருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில், வஞ்சக எண்ணத்தோடு, அவதூறு குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசும் போது, ஒரு கறை படிந்து விடுகிறது. பின்னர் எவ்வளவு மறுத்தாலும், அந்தக் கறை முழுமையாக மறைவதில்லை. கற்பனை என்பது, மிக மென்மையான அமைப்பைக் கொண்டது. வெறும் வார்த்தைகள் கூட, அதைக் காயப்படுத்தி விடுகின்றன – என்பது அதன் பொருள்.

என்னைக் களங்கப்படுத்த, எத்தனை எத்தனை அவதூறுகள், எனக்கு எதிராக அள்ளி வீசப்பட்டன! பேட்டிகளில், அறிக்கைகளில், பொது மேடைகளில், பத்திரிகைகளில், தொலைக்காட்சிகளில் – என்னை எத்தனைக் கொச்சைப் படுத்தும் குற்றச்சாட்டுகள், என் மீது எறியப்பட்டன. ஏன் – இந்தப் பேரவையிலேயே – கேட்பார் இல்லை என்ற எண்ணத்தில் – அதிகாரப் போதையில் – மமதையில் – எத்தனை உண்மைக்கு புறம்பான அவதூறு கணைகள், எனக்கெதிராக தொடுக்கப்பட்டன? ஜோடிக்கப்பட்ட போலி வழக்குகள், என் மீது தொடுக்கப்பட்டது மட்டும் அல்லாமல் – வழக்கு விசாரணை முடியும் முன்பே – தீர்ப்பு இப்படித்தான் இருக்கும் –தண்டனை கிடைப்பது உறுதி – இத்தனை ஆண்டுக் காலம் சிறைத் தண்டனை அளிக்கப்படும் என்றெல்லாம் – எத்தனை முறை – இந்த அவைக்குள்ளேயும், வெளியிலேயும் – எத்தனை முன்னாள் மாண்பு மிகுந்த நாக்குகள், நரம்பின்றிப் பேசின!

அப்படிக் களங்கம் கற்பிக்க, பேசிய பேச்சுக்கள் எல்லாம், உண்மை அற்றவை – அள்ளி வீசப்பட்ட குற்றச்சாட்டுக்கள், போலியானவை – ஜோடிக்கப்பட்டு தொடுக்கப்பட்ட வழக்குகளும், போலியானவை – என்றெல்லாம் இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது. எனக்கு ஏற்படுத்தப்பட்ட களங்கம், நீதிமன்றங்களாலேயே துடைக்கப்பட்டுள்ளது.

இருந்தாலும், இவையெல்லாம் என் மனதில், ஆறாத வடுக்களை ஏற்படுத்தி விட்டன – ரத்தம் வழிந்தோடும்

ரணங்களை உருவாக்கி விட்டன – அந்த வடுக்களும் ரணங்களும், தீக்காயங்களைப் போல் எரிகின்றன – செய்யாத குற்றங்களுக்காக, இந்த அளவுக்கு மன உளைச்சல், வீணர்களால் ஏற்படுத்தப்பட்டதை எண்ணும் போதெல்லாம் – நெருப்பாற்றில் நீந்தி, வெந்து, தேகம் எல்லாம் எரிவது போன்ற, நரக வேதனை உண்டாகும்.

அப்போதெல்லாம், தமிழக மக்கள் என் மீது பொழியும் அப்பழுக்கற்ற , தூய்மையான அன்பை நினைத்துப் பார்ப்பேன். அந்த மக்களை ஒரு முறை சந்தித்தால் போதும் – என் வேதனை எல்லாம் மறைந்து விடும் – மறந்து போய் விடும்.

நெஞ்சில் நான் சுமக்கும் ஆறாத வடுக்களையும், ரணங்களையும், ஆற்றுகின்ற அருமருந்தாய் அமைந்துள்ளது – தமிழக மக்கள் என் மீது காட்டும் அன்பு.

அதற்குக் காட்டுகிற நன்றியாகத்தான், எத்தனை சோதனைகள் எதிரில் வந்தாலும், இந்த மக்கள் பணியை என் உயிர்மூச்சாகக் கொண்டிருக்கிறேன். அன்புக் களஞ்சியங்களான ஆண்டிபட்டி மக்களுக்கும், என் அன்பார்ந்த தமிழக மக்களுக்கும், மிகச் சிறந்த எதிர்காலத்தை வழங்குவதே, என் வாழ்க்கையின் நோக்கம் என்பதை, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வேளையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவர்க்கும், மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அல்–உம்மா இயக்கத்தை சார்ந்த இமாம் அலி, ஹைதர் அலி ஆகிய இரண்டு தீவிரவாதிகள் கடந்த **8.3.2002** அன்று தப்பிச் சென்றுவிட்டனர் என்றும், இப்படி காவலில் இருக்கும் கைதிகள் தப்பிச் சென்றது ஏதோ என்னுடைய ஆட்சியில் மட்டுமே நடந்தது போலவும் குறை கூறி இங்கே சில மாமன்ற உறுப்பினர்கள் பேசினார்கள்.

சிறைச்சாலைகளில் இருந்தும், காவல்துறை கண்காணிப்பில் இருந்தும் கைதிகள் தப்பியோடும் நிகழ்வுகள், கடந்த காலத்தில் பல்வேறு காலகட்டங்களில் நடந்து கொண்டு தான் இருந்தன. கடந்த **5** ஆண்டு கால திமுக ஆட்சியில், **357** சிறைக் கைதிகள் அவ்வாறு தப்பிச் சென்றனர். குறிப்பாக, திமுக ஆட்சிக் காலத்தில் **2000** ஆம் ஆண்டில் **66** சிறைக் கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர். **2001** ஆம் ஆண்டில் **63** சிறைக் கைதிகள் காவலில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர். ஆனால் திமுக ஆட்சிக் காலத்தில் பயங்கர குற்றம் புரிந்துள்ள அபாயகரமான சிறைக் கைதிகளை, நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லும்போதோ, திரும்ப அவர்களை சிறைச்சாலைக்கு அழைத்து வரும்போதோ ஏற்படும் கைதிகள் தப்பி ஓடும் சம்பவங்களை கட்டுப்படுத்த எந்த ஒரு முயற்சியும் எடுக்கப்படவில்லை. மாறாக எங்கள் ஆட்சியில் இந்த பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்க, அறிவுப் பூர்வமான ஓர் முடிவை அரசு எடுத்துள்ளது. அதாவது, நீதிமன்றத்தில் நீதிபதிகள் முன்பு விசாரணைக்காக குற்றவாளிகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதைக் கூறுகின்ற இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் (Criminal Procedure Code) பிரிவு **167 (2) (b)** –ல் தக்க திருத்தம் கொண்டு வந்து அபாயகரமான சிறைக் கைதிகள் சிறைச்சாலைகளிலேயே தங்க வைக்கப்பட்டு, நீதிமன்றங்களில் உள்ள நீதிபதிகள் Video Conferencing முறை மூலம் குற்றவாளிகளை விசாரிக்கும் புதிய விசாரணை முறையை செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த புதிய விசாரணை முறையானது, அபாயகரமான குற்றவாளிகள் காவலில் இருந்து தப்பி ஓடுவதை வெகுவாக குறைக்கும் என்று நம்புகிறேன். இந்தப் புதிய திட்டம் சென்னையில் முதன்முதலாகக் கொண்டுவரப்பட உள்ளது. அதன்பின்னர், அனைத்து மத்திய சிறைச்சாலைகளிலும் இந்தப் புதிய முறை அமல்படுத்தப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.


கள்வன் பெரிதா, காப்பான் பெரிதா என்ற சர்ச்சை காலம்காலமாக நடந்து வருகின்ற ஒன்றுதான். இதில் கள்வன் பெரிதல்ல, காப்பான் ஆகிய காவல்துறையே பெரிது என்னும் வகையில்தான் எங்கள் அரசு கள்வர்களையும், குற்றவாளிகளையும் ஒடுக்குவதில் தீவிர கவனத்தை செலுத்தி வருகிறது. ஆனால், இதற்கு மாறாக, கடந்த தி.மு.க. ஆட்சியில் வன்முறையாளர்களுக்கும், தீவிரவாதிகளுக்கும், குற்றவாளிகளுக்கும் மறைமுக மற்றும் வெளிப்படையான ஆதரவு வழங்கப்பட்டதை இந்த நாடே அறியும். சந்தனக் கடத்தல்காரன் வீரப்பன் விஷயத்தில் முந்தைய திமுக அரசு எப்படி எல்லாம் கபட நாடகம் ஆடியது என்பதை தமிழ் நாட்டு மக்கள் மறந்திருக்க முடியாது. தீவிரவாத இயக்கங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அன்றைய தி.மு.க. அரசு கொடுத்ததால் தான் தமிழ்நாட்டில் பல்வேறு விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தன என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள்.

**14.5.2001**–ல் முதலமைச்சராக நான் பொறுப்பேற்றுக் கொண்டது முதல் தீவிரவாதத்தை ஒடுக்கவும், குற்றவாளிகளை அடக்கி சட்டத்தின் முன்பு நிறுத்தவும் காவல் துறையினரின் நடவடிக்கையை முடுக்கி விட்டுள்ளேன். தற்போது தப்பிச் சென்ற அல்–உம்மா தீவிரவாதிகளான இமாம் அலி, ஹைதர் அலி

ஆகிய இருவரில் ஹைதர் அலி என்கிற தீவிரவாதியை காவல் துறையினர் மறு நாளே தேடிக் கண்டுபிடித்து, மீண்டும் கைது செய்துள்ளனர். தப்பி ஓடிய அவனது கூட்டாளியான இமாம் அலி என்ற தீவிரவாதியை தேடி கைது செய்யும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. காவல் துறையினர் இந்தப் பணியில் தீவிர கவனம் செலுத்த முடுக்கிவிடப்பட்டுள்ளனர். விரைவில் அந்தத் தீவிரவாதியும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவது உறுதி. தீவிரவாதிகளையோ, வன்முறையாளர்களையோ கைது செய்வதில் இந்த அரசு என்றும் தயக்கம் காட்டாது. தப்பியோடிய தீவிரவாதியான இமாம் அலியை பிடிக்க முறையான– விரைவான– உறுதியான – நடவடிக்கைகள் காவல்துறையினர் மூலம் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றன என்றும், தமிழ்நாட்டை என்றென்றும் அமைதிப் பூங்காவாக வைத்திருப்பதை தனது தலையாய கடமையாக இந்த அரசு கருதுகிறது என்பதையும் இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சில ஐயப்பாடுகளை எழுப்பினார்கள். தமிழக அரசு தற்போது அமல் படுத்தி வரும் மாபெரும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், கடந்த 2001–ஆம் ஆண்டு ஜுன் மாதம் என்னால் அறிவிக்கப்பட்டது. மேதகு ஆளுநர் உரையின் மீது நடந்த விவாதத்தில் பங்கேற்ற சில உறுப்பினர்கள், தமது மாவட்டத்திற்கு இந்தத் திட்டம் உண்டா என்று கேள்வி எழுப்பினார்கள்.

தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமாக உள்ள தரிசு நிலங்கள், 20 இலட்சம் ஹெக்டேர் – அதாவது 50 இலட்சம் ஏக்கர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் தரிசாக உள்ள தனியார் பட்டா நிலங்களும், அரசு சார்ந்த தரிசு நிலங்களும் அடங்கும். ஆக இந்தத் தரிசு நிலங்கள், எவ்விதப் பயன்பாடும் இன்றி, பல ஆண்டுகளாக இலட்சக் கணக்கான விவசாயிகளுக்கு, எவ்வித வருமானத்தையும் அளிக்காமல், அப்படியே தரிசாக விட்டு வைக்கப்பட்டு வந்தது. அதன் காரணமாக ஊரக பொருளாதார வளர்ச்சி குன்றியது. இதனை எப்படியாவது சரி செய்து, அதன் மூலம் கிராமப்புற பொருளாதாரத்தில், விரைந்த வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தான், இந்தியாவிலேயே முதன் முதலாக, நான் இந்த மாபெரும் தரிசு நிலத் திட்டத்தை உருவாக்கினேன். கடந்த ஆளுநர் உரையில் நடைபெற்ற தீர்மானத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் ஒரு கேள்வி எழுப்பினார். தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், அந்தத் திட்டங்களில் மேம்பாடு செய்யப்பட்ட தரிசு நிலத்தின் அளவு, மிகவும் குறைவு. தமிழகத்திலுள்ள ஒட்டுமொத்த 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தையும் இந்த ஆட்சியில் மீதமுள்ள 4 ஆண்டு காலத்திற்குள், மேம்பாடு அடையச் செய்வது என்பது, இதுவரை முன்னர் எப்போதும், எந்த மாநில அரசுமே செயல்படுத்தாத, ஒரு மிகப் பெரிய திட்டம் ஆகும்.




இந்தத் திட்டத்தில் 1000 ஏக்கர் முதல் 2000 ஏக்கர் வரையிலான, பழத் தோட்டப் பண்ணைகள், உணவு மற்றும் பழப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள், குளிர்பதன இருப்பு மையங்கள் ஆகியவை, மேம்படுத்தப்பட்ட தரிசு நிலங்களில் தனியார் துறையின் முதலீட்டோடும், நிதி நிறுவனங்களின் நிதியோடும், மிகப் பெரிய அளவில் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டம் நான்காண்டு காலத்தில், அனைத்து மாவட்டங்களில் உள்ள தரிசு நிலங்களிலும், பண்ணைத் தோட்டங்கள் நல்ல முறையில் அமல்படுத்தப்படும். சற்று முன்பு மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கடந்த 10 மாத காலமாக என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று வினா எழுப்பினார். இதை எல்லாம் தான் செய்து கொண்டிருந்தோம். நடப்பு ஆண்டு 2001–2002 –ல், 10 மாவட்டங்களில், 28 ஒன்றியங்களில், மொத்தம் 1,37,500 ஏக்கர் பரப்பு தரிசு நிலத்தை மேம்படுத்தும் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக நடப்பு ஆண்டில், ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வருகின்ற நிதியாண்டில், அனைத்து மாவட்டங்களிலும் இந்தத் திட்டம், விரிவுபடுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

"தானத்தில் சிறந்த தானம் அன்னதானம்" என்பது நமது பெரியோர்கள் நமக்கு விட்டுச் சென்ற அருள்மொழிகளில் ஒன்றாகும். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற இலக்கிய கூற்றுக்கு ஏற்ப, தமிழகத்தில் உள்ள எண்ணற்ற திருக்கோயில்களில் தினந்தோறும் மதிய நேரத்தில் வருகை தருகின்ற பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கும் உயரிய திட்டம் மேதகு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகத்தான மனித நேயத் திட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் நன்கொடை யாளர்கள் அளிக்கின்ற நன்கொடையை அடிப்படையாக வைத்து நடத்தப்படும். திருக்கோயில்களுக்கு வருகின்ற பக்தர்கள் அனைவரும் இந்தத் திட்டத்திற்காக பிரத்தியேகமாக காணிக்கை செலுத்துவதற்கு ஏதுவாக தனி உண்டியல்கள் கோயில்களில் வைக்கப்படும். நிதி வசதி படைத்த திருக்கோயில்களில் முதற்கட்டமாக தொடங்கப்படும் இந்தத் திட்டம் அந்தந்த ஆலயங்களில் உள்ள ஆலய நிதியை வைத்து அமல்படுத்தப்படும். பின்னர் இந்தத் திட்டம் பிற முக்கிய கோயில்கள் அனைத்திலும் நடைமுறைப்படுத்தப்படும்.

நமது நாட்டின் கலாச்சாரத்திற்கும், தொன்மையான நெறிமுறைகளுக்கும் எடுத்துக்காட்டாக திகழ்ந்து கொண்டிருப்பவை நமது திருக்கோயில்கள் ஆகும். இன்றைய இளம் குழந்தைகளிடையே நல்ல பண்புகளையும், நமது நாட்டின் பழம்பெருமைகளையும் வளர்ப்பதற்கு திருக்கோயில்கள் பயன்பட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில், இத்தகைய கோயில்கள் அனைத்திலும் குழந்தைகளுக்கு ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறி ஆகியவற்றில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமையில் ஒரு மணி நேர வகுப்புகள் நடத்தப்படும் என்ற அறிவிப்பும் மேதகு ஆளுநர் உரையில் வெளியிட்டிருந்தது. நாளைய சமுதாயத்தை



ஆள இருக்கின்ற இன்றைய இளம் சிறுவர் சிறுமியர்கள் பண்பட்டவர்களாகவும், நமது பாரம்பரியத்தை போற்றுவதில் அக்கறை கொள்பவர்களாகவும், எதிர்காலத்தில் உருவெடுக்க இந்த புதிய திட்டம் மிகச் சிறந்த அடித்தளத்தை அமைக்கும் என்று நான் நம்புகிறேன்.

மகளிர் தமது வாழ்வில் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் முன்னேற்றத்தை அடைய, கல்வி மிகவும் அவசியம் என்பதோடு, சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலும் தமது உரிமையை நிலை நாட்டி அதிகார பகிர்வினை மகளிர் அதிக அளவில் பெற்றிட அவர்களுக்கு உயர்கல்வி மிகவும் தேவை என்பதை உணர்ந்த புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தை **1984** ஆண்டு எழில்மிகு கொடைக்கானல் நகரில் நிறுவினார். ஆனால், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தோற்றுவித்த பல்கலைக் கழகம் அது, என்ற காரணத்தினால் பின்னர் வந்த தி.மு.க. அரசு இந்த மகளிர் பல்கலைக் கழகத்தை சென்னை நகருக்கு மாற்றியதோடு, இந்தப் பல்கலைக் கழகம் மேலும் செழித்தோங்க எந்தவித ஆக்கப்பூர்வமான நடவடிக்கை களையும் எடுக்கவில்லை.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள உயர்கல்வி பயில்கின்ற மகளிர் எளிதாக சென்று தொடர்பு கொள்கின்ற வகையில் தமிழ்நாட்டில், குறிப்பாக தென் மாவட்டங்களுக்கு அருகாமையில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் கொடைக்கானலில் நிறுவப்பட்டது. ஆனால், அந்த உயரிய நோக்கத்தை புரிந்து கொள்ளாமல் தி.மு.க. அரசு இப்பல்கலைக் கழகத்தை சென்னைக்கு மாற்றியது. அதனை மீண்டும் கொடைக்கானல் நகருக்கே மாற்றி எனது தலைமையிலான முந்தைய அ.இ.அ.தி.மு.க. அரசு உத்தரவிட்டது.

தற்போது, இப்பல்கலைக் கழகம் கொடைக்கானல் நகரில் **2** ஏக்கர் நிலப் பரப்பில் சிறிய அளவில் அமைந்த கட்டடங்களை கொண்டு இயங்கி வருகின்றது. இந்நிலையில், எங்கள் அரசு அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தை கொடைக்கானலிலேயே ஏறத்தாழ **150** ஏக்கர் பரப்பளவு கொண்ட புதிய இடத்தில் விரிவுபடுத்தி அமைத்திட முடிவு செய்து இதற்கான நடவடிக்கைகளை எடுக்க உள்ளது. மேலும், அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்திற்கு அருகாமையில் உள்ள மாவட்டங்களைச் சார்ந்த அனைத்து அரசு மற்றும் தனியார் மகளிர் கல்லூரிகள் இப்பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்படும்.

மகளிர் முன்னேற்றத்திற்கான அடித்தளத்தை தமிழ்நாட்டில் சிறந்த முறையில் அமைத்திட அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் அரசுக்கு பேருதவியாக இருக்கும் என்ற அடிப்படையில் இந்தப் பல்கலைக் கழகத்தை மிகப் பெரிய அளவில், சர்வதேச பல்கலைக் கழகங்களுக்கு இணையாக இதனை **Centre for Excellence** என்ற அளவுக்கு ஒரு மிகச் சிறந்த உயர் கல்வி மையமாக உருவாக்கிட நான் விருப்பம் கொண்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில், கடந்த **6.3.2002** அன்று சென்னைக்கு வந்து என்னைச் சந்தித்த அமெரிக்க நாட்டின் நியூயார்க் நகரில் உள்ள **FORD FOUNDATION** நிறுவனத்தின் தலைவி **Ms. Susan Bressford** அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கு தமது நிறுவனத்தின் நிதி உதவியை பெரிய அளவில் வழங்குவதாக உறுதி அளித்துள்ளார். இதையெல்லாம் பயன்படுத்தி இப்பல்கலைக் கழகத்திற்கு அடுத்த இரண்டு ஆண்டுகளில் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து நமது நாட்டின் மிகச் சிறந்த பல்கலைக் கழகங்களில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகமும் ஒன்று என்ற சிறப்பை பெற்றுத் தந்திட இந்த அரசு உறுதி பூண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் நிலவும் வறுமையை அகற்றவும், அதன் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் ஊரக மக்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், அவர்கள் சுய வேலை வாய்ப்புகளை தாமே உருவாக்கிக் கொண்டு தொடர்ந்து அவற்றில் ஈடுபடவும் அனைத்து உதவிகளும் செய்திட வேண்டும் என்பதே எங்கள் அரசின் கொள்கை ஆகும். இதன் அடிப்படையில் தான், மேதகு ஆளுநர் உரையில் தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள **385** ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் **1** கோடி ரூபாய் முதலீட்டினைக் கொண்ட ஒரு தொழிற்சாலை உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்தந்த ஒன்றியங்களில் ஏற்கெனவே நடைபெற்று வருகின்ற, வணிக வாய்ப்பு அதிகம் உள்ள தொழில் ஒன்று கண்டறியப்பட்டு, அந்தப் பகுதி மக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு பெறுகின்ற வகையிலும், தொழிற்சாலை அந்த ஒன்றியத்தில் அமைவதால் அதனையொட்டி அங்கு சிறு தொழில்கள் பெருகும் வகையிலும், ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு தொழிற்சாலை அமைக்கப்படும். குறிப்பாக, வேளாண் சார்ந்த தொழில்கள், உணவுப் பொருள்கள் பதப்படுத்துதல், மூலிகை மற்றும் மருத்துவப் பொருள்கள் தயாரித்தல் போன்ற ஏற்றுமதிக்கும், வேலை வாய்ப்பிற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கின்ற தொழிற்சாலைகள்,

தனியார் துறை (Private Sector), மற்றும் கூட்டுத் துறை (Joint Sector அல்லது Associate Sector) மூலமாக அமைக்கப்படும். இத்தொழிற்சாலை ஒவ்வொன்றும் குறைந்த பட்சம் 1 கோடி ரூபாய் மூலதனத்தை கொண்டு அமையும்.

இவ்வாறு நிறுவப்படும் தொழிற்சாலைகள் ஒவ்வொன்றிலும் ஆண்டுதோறும் ரூ.10 கோடி அளவிற்கு உற்பத்தி மற்றும் விற்பனை அமையும் வகையில் இந்தத் தொழிற்சாலைகள் வெற்றிகரமாக இயங்க அரசு அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கி தக்க வழிகாட்டுதலையும் நல்கும். இதற்கு வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவி மற்றும் ஒத்துழைப்பு பெற்று தரப்படும். இவ்வாறு, தமிழகத்தின் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஒன்றியத்திற்கு ஒரு தொழிற்சாலை வீதம் நிறுவப்பட்டு ஊரகத் தொழில்கள் மறுமலர்ச்சி பெறுவதற்கு இந்த அரசு போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சமுதாயத்தில் காலம்காலமாக ஒடுக்கப்பட்ட பிரிவினராக இருக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் போன்ற பிரிவுகளைச் சார்ந்த மக்கள் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை விரைந்து அடைவது என்பது எங்கள் அரசின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று. அவர்களுடைய வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்த பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை எங்கள் அரசு அறிவித்து செயல்படுத்தி வருகின்றது. குறிப்பாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த 11–ஆம் மற்றும் 12–ஆம் வகுப்புகள் படிக்கும் மாணவியர்கள் அனைவருக்கும் இலவச சைக்கிள்கள் வழங்கும் திட்டம் தமிழ்நாடு முழுவதும் மிகப் பெரிய அளவில் மற்ற மாநிலங்களில் ஒரு முன் உதாரணமாக எடுத்துக் கொள்ளப்படும் சிறப்பினைப் பெற்றுள்ளது. ஆகவே, கல்வி அறிவு இத்தகைய ஒடுக்கப்பட்ட பிரிவினரிடையே மென்மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதில் எங்கள் அரசுக்கு ஆழ்ந்த அக்கறை



உள்ளது. இந்த உயரிய நோக்கத்தின் அடிப்படையில் தான் மேதகு ஆளுநர் உரையில் தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெயரில் ஒடுக்கப்பட்ட பிரிவினரின் பொருளாதார, சமூக மேம்பாட்டை முக்கிய நோக்கமாகக் கொண்ட புதிய பல்கலைக் கழகம் ஒன்று வேலூர் நகரில் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. எத்தனையோ பல்கலைக் கழகங்கள் இருந்த போதிலும் இந்த புதிய பல்கலைக் கழகத்திற்கு அப்படி ஒரு தனிச் சிறப்பு என்ன என்ற கேள்வி அனைவர் மனதிலும் எழலாம். இந்த புதிய பல்கலைக் கழகம், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும்

பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் ஆகிய பிரிவுகளைச் சார்ந்தவர்களுக்கு என்று சொன்னதினால், அங்கே அத்தகைய பிரிவுகளைச் சார்ந்த மாணவ மாணவியர்கள் மட்டுமே கல்வி பயில்வார்கள் என்றோ, அத்தகைய பிரிவுகளைச் சார்ந்த பேராசிரியர்கள் மட்டுமே அங்கே பணி புரிவார்கள் என்றோ பொருள் அல்ல. மாறாக, இந்த புதிய பல்கலைக் கழகத்தின் நோக்கம் என்ன என்றால், திருவள்ளுவர் எப்படி உலகில் உள்ள அனைத்து மொழிகளிலும் அனைத்து மதங்களைப் பின்பற்றுவோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு போற்றப்படுகிறாரோ, அதே போன்று அனைவருமே இந்தப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலவும், பணி புரியவும் இயலும் என்பதை தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். திறனாய்வு (Research) மற்றும் உயர் கல்வி வழிமுறைகளின் வாயிலாக ஒடுக்கப்பட்ட பிரிவுகளின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு உரிய வழி முறைகளையும், கருத்துக்களையும், நுட்பங்களையும் அறிவு சார்ந்த முறையில் எடுத்து உரைத்து அதன் வாயிலாக அப்பிரிவு மக்களின் வாழ்க்கைத் தரத்தில் போற்றத்தக்க மாறுதல்களை ஏற்படுத்த வேண்டும் என்பது தான் இந்தப் புதிய பல்கலைக் கழகத்தின் நோக்கம் ஆகும். அந்த வகையில் உலகின் பல பாகங்களிலும் உள்ள ஒடுக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த மக்கள் எப்படி எல்லாம் தங்களுக்கு இருந்த சமூக, பொருளாதார இடர்ப்பாடுகளை வெற்றி கொண்டிருக்கிறார்கள், முன்னேறியிருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து அவை குறித்து தீவிர ஆய்வு செய்து உரிய கண்டுபிடிப்புகள் மூலம் அரசுக்கு ஆலோசனை களையும், கருத்துக்களையும் வழங்குவதை இந்தப் பல்கலைக் கழகம் தன்னுடைய கடமையாகக் கொண்டிருக்கும்.

இன்றைய உலகில் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்கும், தகவல் தொழில் நுட்பத்தில் பிற நாடுகளுக்கு இணையாக முன்னேற்றம் காண்பது மிகவும் அவசியம். இந்தியாவில், தகவல் தொழில் நுட்பக் கொள்கை முதன்முதலாக அறிவிக்கப்பட்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. தகவல் தொழில் நுட்பத்தில் புரட்சி காண்பதற்கு ஏதுவாக பொதுப் பாதைகளில் தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் கண்ணாடி இழை கேபிள்களைப் பதிக்க அனுமதிக்கும் வகையிலான கொள்கை வகுக்கப்பட்டு செயல்படும் மாநிலங்களில் தமிழகம் முன்னணி வகிக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக் கழகம் (Harvard University) வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை ஒன்றில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் தகவல் தொழில் நுட்பத் துறையில் முதல் இடத்தைப் பெறும் வகையில் முன்னேறிச் செல்கிறது என்று கணித்துள்ளது.

இந்தியத் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பு (Confederation of Indian Industries - CII) கடந்த செப்டம்பர் 13 முதல் 16ஆம் தேதி வரை சென்னை வர்த்தக மையத்தில் தகவல் தொழில் நுட்பம் தொடர்பான சர்வதேச மாநாடு ஒன்றையும், கண்காட்சி ஒன்றையும் நடத்தியது. மேலும், தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பவியல் நிலையம் (Tamil Nadu Information Technology Institute) ஒன்றை அமைப்பதற்கும் இவ்வரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

உலகிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் தான் தொழிற்கல்வி பயில நுழைவுத் தேர்வு எழுதும் மாணவ–மாணவியர்களுக்கு கணினி மூலம் On Line-ல் நுழைவுத் தேர்வுக்கான அனுமதிக் கடிதம் வழங்கும் முறை 12.3.2002 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சாதாரணமாக விண்ணப்பப் படிவங்களை தபாலில் அனுப்பி 45 நாட்கள் காத்திருந்து, அதன் பின்னர் அனுமதிக் கடிதம் (Hall Ticket) பெறப்பட்டு வந்தது. அவ்வாறு வந்த பின்னர் கூட அதில் ஏதாவது பிழைகள் இருந்தால் அதனால் மாணவ–மாணவியருக்கு மன உளைச்சலும், சிரமமும் ஏற்பட்டு வந்தது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு கணினியில் பதிவு செய்த இரண்டு நிமிடங்களிலேயே, இந்த அனுமதி கடிதத்தை உடனுக்குடன் பெறும் வகையில் இந்த திட்டம் இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் அண்ணா பல்கலைக் கழகத்தால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இதன் மூலம் தகவல் தொழில் நுட்பத் துறையில் தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவியல் துறையில் உயிரியல் தொழில்நுட்பம் தற்போது முக்கியத்துவம் பெற்று வருவதைக் கருத்தில் கொண்டு உயிரியல் தொழில் நுட்பத் துறையில் பன்னாட்டு நிறுவனங்களை ஈடுபடுத்த நடவடிக்கை இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு ஆகஸ்டு 25ஆம் தேதி தமிழக அரசின் பொதுத் துறை நிறுவனமான TIDCO நிறுவனத்திற்கும், அமெரிக்காவில் உள்ள கார்னெல் பல்கலைக் கழகத்திற்கும் இடையே உயிரியல் தொழில் நுட்ப பூங்கா அமைப்பதற்கான தொழில் நுட்ப சேவை ஒப்பந்தம் செய்யப்பட்டது. கார்னெல் பல்கலைக் கழகம், இந்தியாவில், தமிழ்நாட்டில் மட்டும்தான் இத்தகைய ஒப்பந்தத்தைச் செய்துள்ளது என்பதைப் பெருமையுடன்

தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொழில் நுட்ப பூங்காவில் 50 புதிய நிறுவனங்கள் மூலமாக 1,000 கோடி ரூபாய் அளவிற்கு மூலதனத்தை ஈர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் தொழில் நுட்பப் பூங்கா TICEL (TIDCO Centre for Life Sciences) அமைப்பது தொடர்பான பணிகள் இந்த ஆண்டு முடிவடையும்.

மேலும், அனைத்துத் துறைகளிலும் மின்னணு சார் (E-Governance) நிர்வாகத்தைச் செயல்படுத்தி காகிதப் பயன்பாட்டைக் குறைத்து அதன் மூலம் காலதாமதத்தையும், பொருள் விரயத்தையும் குறைக்க இவ்வரசு எண்ணுகிறது. பொதுமக்களுக்கான வசதி வாய்ப்புகளைப் பெருக்க தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. திருமாவளவன் அவர்கள் இந்த அவையில் உரையாற்றும் போது, செல்வி ரீட்டா மேரிக்கு இழைக்கப்பட்ட கொடுமை பற்றியும், தூத்துக்குடி மாவட்டம் சங்கரலிங்கபுரம் கிராமத்தில் ஆதிதிராவிடர்கள் பாதிக்கப்பட்டு துயரத்தில் இருப்பதாகவும், கரூர் மாவட்டம் சிவகுமார் என்ற சிறுவனுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும், தருமபுரி மாவட்டம் மருக்காலம்பட்டியில் பூவி என்ற கர்ப்பிணிப் பெண் வன்கொடுமை காரணமாக மரணம் அடைந்ததாகவும் இங்கே தெரிவித்துள்ளார்.

செல்வி ரீட்டா மேரி கற்பழிப்பு சம்பவம் தொடர்பான விவரங்கள் வெளி வந்தவுடன், இந்த அரசு, துரிதமாகச் செயல்பட்டு, உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நீதிமன்ற உத்தரவின் படி, I.G. திருமதி. திலகவதி அவர்கள் விசாரணை மேற்கொண்டு, ரீட்டா மேரிக்கு கொடுமை இழைக்கப்பட்டுள்ளது என்பது உறுதி செய்யப்பட்டவுடன், நிவாரணத் தொகையாக 5 இலட்சம் ரூபாயும், அவர் குடியிருப்பதற்கு வீடு ஒன்றும் உடனடியாக வழங்கி அரசு உத்தரவிட்டது. மேலும், அரசு மருத்துவமனையில் தக்க சிகிச்சை அளிக்கவும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தூத்துக்குடி மாவட்டம் சங்கரலிங்கபுரம் கிராமத்தில் உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான சம்பவங்களினால் பகைமை உணர்வு ஏற்பட்டு, ஆதிதிராவிடர்களுக்கும் சாதி இந்துக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டச் சென்ற காவலர் ஒருவர், சங்கரலிங்கபுரம் கிராமத்தினரால் கொலை செய்யப்பட்டுள்ளார். இருந்த போதிலும், காவல் துறையினர் இதில் மிகவும் கவனமாகச் செயல்பட்டு, சாதிக் கலவரம் மேலும் பரவாமல், தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில், குற்றவாளிகளாக கைது செய்யப்பட்ட பெண்களை ஜாமீனில் விடுவதற்கு, அவர்கள் தரப்பிலேயே போதிய ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. இந்த துரதிருஷ்டவசமான சம்பவத்தால், ஆதிதிராவிட மக்களின் வீடுகளும், உடைமைகளும் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டிருப்பது எனது கவனத்திற்கு வந்துள்ளது. எனவே, சங்கரலிங்கபுரம் கிராமத்தில், கலவரத்தால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் உரிய நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கரூர் மாவட்டம் புங்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சிவகுமார் என்ற சிறுவன் வேட்டைக்குச் செல்ல கட்டாயப்படுத்தப்பட்டு, அதற்கு ஒத்துழைக்காததால், துப்பாக்கியால் சுடப்பட்டு கண்களில் காயம் அடைந்துள்ளான். இது குறித்து, சிவகுமாரின் தந்தை உடனடியாகக் குற்றவாளிகள் மீது காவல் துறைக்கு புகார் எதுவும் கொடுக்காமல், சிகிச்சைக்குப் போதிய பணம் தரவில்லை என்ற நிலை எழுந்த பின்பே, காவல் துறையிடம் புகார் செய்துள்ளார். இருப்பினும், காவல் துறை அலுவலர்கள் விரைந்து செயல்பட்டு, குற்றவாளிகளைக் கைது செய்து, உரிய நடவடிக்கை எடுத்துள்ளனர். பாதிக்கப்பட்ட அந்தச் சிறுவனுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 25,000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம் மருக்காலம்பட்டியில், திருமதி. பூவி என்ற கர்ப்பிணிப் பெண், சாதிக் கலவரத்தின்

**உலகிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் தான் தொழிற்கல்வி பயில நுழைவுத் தேர்வு எழுதும் மாணவ-மாணவியர்களுக்கு கணினி மூலம் On Line-ல் நுழைவுத் தேர்வுக்கான அனுமதிக் கடிதம் வழங்கும் முறை 12.3.2002 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.**

பாதிப்பு காரணமாக இறந்ததாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள கருத்து தவறானது. உள்ளாட்சித் தேர்தலுக்குப் பின் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில், ஆதிதிராவிடர்களின் வீடுகள் தாக்கப்பட்டது குறித்து, தொடர்புடைய குற்றவாளிகள் 44 பேர் கைது செய்யப்பட்டு, உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே நேரத்தில், ஆதிதிராவிடர்களும், தங்களுடைய எதிர்ப்பை காட்டும் வகையில், அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துக்குத் தீ வைத்து, வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர். மரணம் அடைந்த திருமதி பூவி என்ற கர்ப்பிணிப் பெண்ணுக்கு, குறைப் பிரசவமாகக் குழந்தை பிறந்து, அதன் பின் மறுநாள் வலிப்பு ஏற்பட்டு, உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கத் தவறியதால் அவர் இறந்துள்ளார். அவரது உடலில் வெளிக் காயங்கள் எதுவும் இல்லை என்றும், அதிர்ச்சி காரணமாகவே இறந்துள்ளார் என்றும் பிரேத பரிசோதனை அறிக்கையில் மருத்துவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். அவரது இறப்பு குறித்து, சம்பந்தப்பட்ட வருவாய்க் கோட்ட அலுவலரும் விசாரணை நடத்தி உள்ளார். காவல் துறையினரும் புலன் விசாரணை நடத்தி வருகின்றனர். எனவே, இந்த இனத்தில் பாரபட்சமின்றி செயல்பட்டு விசாரணை முடிவுகளின் அடிப்படையில், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிலையில், மனிதாபிமான அடிப்படையில், இறந்து போன திருமதி. பூவியின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 50,000 ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிகழ்ச்சி நிகழப் போகிறது. நேற்று இங்கே பல குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசிய மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்களுக்கு இன்று பதில் கூறுவேன் என்று தெரிவித்திருந்தேன். அதை இப்போது தொடங்க உள்ளேன்.


மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள், மேதகு ஆளுநர் உரையில், ஒரு நடைமுறை உண்மை ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறி, அதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில், தற்போது காணப்படும் பின்னடைவு, ஏனைய மாநிலங்களிலும் இருக்கும் பொதுப் பிரச்சனை தான் – அதன் காரணமாக, பல மாநில அரசுகள், அவற்றின் திட்டச் செலவை பெருமளவில் குறைக்க உள்ளன என்பதே, அந்த நடைமுறை உண்மை என்று குறிப்பிட்டுள்ளார். உலகம் முழுவதும் காணப்படும் பொருளாதார வீழ்ச்சியைப் பற்றி நான் குறிப்பிட்டதை, அவருக்கு வசதியாக, தி.மு.க. அரசின் நிர்வாகச் சீர்கேடுகளை மூடிமறைக்க, அவர் இப்படிக் கூறி இருக்கிறார். சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் குறிப்பிட்டவாறு, தமிழகத்தின் இக்கட்டான நிதி நிலைமைக்கு, முந்தைய தி.மு.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேடுகளே, முக்கிய காரணம் என்பதில், இருவேறு கருத்துகள் இருக்க முடியாது. அந்தக் கருத்தில், இந்த அரசுக்கு எவ்வித மாறுபாடும் இல்லை. கடந்த 5 ஆண்டுக்கால தி.மு.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேட்டினால், ஏற்கெனவே பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டின் நிதி நிலைமையை, தற்போது நிலவி வரும் பொருளாதார வீழ்ச்சி, மேலும் முடக்கிவிட்டது என்று தான், இந்த ஆண்டு நிகழ்த்தப்பட்ட ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களது ஆட்சி தொட்டு, செழுமையுற்று சிறந்தோங்கி விளங்கிய, தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்கள், 1991 முதல் 1996 வரை நடந்த, எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தேசிய அளவில், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான பல்வேறு விருதுகளைப் பெற்று, புகழுடன் விளங்கியதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

குறிப்பாக, 1992 ஆம் ஆண்டு முதல், 1996 ஆம் ஆண்டு வரை, “தேசிய உற்பத்தித் திறன் விருது”, “சிறந்த முறையில் எரிபொருள் சேமிப்பு விருது” போன்று, ஏறத்தாழ 40 விருதுகளை, அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெற்று, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தன.

ஆனால், 1996 ஆம் ஆண்டு முதல், 2001 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற, தி.மு.க. ஆட்சியின் போது, அரசு போக்குவரத்துக் கழகங்களை, குரங்கு கையில் அகப்பட்ட பூமாலையைப் போல், பிய்த்துப் போட்டு, சின்னாபின்னம் ஆக்கி, அடியோடு சீரழித்து விட்டு, இப்போது, முன்னாள் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. பொன்முடி அவர்கள் அரசு போக்குவரத்துக் கழகங்களைப் பற்றி வெட்கப்படாமல் பேசி, வார்த்தை ஜாலம் காட்ட முனைந்திருக்கிறார் – சில புள்ளி விவரங்களை அள்ளி வீசி, வித்தை காட்ட முயற்சித்திருக்கிறார் – அதாவது statistical jugglery செய்யப் பார்த்திருக்கிறார்.

**(தி.மு.க வெளிநடப்பு செய்ததைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகையில்)**



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

நான் என்ன எதிர்பார்த்தேனோ அதுதான் இப்போது நடந்திருக்கிறது. நேற்று இந்த அவையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் இன்று போய் நாளை வா என்று என்னைப் பார்த்து வாய் வீரம் பேசினார். நான் அவரைப் பார்த்து அவர் இன்று போய் நாளை வரட்டும் திரு. பொன்முடி செய்த தவறுகளையெல்லாம் இந்த அவையில் நான் தெரிவிப்பேன். அதை, திரு. பொன்முடி அவர்கள் அமர்ந்து கேட்க வேண்டும் என்று நேற்றே தெரிவித்துத்தான் நான் சென்றேன். நேற்று திரு. பொன்முடி அவர்கள் எவ்வளவோ பேசினார். அவர்கள் ஆட்சிக் காலத்தில் செய்த தவறுகளுக்கெல்லாம் நாங்கள் தான் பொறுப்பு. அதுவும் கடந்த 10 மாத காலத்தில் நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிற இந்த அரசு தான் பொறுப்பு என்றெல்லாம் அபாண்டமான பழியை எங்கள் மீது சுமத்தினார். அப்போதெல்லாம் நான் அமைதியாகத் தான் கேட்டுக் கொண்டிருந்தேன். இதற்கெல்லாம் நாளை நான் பதில் சொல்லுகிறேன் என்று தான் தெரிவித்தேன். திரு. பொன்முடி அவர்கள் நேற்று பேசிய பேச்சில் முழு பங்கு கிட்டத்தட்ட எங்களைக் குறை சொல்லுவதாகத்தான் அமைந்திருந்தது. நாங்கள் செய்யாத தவறுகளுக்கெல்லாம் நாங்கள் தான் பொறுப்பு என்பது போல் அவர் பேச்சு அமைந்திருந்தது.

அதற்குப் புள்ளிவிவரங்களோடு இன்றைக்கு நான் பதில் சொல்ல முற்படும்போது அவர்கள் செய்த தவறுகளை நான் இங்கே இப்போது வெளிப்படுத்தப் போகிறேன் என்பதை உணர்ந்து அதைக் கேட்பதற்கு அவர்களால் முடியாமல் அதைத் தாங்கிக் கொள்ள அவர்களால் முடியாமல் இந்த அவையின் மரபுகளை மீறி வெளிநடப்பு செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் குற்றம் புரிந்தவர்கள் என்பதை அவர்களே ஒப்புக்கொண்டுவிட்டார்கள் என்று தான் சொல்ல முடிகிறது.

அரசு போக்குவரத்துக் கழகங்களை நாங்கள் நிர்வகிப்பது பற்றி வேறு யாரும் பேசலாம் – ஆனால் கண்டிப்பாக திரு. பொன்முடி அவர்கள் பேசக்கூடாது. அவருக்கு அந்த அருகதையே இல்லை என்று நான் கூறுகிறேன்.

நாங்கள் ஆட்சியை விட்டு வெளியேறிய போது, **1996** ஆம் ஆண்டு வரை, தமிழ்நாட்டில் உள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களின், Accumulated Loss – திரண்ட இழப்பு, ஏறத்தாழ **368.85** கோடி ரூபாயாக இருந்தது. அதில், **1991** ஆம் ஆண்டு வரை திரண்ட இழப்பு, **164.19** கோடி ரூபாய். அப்போது **1991** ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை தி.மு.க. ஆட்சியில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் ஜுன் மாதம் வரை ஜனாதிபதி ஆட்சி இருந்தது. அதன் பின்னர்,

1991 ஜூன் 24–ந் தேதி பதவியேற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், ஐந்து ஆண்டுகளுக்கும் சேர்த்து 1996– வரை ஏற்பட்ட இழப்பு, 204.66 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால், 1996 ஆம் ஆண்டு முதல், 2001 ஆம் ஆண்டு வரை தி.மு.க. ஆட்சியில், திரு. பொன்முடி நிர்வாகத்தில் ஏற்பட்ட இழப்பு 1,498.21 கோடி ரூபாய் ஆகும். எங்கள் 5 ஆண்டுக்கால ஆட்சியில் 204.66 கோடி ரூபாய் மட்டுமே மொத்த இழப்பு – ஆனால் 5 ஆண்டுக்கால தி.மு.க. ஆட்சியில் மொத்த இழப்பு 1,498.21 கோடி ரூபாய்! இதுதான் திரு. பொன்முடி அவர்களின் நிர்வாகத்தின் லட்சணம்!

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்கு தெரிந்திருக்கும். முந்தைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், புதிய பேருந்துகள் வேண்டும் என கோரிக்கை வந்த போதெல்லாம், அவைகள் அனுமதிக்கப்பட்டு, பேருந்துகள் செல்லாத கிராமங்களே இல்லை, என்ற நிலை இருந்தது. நான் பங்கேற்ற ஒவ்வொரு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிலும், புதிய பேருந்து வழித்தடங்களைத் தொடங்கி வைப்பது, கண்டிப்பான ஓர் அம்சமாக இருந்தது. நானே நூற்றுக்கணக்கான வழித்தடங்களில், புதிய பேருந்துகளை இயக்கி வைத்து இருக்கிறேன். ஆனால், போக்குவரத்துத் துறை அமைச்சராக, திரு. பொன்முடியை வைத்து நிர்வாகம் செய்த, திராவிட முன்னேற்றக் கழக அரசு, 2001 ஆம் ஆண்டு வரை, சேர்த்து வைத்து விட்டுப்போன மொத்த இழப்பீடு, 2,031.18 கோடி ரூபாயாகும். இது தான் திரு. பொன்முடி அவர்களின் நிர்வாகத் திறமையின் லட்சணம்!

1991–லிருந்து 1996 வரை, எனது முந்தைய ஆட்சியின் போது, அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மாற்றம் செய்யப்பட்டன. வழித்தடங்களில் பழுதடைந்து, நின்று போன பேருந்துகளைப் பார்ப்பதே அரிது. பணிமனைகளிலும், பழுதடைந்த பேருந்துகள், குறைவாகவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. பேருந்துகளின் தூய்மை பராமரிக்கப்பட்டு, பயணிகளின் வசதிகளும் சிறப்பாகப் பேணப்பட்டன. அப்படி இருந்த நிலை போய், 1996 ஆம் ஆண்டு முதல், 2001 ஆம் ஆண்டு வரை நடந்த தி.மு.க. ஆட்சியில், ஓட்டை உடைசல் பேருந்துகளே அரசு போக்குவரத்துக் கழகங்கள் வசம் இருக்கின்றன என்ற மோசமான நிலை ஏற்படுத்தப்பட்டது. 8 அல்லது 9 வருடங்கள் கடந்தும் கூட, பேருந்துகள் Replace செய்யப்படாத, மாற்றப்படாத நிலை தொடர்ந்தது. மழைக் காலங்களில் ஒழுகும் பேருந்துகளாகவும், வழியில் நின்று போய்விடும் பேருந்துகளாகவுமே, அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் விளங்கின. இப்படிப்பட்ட நிலை, எங்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டதே இல்லை. திரு பொன்முடியின் நிர்வாகத்தில் தான், இத்தகைய பரிதாபமான நிலை ஏற்பட்டது.

முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில், அரசு போக்குவரத்துக் கழகங்களின் இயக்கத்தில் இருந்த, ஏறத்தாழ 16,000 பேருந்துகளில், ஏறத்தாழ 4,900 பேருந்துகள், ஓட்ட முடியாத நிலையில், பணிமனையில் முடக்கி வைக்கப்பட்டுக் கிடந்தன. அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், சோபிதம் இழந்து போயின.

அரசு போக்குவரத்துக் கழகங்களை, இப்படி சீரழித்த திரு. பொன்முடிக்கு, எங்களுடைய நிர்வாகத் திறமையைப் பற்றி பேசுவதற்கு, அருகதையே கிடையாது என்று அதனால் தான் கூறுகிறேன்.

பேருந்துக் கட்டணத்தை சமீபத்தில் ஏற்றிய பிறகு, அரசு போக்குவரத்துக் கழகங்கள், லாபத்தில் தானே இயங்கி வருகின்றன ? அதனால் போக்குவரத்துக் கழகங்களை, தனியார்மயமாக்க வேண்டிய அவசியம் இல்லை, என்ற ஒரு கருத்தை, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி இங்கே தெரிவித்தார்.

பேருந்துக் கட்டண விகிதத்தை ஏற்றியவுடனேயே, அரசு போக்குவரத்துக் கழகங்கள், லாபத்தில் இயங்கத் தொடங்கிவிடும் என கூறுவது, சிறுபிள்ளைத்தனமான கூற்று.

அரசு போக்குவரத்துக் கழகங்களைப் பற்றி, இந்த அ.இ.அ.தி.மு.க. அரசின் கொள்கையை, இந்த தருணத்தில், தெளிவாக எடுத்துக் கூற விரும்புகிறேன். அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், ஒரு போதும் தனியார்மயம் ஆக்கப்பட மாட்டாது என்பதை, இந்த சமயத்தில் கூற விரும்புகிறேன். லாபத்தில் இயங்கும் அரசு நிறுவனங்களை, தனியார்மயமாக்க, நாங்கள் ஒன்றும் முட்டாள்கள் இல்லை. ஏற்கெனவே தி.மு.க. ஆட்சி, அரசுப் போக்குவரத்து கழகங்களில், வைத்து விட்டுப் போன நஷ்டத்தை ஈடு செய்ய, என்ன வழிமுறை உள்ளது என்று, விரிவாக ஆராய்ந்து பார்த்தோம். ஓரளவுக்குப் பேருந்துக் கட்டண உயர்வை அமல்படுத்தி, அந்தப் பெருத்த நஷ்டத்தை, சற்று குறைத்திருக்கிறோம் – அவ்வளவுதான். அதற்கு மேலாக, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமாக உள்ள, சில வழித்தடங்களில், தனியார் பேருந்துகளை அனுமதிக்கலாம், என முடிவெடுத்துள்ளோம்.

தி.மு.க. ஆட்சியில் திரு. பொன்முடி செய்தது போல, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்குப் போட்டியாக, மினி பஸ்களை அனுமதித்து, அரசு பேருந்துகள் வருமானம் ஈட்டாமல் செய்து, அவற்றை அப்படியே நிறுத்திவிட, நாங்கள் ஒரு போதும் முனையவில்லை – முனையவும் மாட்டோம். தி.மு.க ஆட்சியில் கொண்டு வந்த திட்டம் என்றாலும், மினி பஸ்களை நாங்கள் எடுத்துவிடவில்லை. மினி பஸ்கள் என்ன, அரசு போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்ததா ? ஏறத்தாழ 4,000 மினி பஸ்கள், தமிழ்நாட்டில் வலம் வருகின்றனவே ? அவை யாருக்குச் சொந்தமானவை ? அவை தனியாருக்குச் சொந்தமானவை இல்லையா ?

அரசுப் பேருந்துகளை நஷ்டத்தில் ஓடச் செய்து, 4000 மினி பஸ்களை அனுமதித்து, தனியாரை ஊக்குவித்தது யார் ? தி.மு.க.அரசு தானே ? அன்றைய போக்குவரத்துத் துறை அமைச்சர் பொன்முடி அவர்கள் தானே ?

மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன்குடம். நன்றாக இருக்கிறது திரு பொன்முடி அவர்களின் வாதம்.

இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாக, தமிழக மக்களுக்கு ஒரு உத்தரவாதத்தை, நான் அளிக்க விரும்புகிறேன். ஏற்கனவே, இந்திய நாட்டிலேயே, தமிழ்நாட்டில் மட்டும் தான், எல்லா ஊர்களும், பேருந்து வழித்தடங்களால் இணைக்கப்பட்டுள்ளன, என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது தமிழ்நாடு. ஆகவே, சில வழித்தடங்களில், தனியார் பேருந்துகள் அனுமதிக்கப்படுவதால், கிராமப்புற மக்களுக்கு, பாதிப்பு ஏற்படுகின்ற சூழ்நிலை அமைவதை, ஒரு போதும் இந்த அரசு அனுமதிக்காது. சில வழித்தடங்கள் லாபகரமாக இல்லாததால், அவற்றில் தனியார் பேருந்துகள் ஓடவில்லை என்றால் – அத்தகைய வழித்தடங்களில், அரசுப் பேருந்துகள் கண்டிப்பாக இயக்கப்படும் என்பதை, இந்த அவை வாயிலாக, தமிழக மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களைப் பொருத்தவரை, 2000–2001 ஆம் ஆண்டில், ரொக்க இழப்பு, 75 கோடி ரூபாய் என்று, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி கூறியுள்ளார். அது வெறும் வார்த்தை ஜாலம். Statistical Jugglery தான். புள்ளி விவரங்களை வைத்து, வித்தை காட்டுவது மட்டுமே ஆகும் அது.

மாண்புமிகு நிதியமைச்சர் குறிப்பிட்டது போல, Transport Development Finance Corporation–க்கு மட்டும் – போக்குவரத்து மேம்பாட்டு நிதிக் கழகத்திற்கு மட்டும், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், இன்னும் 1,024 கோடி ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடந்த, நிர்வாகச் சீர்கேடுகளின் காரணமாக, வாங்கப்பட்ட டீசலுக்கு கூட, கிட்டத்தட்ட 342 கோடி ரூபாய், Indian Oil Corporation போன்ற அமைப்புகளுக்கு, நிலுவை வைத்துவிட்டுப் போய் விட்டார்கள். ஆகவே, கட்டண உயர்விற்குப் பிறகும் கூட, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தத்தளிக்கின்ற நிலையிலேயே உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், இந்த அரசு எடுத்துள்ள சில சிக்கன நடவடிக்கைகளால், சில போக்குவரத்துக் கழகங்கள், தொடர்ந்து நஷ்டத்தில் இயங்காமல் இருக்குமாறு, பார்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. மொத்தமுள்ள 18 அரசுப் போக்குவரத்துக் கழக அமைப்புகள், 7 ஆக குறைக்கப்பட உள்ளன. இதனால் நிர்வாகச் செலவுகள், பெருமளவில் குறையும்.

இது போன்ற ஒரு சீரமைப்பு நடவடிக்கை தான், தெரிந்தெடுக்கப்பட்ட சில வழித்தடங்களில், தனியார் பேருந்துகளை இயக்க அனுமதிப்பதாகும். ஆகவே, எங்கள் அரசின் இந்தக் கொள்கையை, குறை கூறுவதற்கு, முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. பொன்முடி அவர்களுக்கு, எந்தத் தகுதியும் இல்லை.

மேலும், தனியார் மயமாக்குதல் – Privatisation பற்றி, தி.மு.க–வின் இரட்டை வேடத்தைத் தோலுரித்துக் காட்ட விரும்புகிறேன். தி.மு.க–விற்கு இந்தக் கொள்கையில், எப்போதுமே இரட்டை வேடம், இரட்டை நாக்கு, இரட்டை முகம் தான். மத்தியில் ஒரு கொள்கை, மாநிலத்தில் ஒரு கொள்கை. இலாபத்தில் இயங்கி வரும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தை, தனியார் மயமாக்கத் துடிக்கிறது, தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய அரசு. இதை எதிர்த்து, தி.மு.க. குரல் கொடுக்காதது ஏன் ? இதை எதிர்ப்பதற்கு, தி.மு.க.விற்கு திராணி இருக்கிறதா ? ஆனால், நஷ்டத்தில் இயங்கி வரும், அரசு போக்குவரத்துக் கழகங்களின், சில வழித்தடங்களில், தனியார் பேருந்துகளை அனுமதிக்க, இந்த அரசு முடிவெடுத்தால், உடனே அதைத் தனியார் மயமாக்கல் எனக் கூறி, அதை எதிர்த்துக் கூக்குரல் எழுப்புவது, எந்த வகையில் நியாயம் ?

எங்களைக் குறை கூறுவதற்கு முன்பு, உங்களைச் சரி பார்த்துக் கொள்ளுங்கள் என்பது தான், திரு. பொன்முடி அவர்களுக்கு நான் கூற விரும்புகின்ற அறிவுரை.

மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி, கடந்த ஆண்டு நிகழ்த்தப்பட்ட ஆளுநர் உரையிலும், இந்த ஆண்டுக்குரிய ஆளுநர் உரையிலும், ஒரே மாதிரியான சில அறிவிப்புகள், திரும்பத் திரும்ப வருவதாகக் குறை கூறியுள்ளார்.

முல்லைப் பெரியார் அணையின் உயரத்தை உயர்த்த, கேரள அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்று, சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலும், இந்த ஆண்டு ஆளுநர் உரையிலும், குறிப்பிடப்பட்டுள்ளதாக, அவர் குறை கூறியுள்ளார்.

முல்லைப் பெரியார் அணையின் உயரத்தை உயர்த்தும் பிரச்சனை, இன்னும் நிலுவையில் தானே உள்ளது?

இது குறித்து கேரள அரசுடன், கடந்த ஆண்டு தொடர்பு கொண்டுள்ளோம். தொடர்ந்து, இந்த ஆண்டும், அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவோம், என்று கூறியுள்ளோம். இதில் என்ன தவறு இருக்கிறது?

முல்லைப் பெரியார் அணைப் பிரச்சனை பற்றி, ஆளுநர் உரையில், குறிப்பிடாமல் நாங்கள் விட்டிருந்தால், திரு. பொன்முடியே, "ஏன் குறிப்பிடவில்லை" என்று அப்போதும் குறை கூறி இருப்பார்.

அதே போன்று தான், கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல் பற்றிய அறிவிப்பு. சென்ற ஆண்டு நடத்த, திட்டமிடப்பட்டிருந்த கூட்டுறவு அமைப்புத் தேர்தல், பல்வேறு காரணங்களால், நடத்த முடியாமல் போனது. ஆகவே, அந்தத் தேர்தல்களை, இப்போது நடத்த இருக்கிறோம், என்று குறிப்பிட்டுள்ளோம். அதை நாங்கள் குறிப்பிடவில்லை என்றால், ஏன் குறிப்பிடவில்லை என்று திரு. பொன்முடி அவர்களும் திரு. துரைமுருகன் அவர்களும் கேட்டு இருப்பார்கள்.

அதே போன்று, சேது சமுத்திர திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று, சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலும் கூறியுள்ளோம், மீண்டும் இந்த ஆண்டும் அதையே கூறியுள்ளோம் என்று, அதையும் திரு. பொன்முடி அவர்கள் குறை கூறியுள்ளார்.

தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய அரசு, "சேது சமுத்திர திட்டத்திற்கு" ஒப்புதல் வழங்கி, பெருமளவில் நிதி ஒதுக்கி, திட்டத்தை அமல்படுத்தத் தொடங்கி விடுமேயானால், எந்த ஆண்டில் மத்திய அரசு அதை செய்கிறதோ, அந்த ஆண்டில் இருந்து, ஆளுநர் உரையில் இதைக் குறிப்பிடாமல் விட்டுவிடுவோம் என்பதை, திரு. பொன்முடி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவருக்கும் ஆரோக்கியமான வளமான வாழ்வு, அமைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற, இந்த அரசின் தொலைநோக்கினை எய்திட, 15 அம்சங்கள் கொண்ட திட்டம் ஒன்றைச் செயல்படுத்த, இந்த அரசு எண்ணி உள்ளதாக, மேதகு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், திருவாளர்கள் பரிதி இளம்வழுதி, பொன்முடி போன்ற, கற்பனைத் திறன் வாய்ந்த, சில மாண்புமிகு உறுப்பினர்கள், இந்தத் திட்டத்தைக் கூட கேலியும் கிண்டலும் செய்துள்ளார்கள். இது என் கற்பனையில் உதித்த திட்டம் என்று கருதுகிறார்கள் போலும். அதனால் தான் இதைக் கிண்டல் செய்திருக்கிறார்கள்.

என் கற்பனையில் உதித்த திட்டம் அல்ல இது.

தமிழகத் திட்டக் குழுவின், துணைத் தலைவராகப் பணியாற்றும், டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள், ஓர் உலகப் புகழ்பெற்ற வேளாண்மை விஞ்ஞானி. அவர் பல்வேறு நாடுகளின் அனுபவங்களில் இருந்து பெற்ற, விஞ்ஞான அடிப்படையிலான ஒரு திட்டத்தை, என்னுடைய பரிசீலனைக்கு அளித்தார். அந்தத் திட்டத்தில் உள்ள, மேன்மையான அம்சங்களைப் புரிந்து கொண்ட நான், அந்தத் திட்டத்தை, இந்த அரசினுடைய நெடுங்காலத் திட்டமாக ஏற்றுக் கொள்ளச் செய்திருக்கிறேன். அதில் தவறு ஒன்றும் இல்லையே? முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்திலும், டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள், பசிப் பிணி இல்லாப் பகுதித் திட்டம், என்ற ஒரு திட்டத்திற்கு, ஆலோசகராகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டார். மேலும், உயிரி தொழில்நுட்பக் கொள்கை, Bio Technology Policy உருவாக்குவதற்கு, இவருடைய தலைமையில், ஒரு உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது.

இப்படி, முந்தைய தி.மு.க. ஆட்சியில், பயன்படுத்திக் கொள்ளப்பட்ட, ஒரு உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி தயாரித்த திட்டம், உருப்படாத திட்டமா?

அவருக்கு ஒன்றும் தெரியாது, என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பரிதி இளம்வழுதியும், பொன்முடியும் கூறுகிறார்களா?

நல்ல எண்ணத்தின் அடிப்படையில், கொடுக்கப்பட்ட டாக்டர் சுவாமிநாதன் அவர்களது திட்டத்தை, நாங்கள் இதய சுத்தியோடு செயல்படுத்த விரும்புகிறோம்.

தி.மு.க ஆட்சியால், சரியாக, முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாத, ஒரு சமூக விஞ்ஞானியை, நாங்கள் மதித்து, அவருடைய திட்டத்தை, முழுமையாக செயல்படுத்த முன் வந்துள்ளோம்.

அதற்கு, வாய்ப்பை நழுவ விட்ட தி.மு.க.வினர், ஏன் வீணாக முகாரி பாடுகிறார்கள் ? என்று புரியவில்லை.

அடுத்து Gender Equity — பாலின நேர்மை நெறியின் அடிப்படையில், பாலினப் பாகுபாட்டை நீக்குகின்ற வகையில், ஆண் பெண் விகிதாச்சார முரண்பாடுகள், களையப்படும் என, மேதகு ஆளுநர் உரையில், கூறப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டு, என்னுடைய அமைச்சரவையில் பெண்களுக்கு, 33 சதவீத இட ஒதுக்கீடு இல்லையே, என ஆதங்கப்பட்டு இருக்கிறார், மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி.

திரு. பொன்முடிக்கு, Gender Equity பற்றிப் பேச, தார்மீக உரிமை இல்லை.

எனது அமைச்சரவையில், பெண்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் இல்லை என்று குறை கூறும் திரு. பொன்முடியின் கட்சியில், தி.மு.க. வரிசையில், பெண் M.L.A–க்களே இல்லையே ? ஒரு பெண் எம்எல்ஏ கூட இல்லையே ?

Gender Equity பற்றி திரு. பொன்முடி பேசலாமா ?

பெண்களுக்கு 33 சதவீத கட்சிப் பொறுப்புகளை, முதன்முதலில் ஒதுக்கியது, நான் தலைமை ஏற்றுள்ள, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான். கிளைக் கழகம், ஒன்றியக் கழகம், பேரூராட்சிக் கழகம், நகரக் கழகம், மாவட்டக் கழகம், செயற் குழு, பொதுக் குழு உட்பட, கழகத்தின் அனைத்து அமைப்புகளிலும், அனைத்து level-களிலும், மட்டங்களிலும், 33 சதவீத அளவிற்குப் பெண்கள், பொறுப்புகளில் அமர்த்தப்பட்டு இருப்பது, நான் தலைமை வகித்து வழிநடத்தும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் மட்டும் தான் என்பதை, மாண்புமிகு உறுப்பினர் திரு பொன்முடி அவர்கள் அறிவாரா ?

அவரா Gender Equity பற்றிப் பேசுவது ?

எனது முந்தைய ஆட்சியின் போது, இந்தியாவிலேயே முதன் முதலாக, திருமதி. வசந்தகுமாரி என்ற பெண்ணை, கனரக வாகன ஓட்டுநர் பதவிக்கு, அரசு போக்குவரத்துக் கழகத்தில், பணியில் அமர்த்தினேன். அந்தச் சாதனையைப் புரிந்தது அ.இ.அ.தி.மு.க. அரசு தான். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்பில் இருந்து இறங்கியவுடன், அந்தப் பெண்மணிக்கு பல இடையூறுகள் கொடுத்து, அவரைப் பணியில் இருந்து அகற்ற, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது, தி.மு.க. அரசு. நான் மீண்டும் தமிழக முதலமைச்சராக, பதவி ஏற்ற பிறகு தான், அந்தப் பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அநீதியை, அண்மையில் களைந்தேன்.

என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில், உலகத்திற்கே முன்னோடித் திட்டமாக, நான் தொடங்கிய 52 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, பின்னர் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு, முடக்கிப்போட்டது. வெளிநாட்டவரும் பாராட்டிப் பின்பற்றிய, அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, தி.மு.க. அரசு புறக்கணித்தது. அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் இருந்த, மேஜை நாற்காலிகளைக் கூட அகற்றி, அங்கே பணியாற்றிய பெண் காவல் துறையினரை, கட்டாந்தரையில் அமர வைத்தார்கள். அப்படிச்செயல்பட்டது தி.மு.க அரசு. உயர் அதிகாரிகள் யாரும், அந்தக் காவல் நிலையங்களை, பார்வையிடக்கூடாது எனத் தடுத்தது தி.மு.க. அரசு. அனைத்து மகளிர் காவல் நிலையங்களை நான் தொடங்கினேன் என்ற ஒரே காரணத்தினால், அவற்றில் பணிபுரிந்த பெண் காவல் துறையினரை, தீண்டத் தகாதவர்களைப் போல் நடத்தியது தி.மு.க.அரசு. அந்த தி.மு.க. அரசில் மந்திரியாக இருந்த திரு. பொன்முடி அவர்கள் – Gender Equity பற்றிப் பேசலாமா ? அது அடுக்குமா ?

நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த பிறகு தான், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் புத்துயிர் பெற்றுள்ளன. வரும் ஆண்டுகளில், ஒவ்வொரு காவல் துறை உட்கோட்டத்திற்கும், ஓர் அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைக்கப்படும் என்ற வகையில், 184 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இனி தமிழகத்தில் இயக்கப்படும்.

அடுத்தபடியாக, Tamil Nadu Public Service Commission-ன் Chairperson - ஆக, தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் தலைவராக, முதன் முதலாக ஒரு பெண்மணியை, அதுவும் ஒரு இஸ்லாமியப் பெண்மணியை அமர்த்தியது, இந்த அரசு தான் என்பதை, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடியின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதே போல, Tamil Nadu Wakf Board -க்கும் தமிழ்நாடு வக்ப் வாரியத்திற்கும், முதன் முதலாக ஒரு பெண்மணியை, தலைவராகப் பதவி ஏற்கச் செய்து, சாதனை புரிந்ததும் இந்த அரசு தான்.

திரு. பொன்முடியா Gender Equity பற்றிப் பேசுவது ? அவர் பேசலாமா ?

கடந்த 1991 ஆம் ஆண்டு முதல், 1996 ஆம் ஆண்டு வரை, நாங்கள் ஆட்சியில் இருந்த போது, ஒரு இலட்சம்

**(தொடர்ச்சி 45ஆம் பக்கம்)**



# சங்கரலிங்கபுரம் கிராமத்தில் தமிழக முதலமைச்சர்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 30.3.2002 அன்று தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த சங்கரலிங்கபுரம் கிராமத்திற்குச் சென்று, அண்மையில் அப்பகுதியில் நிகழ்ந்த சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட, 145 நபர்களுக்கு மொத்தம் ரூ.13,33,700 மதிப்பிலான நிவாரண உதவிகளை நேரில் வழங்கி அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் வட்டத்தைச் சேர்ந்த சங்கரலிங்கபுரம் கிராமத்தில், உள்ளாட்சித் தேர்தலையொட்டி ஏற்பட்ட வன்முறையைத் தொடர்ந்து 16.11.2001 அன்று நிகழ்ந்த சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட வீடுகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 30.3.2002 அன்று நேரில் சென்று பார்வையிட்டார். அப்போது அங்கு கூடியிருந்த மக்கள், அந்த சம்பவத்தால் நிகழ்ந்த விளைவுகளை முதலமைச்சர் அவர்களிடம் கதறியழுதவாறு தெரிவித்தார்கள். இதனைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள், சம்பவத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு சென்று வீட்டிலுள்ளவர்களிடம் அவர்களது குறைகளை மிகவும் பரிவுடன் கேட்டறிந்தார். மேலும் பாதிக்கப்பட்ட மக்களிடம் பேசும்போது, ''பல்வேறு பணிகளுக்கு இடையேயும் உங்களது குறைகளைக் கேட்கவும் நிவாரண உதவிகளை வழங்கவும் சென்னையில் இருந்து நேரடியாக வந்துள்ளேன்'' என்றும் குறிப்பிட்டார். அதனைத் தொடர்ந்து அந்த பகுதியில் உள்ள நல்மேய்ப்பர் கிறிஸ்தவ தேவாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில், சம்பவத்தால் பாதிக்கப்பட்ட சங்கரலிங்கபுரம் மற்றும் சல்லிசெட்டிபட்டி கிராம மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார். தமிழக முதலமைச்சர் அவர்கள், அச்சம்பவத்தில் பொருட்கள் சேதம் அடைந்த 133 நபர்களுக்கு ரூ.11,76,900/– மதிப்பில் நிவாரண உதவிக்கான காசோலைகளையும், வீடுகள் மற்றும் பொருட்கள் சேதம் அடைந்த 8 நபர்களுக்கு ரூ.1,36,800/

– மற்றும் வீடுகள் மட்டும் சேதமடைந்த 4 பேருக்கு ரூ.20,000/– மதிப்பில் நிவாரண உதவிக்கான காசோலைகளையும் வழங்கினார். ஆக மொத்தம் ரூ.13,33,700 மதிப்பில் நிவாரணம் உதவிகள் காசோலைகளாக தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

பின்னர் சங்கரலிங்கபுரம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில், மிக எளிமையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த



நிகழ்ச்சியில் தமிழக முதலமைச்சர் அவர்கள் மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். அப்போது, "இந்த பகுதியில் அண்மையில் விரும்பப்படாத நிகழ்வுகள் நடந்ததைப்பற்றிக் கேள்விப்பட்டேன். சுமூகமான தீர்வு காண வேண்டும் என்பதற்காக தொடர்புடைய இரு பிரிவினரையும் சற்று நேரத்திற்கு முன் சந்தித்துவிட்டு குறைகளைக் கேட்டு ஆறுதல் கூறிவிட்டு வந்துள்ளேன். அதுபோல உங்களது குறைகளையும், கோரிக்கைகளையும் கேட்பதற்காக இங்கு வந்துள்ளேன். இதற்கு முன்பு பல கசப்பான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. அவற்றையே பேசிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை. நீங்கள் கொடுத்த கோரிக்கை மனுக்களின் அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்கும். எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் இந்த பகுதியில் அமைதி நிலவ ஒத்துழைப்பு நல்கவேண்டும். சகஜநிலை ஏற்பட வேண்டும்'' என்று தெரிவித்தார். தொடர்ந்து சங்கரலிங்கபுரம் மற்றும் சல்லிசெட்டிப்பட்டி கிராமங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் திரு. பி.ஞானபிரகாசம், திருமதி. டி.சீதாலட்சுமி, திரு. ஆர்.பாலகிருஷ்ணன், திரு. கே.முருகேசன், திருமதி. ஏ. சூரியகலா ஆகியோர் ஊர் மக்களின் சார்பாக தங்களின் குறைகளை தமிழக முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக் கூறினார்கள்.

பின்னர் முதலமைச்சர் அவர்கள், 16.11.2001 அன்று ஏற்பட்ட சம்பவத்தில் மரணமடைந்த, காவல் துறையைச் சேர்ந்த திரு.க.முருகன் குடும்பத்தினரையும், அப்போது நடைபெற்ற தாக்குதலில் காயமடைந்த காவலர்கள் திரு. பு.இசக்கி, திரு. அ.சீனிவாசன் மற்றும் சி.தேவராஜ் ஆகியோரது குடும்பத்தினரையும் சந்தித்து ஆறுதல் கூறினார். இனிவரும் காலங்களில் எக்காரணம் கொண்டும் சாதி மத மோதல்களில் ஈடுபட வேண்டாம் என்றும் எந்தப் பிரச்சனையானாலும் கூடிப்பேசி சமரசத் தீர்வு காண வேண்டும் என்றும் அங்கு கூடியிருந்த அனைவரிடமும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவுரை கூறினார். மேலும் அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. எஸ்.கருப்பசாமி, மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் திரு அனிதா ஆர். இராதா கிருஷ்ணன், திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சண்முகநாதன், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.எச்.பாண்டியன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.முருகேசன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு. என்.கே.பெருமாள், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவபெருமாள், தமழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. பி.சங்கர், பொதுத்துறைச் செயலர் டி.பிச்சாண்டி, காவல்துறை தலைவர் திரு.நெயில்வால், தென்மண்டல காவல்துறை தலைவர் திரு. ஆர்.பாலசந்திரன், திருநெல்வேலி சரக காவல் துறை துணைத் தலைவர் திரு. டி.இராஜேந்திரன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரா. தியாகராஜன், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. சுமித் சரண் மற்றும் அரசு அதிகாரிகளும், பொது மக்களும் கலந்து கொண்டனர்.

## சங்கரலிங்கபுரம் கிராமத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் முன்பு

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை



"மனநிம்மதியுடன் எந்த அச்ச உணர்வுமின்றி, நல்வாழ்க்கை வாழ வேண்டும், அதற்கு அரசால் இயன்ற உதவிகளும் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம் ஆகும். விருப்பம் ஆகும். அரசு செய்ய வேண்டிய கடமையை நிச்சயமாக செய்யும். உங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய பாதுகாப்பை நிச்சயமாக அளிப்போம். ஆகவே, நீங்கள் யாரும் கவலைக் கொள்ள தேவையில்லை. எந்தவிதமான அச்ச உணர்வுக்கும் உங்கள் மனதில் நீங்கள் இடம் கொடுக்கத் தேவையில்லை. உங்களுக்கு நான் விடுக்கின்ற கோரிக்கை இதுதான்.

எத்தனையோ கசப்பான சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன. ஆனால் அவற்றையே நினைத்துக் கொண்டிருந்தால், அவற்றையே பேசிக் கொண்டிருந்தால் அமைதி திரும்ப வாய்ப்பு இல்லாமல் போய் விடும். ஆகவே, கொடுத்த புகார்களின் அடிப்படையில், நீங்கள் கொடுத்துள்ள கோரிக்கை மனுக்களின் அடிப்படையில் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்கும் என்ற உத்திரவாதத்தை உங்களுக்கு அளிக்கிறேன். ஆனால், இங்கே அமைதி நிலவ வேண்டும். இங்குள்ள மக்கள் அனைவரும், எந்த இனத்தைச் சேர்ந்த மக்களாக இருந்தாலும், ஒற்றுமையுடன் நல்வாழ்வு வாழ வேண்டும். இங்கே மீண்டும் அமைதி திரும்புவதற்கு, ஒரு சகஜ நிலைமை இங்கே மீண்டும் ஏற்படுவதற்கு, நீங்கள் அனைவரும் உங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, உங்களுக்கு நான் விடுக்கின்ற கோரிக்கை இதுதான். நடந்தவற்றை எல்லாம் மறந்துவிடுங்கள். நடந்த கசப்பான நிகழ்வுகளை எல்லாம் ஒதுக்கி விடுங்கள், மறந்து விடுங்கள். நடந்தவை நடந்தவைகளாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவைகளாக இருக்கட்டும். நான்ஏற்கெனவே சொன்னது போல், ஒரு புறக்காவல் நிலையம் இங்கே தொடங்கப்படும். உங்களுக்குத் தேவையான பாதுகாப்பு அளிக்கப்படும். உங்களுடைய மற்ற கோரிக்கைகளும் கனிவுடன் பரிவுடன் பரிசீலிக்கப்படும். தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆனால், நடந்தவற்றையை பேசிக் கொண்டிருந்தால், என்றைக்குமே அமைதி திரும்ப வழியில்லாமல் போய்விடும். ஆகவே, அனைவரும் இங்கே நல்வாழ்வு வாழ நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு நீதி வழங்க, உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க நான் இருக்கிறேன். அரசு இருக்கிறது.

இனிமேல் உங்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையில் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். இப்போது, ஒரு புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் இங்கே நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் அடிக்கடி இங்கே வந்து உங்களை எல்லாம் சந்திப்பார். உங்களுக்கு எந்தக் குறை இருந்தாலும், அவரைச் சந்தித்து நீங்கள் தாராளமாக தெரிவிக்கலாம். இது தான் இன்றைக்கு நான் உங்களுக்கு விடுக்க விரும்புகின்ற செய்தியாகும்.

நடந்தவைகளை எல்லாம் மறந்துவிடுங்கள். அதையே பேசிக்கொண்டிருந்தால் என்றைக்குமே நாம் முன்னேற முடியாது. ஆகவே, தமிழ் நாட்டை இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக்க வேண்டும் என்பது தான் இந்த அரசினுடைய எண்ணம், லட்சியம். அந்த லட்சியம் ஈடேற நீங்கள் அனைவரும் உங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டும். நீங்கள் அனைவரும், எல்லா வேற்றுமைகளையும் மறந்துவிட்டு, ஒதுக்கி விட்டு, அனைவரும் சகோதர பாசத்துடன் வாழ வேண்டும். அதற்கு இங்குள்ள பெரியவர்களும், இளைய தலைமுறையினருக்கு வழிகாட்ட வேண்டும் என்றும் உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, மீண்டும் உங்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு முழுமையான பாதுகாப்பு அளிக்க வேண்டியது அரசின் கடமையாகும். அதை நிச்சயமாக செய்வோம்.

ஆகவே நீங்கள் அனைவரும் உற்சாகத்துடன், மனநிம்மதியுடன், எந்தக் கவலையும் அச்சமும் இல்லாமல் எப்போதும் போல் சகஜ வாழ்க்கை நடத்த வேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக் கொண்டு உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

• • •

# அன்னம் ஊட்டும் தெய்வ மணிக்கை




– கவிஞர் இளந்தேவன்

'அன்னம் ஊட்டிய தெய்வ மணிக்கையின்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்'
- என்று பாரதி முழங்கினான் அன்று!

அன்னம் ஊட்டும் தெய்வ மணிக்கை
புரட்சித் தலைவியின் பொற்கரம் ஆகும்!
அன்ன தானத் திட்டம் தொடக்கம்
ஆன்மிக தத்துவம் அதிலே அடக்கம்!
இறைய ருளோடு உணவையும் வழங்கும்
அருள்மிகு திட்டம் அன்னதானம்!

ஏழைக்குச் சோறாய் இறைவன் இருக்கிறான்
என்பது தானே உண்மை ஆன்மீகம்!
எல்லோர்க்கும் இறைவன் சோறாய் இருக்கிறான்
என்று தேவாரம் அன்றைக்கே சொன்னது!
'அன்னம் ஆனாய் நீயே!' என்பது
அப்பர் அடிகளின் அமுத வாக்கு!



பசிஎனப் படுவது இரைப்பை நெருப்பு
இரைப்பை நெருப்பு எதைஎதை எரிக்கும்?
குடலை எரிக்கும்! குடல்குடி கொண்ட
உடலை எரிக்கும்! உயிரையே எரிக்கும்!
பக்தர்க்கு அன்னம் பாலிப்பது என்பது
ஆன்மீகத் துக்கே சத்துணவு அளிப்பது!

ஆலயம் என்பது சமூக நிலையம்
அறப்பணி செய்வதே அதன்முதற் கடமை!
அறப்பணிச் சிகரம் அன்ன தானம்;
அதைத் தொடங் கியது அன்னையின் ஞானம்!

பாரகம் எங்கும் பசிப்பிணி நீக்க
மறுபடி வந்த மணிமேக லைத்தாய் -
புரட்சித் தலைவி பொற்கரம் வாழ்க!

# திருக்கோயில்களில்

# அன்னதானத்திட்டம்

*"மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்"*

– பெரிய புராணம்

இறையருள் வேண்டி ஆலயங்களுக்கு வரும் பக்தர்களுக்கு இறையருளோடு அடியார்களுக்கு பசியாற்றுதல் என்ற பெரிய புராண கூற்றுப்படி மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை அறிவித்தார்.

திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு நாள்தோறும் மதிய உணவு வழங்கும் அன்னதானத் திட்டத்தை சென்னை, மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கற்பகாம்பாள் உடனுறை அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் 23–3–2002 அன்று நண்பகல் 12–15 மணியளவில் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.



தமிழகத்தில் 63 திருக்கோயில்களில் முதற்கட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. முக்கியத் திருக்கோயில்களில் தொடங்கப்பட்டுள்ள "அன்னதானத் திட்டம்'' படிப்படியாக மற்ற ஆலயங்களுக்கு விரிவுப்படுத்தப்படவுள்ளது. சென்னையில் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் – மைலாப்பூர், அருள்மிகு வடபழனியாண்டவர் திருக்கோயில், அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில் – திருவல்லிக்கேணி, அருள்மிகு வடிவுடையம்மன் திருக்கோயில் – திருவொற்றியூர் ஆகிய இடங்களில் அன்னதானத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

பக்தர்கள் செலுத்தும் காணிக்கை கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. அதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படும் திருக்கோயில்களில் "அன்னதானத் திட்ட உண்டியல்'' ஒன்று தனியாக வைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் அன்னதானத் திட்டம் தொடங்கி வைக்கப்படுவதன் அடையாளமாக முதலில் ரூ.6000–த்தை அன்னதான உண்டியலில் காணிக்கையாகச் செலுத்தினார். பொதுமக்களும் இத்திட்டத்தின் சிறப்பை அறிந்து போட்டி போட்டுக் கொண்டு தங்கள் காணிக்கையை செலுத்தினார்கள்.

பின்னர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் உள்ள மண்டபத்தில் பக்தர்களுக்கு அன்னம் பரிமாறப்பட்டது. முதலில் முதலமைச்சர் அவர்கள் திருக்கரத்தால் பக்தர்களுக்கு உணவு பரிமாறப்பட்டு இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. தொடக்க நாளில் ஏறத்தாழ 2,000 பக்தர்களுக்கும் மேலாக அன்னதானம் வழங்கப்பட்டது. வசதியாகச் சாப்பிடும் வகையில் மேசை, நாற்காலி போடப்பட்டு பக்தர்களின் வயிறு நிறையும் வரை உணவு வழங்கப்பட்டது.

திருக்கோயில்களில் அன்னதானம் தினமும் வழங்கப்படுகிறது. நண்பகல் 12 மணியளவில் உச்சிகால பூசை முடிந்த பின்னர் அன்னதானம் வழங்கப்படும்.

தினமும் ஒரு பொறியல், சாம்பார், ரசம், ஊறுகாய் உட்பட ரூ.15 மதிப்புள்ள உணவு பரிமாறப்படும். இத்திட்டத்திற்காக வங்கியில் தனியாக ஒரு கணக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. பக்தர்கள் தங்கள் காணிக்கையை வங்கிக் காசோலை மூலமாகச் செலுத்தவும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 23–ம் தேதி தமிழகம் முழுவதும் 63 கோயில்களில் அன்னதானத் திட்டம் தொடங்கப்பட்டது. அன்றிலிருந்து கடந்த 29–ம் தேதி வரை ஒருவார காலத்தில் மட்டும் இத்திட்டத்தின் மூலம் 1 இலட்சத்து 20 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளனர். 11 இலட்சத்து 32 ஆயிரத்து 579 ரூபாய் நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது.

நாளைய சமுதாயத்தை ஆள இருக்கின்ற இன்றைய இளம் சிறுவர் சிறுமியர்கள் பண்பட்டவர்களாகவும், நமது பாரம்பரியத்தை போற்றுவதில் அக்கறை கொள்பவர்களாகவும், எதிர்காலத்தில் உருவெடுக்க ஒவ்வொரு ஞாயிறும் தெரிவு செய்யப்பட்ட 63 திருக்கோயில்களில் ஆன்மீக மற்றும் ஒழுக்கநெறி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

## தொழில்நுட்ப கல்வி நுழைவுத்தேர்வு :

# ஆன்லைன் மூலம் ஹால்டிக்கெட்



பொறியியல், மருத்துவம், விவசாயம் மற்றும் கால்நடை அறிவியல் ஆகிய தொழில் கல்வி பட்ட படிப்புகள் பயில புதிதாக நுழைவுத் தேர்வினை 1984ஆம் ஆண்டே முதன்முதலாக துவக்கிய பெருமை தமிழ்நாட்டையே சாரும். தமிழ்நாடு தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கான நுழைவுத் தேர்வு (TNPCEE) ஆரம்பம் முதற்கொண்டே அண்ணா பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் ஒரு சில ஆயிரம் மாணவ மாணவியர்களே எழுதும் நிலை மாறி தற்போது 1.5 இலட்ச மாணவ, மாணவியர்கள் நுழைவுத் தேர்வினை எழுதி கொண்டிருக்கின்றனர். இந்த வருடம் இந்த நுழைவுத் தேர்வு 36 தேர்வு மையங்களில் வருகின்ற ஏப்ரல் 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் நடைபெற இருக்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12–3–2002 அன்று காலை 10–30 மணிக்கு தலைமைச் செயலகத்தில் இவ்வாண்டு நடைபெற இருக்கின்ற தமிழ்நாடு தொழிற்கல்வி பட்டப்படிப்பிற் கான நுழைவுத் தேர்வு (TNPCEE) 2002–க்கு உரிய அனுமதிக் கடிதங்களை (Hall Tickets) கணினி மூலம் Online–ல் பெறுகின்ற புதிய மற்றும் நவீன முறையை தொடங்கி வைத்தார்.

தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் இருந்து திருநெல்வேலி மற்றும் சென்னையில் உள்ள மையங்கள் மூலம் மாணவ, மாணவியருக்கு Online–ல் வாழ்த்துக் கூறி இந்த புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார். திருநெல்வேலியில் ஏற்படுத்தப்பட்டுள்ள மையத்திலிருந்து இரண்டு மாணவியரும், ஒரு மாணவரும் முதலமைச்சர் அவர்களிடம் தாங்கள் Online–ல் Hall Ticket வாங்க வந்திருப்பதாகவும் முதலமைச்சர் அவர்கள் தங்களுக்கு வாழ்த்துக்களை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். அதேபோன்று சென்னையில் அனுமதிக் கடிதம் வாங்க வந்த மாணவியர்கள் செல்வி எம்.பிரதீபா, செல்வி ஆர்.தேவிப்பிரியா ஆகியோருக்கு நுழைவுத் தேர்வு அனுமதிக் கடிதங்கள் வழங்கி தேர்வில் வெற்றி பெறவும், அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமையவும் தன்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

கணினி மூலம் Online–ல் நுழைவுத் தேர்வு அனுமதிக் கடிதங்கள் பெறுகின்ற இந்த புதிய திட்டத்தைத் தொடங்கிவைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது :

இன்று இந்த புதிய திட்டத்தை தொடங்கிவைப்பதில் நான் பெருமகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகிறேன். தேர்வுகள் எழுதவுள்ள மாணவர்களும், மாணவிகளும்



தேர்வுகள் எழுதுவதற்காக Hall Ticket பெற வேண்டுமானால், கடந்த காலத்தில் கால தாமதம் ஏற்பட்டது. மாணவர்கள், மாணவியர்கள் தங்களுடைய விண்ணப்பத்தை எழுதிக் கொடுத்து, அதை தபால் மூலமாக அனுப்பிவைத்து, பின்னர் அவர்களுக்கு Hall Ticket வந்து சேர்வதற்கு ஏறக்குறைய 45 நாட்கள் கால அவகாசம் தேவைப்பட்டது. அப்போது மாணவர்களும், மாணவிகளும் மனஉளைச்சலுக்கு ஆளாக்கப்பட்டார்கள். தேர்வுகள் நெருங்கி கொண்டிருக்கின்ற நேரத்தில் உரிய நேரத்திற்குள் ஹால் டிக்கெட் வந்து சேருமா? சேராதா என்ற சந்தேகம், அச்சம் அவர்கள் ஆட்டி படைத்தது. பல சந்தர்ப்பங்களில், கடைசி நிமிடத்தில் Hall Ticket வந்து சேர்ந்தாலும் அதில் பல தவறுகள் இருக்கும். அந்த தவறுகளைத் திருத்துவதற்கான கால அவகாசம் கூட மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் இருக்காது. இதனால், பல சோதனைகளுக்கு, இடர்பாடுகளுக்கு மாணவர்களும், மாணவிகளும் கடந்த காலங்களில் ஆளாக்கப்பட்டார்கள். இப்போது இந்த புதிய Online முறை அறிமுகப்படுத்தியிருப்பதால் இந்த மன உளைச்சல், கால தாமதம், சிரமம் எல்லாமே தவிர்க்கப்பட்டு இருக்கிறது. எப்படி மாணவிகள் தங்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து Online வழியாக அவர்கள் அனுப்பினார்கள், எவ்வாறு அவர்களுக்கு Hall Tickets வழங்கப்பட்டது என்பதை நீங்கள் அனைவரும் இங்கே கண்டீர்கள். இந்த முறைப்படி விண்ணப்பம் கொடுப்பதற்கும் Hall Ticket பெறுவதற்கும் 5 நிமிடங்கள்தான் தேவைப்படும் என்று என்னிடம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இரண்டே நிமிடங்களுக்குள் இது வழங்கி முடிக்கப்பட்டிருக்கிறது. இந்த புதிய முறை இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப் பட்டிருக்கிறது. இதைத் தமிழ்நாட்டில் உள்ள அண்ணா பல்கலைக்கழகம் வெற்றிகரமாக செய்து முடித்திருக்கிறது என்று எண்ணும்போது மிக மிக பெருமையாக இருக்கிறது. இன்றைக்கு தமிழகம் இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. தமிழ்நாடு இந்தியாவிற்கு மட்டுமல்ல உலகத்திற்கே இன்று முன்னோடியாக திகழ்கிறது. உலகத்திலேயே முதன்முறையாக இங்குதான் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டு இருக்கிறது. இதை தமிழ்நாட்டில் உள்ள அண்ணா பல்கலைக்கழகம் வெற்றிகரமாக செய்து முடித்திருக்கிறது என்றால், இன்றைக்கு கூட நான் பலமுறை சொல்லி இருப்பது போல இந்தியாவிலேயே மிக முன்னேறிய மாநிலங்களில், தமிழகம் தான் முன்னணி வகிக்கிறது என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமை அடைகிறேன். அது மட்டுமல்ல, தகவல் தொழில்நுட்பத் துறையில் இந்தியாவிலேயே தமிழகம் தான் முதலாவது மாநிலமாக திகழ்கிறது என்பதை இன்றைக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறோம். இந்த முறையை இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களும் கடைப்பிடிக்க வேண்டும். இதனால் இந்தியாவில் உள்ள அனைத்து மாணவர்களும், மாணவியர்களும் பயன்பெற வேண்டும் என்ற என் விருப்பத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று தமிழ்நாட்டில் இந்த புதிய Online முறை வழியாக Hall Ticket பெறும் அனைவரும் தேர்வில் வெற்றி பெற வேண்டும் என்றும் அவர்களுக்கு மிக ஒளிம்யமான பிரகாசமான எதிர்காலம் அமைய வேண்டும் என்றும் அவர்களுக்கு என் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உரையாற்றினார்கள்.

வண்ணமயமாக அமைந்திருந்த இந்த விழாவில் திருநெல்வேலியில் Online –ல் ஹால் டிக்கெட் பெறும் மையத்தில் இருந்து தலைமைச் செயலகத்தில் விழா நடைபெறும் இடத்திற்கு வீடியோ கான்பரன்ஸ் மூலமாக இணைப்பு கொடுக்கப் பட்டிருந்தது. அங்கிருந்த மாணவ மாணவியர்கள் முதலமைச்சர் அவர்களிடம் இதன் மூலம் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து வாழ்த்தி ஹால் டிக்கெட் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். முதலமைச்சர் அவர்களும் வீடியோ கான்பரன்ஸ் மூலமாக அந்த மாணவ மாணவியர்களுக்கு தன்னுடைய உளங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் மு. தம்பிதுரை அவர்களும் அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் ஏ.கலாநிதி அவர்களும் மற்றும் கல்வித்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை, அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகளும் பங்கேற்றார்கள். •



# தகவல் தொழில்நுட்பத்தில் தமிழகம் உலகத் தலைநகராக உருவெடுக்கும்

**15–3–2002 அன்று நடைபெற்ற உலக வங்கியின் சென்னை அலுவலகத்தின் தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.**

---

சென்னையில் உலக வங்கியின் கணக்கு பின் அலுவலகம் தொடங்கப்பட்டிருப்பது தமிழ்நாட்டிற்கு மிகவும் பெருமை அளிக்கக்கூடிய விஷயமாகும். இந்தத் தொடக்க விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். உலக வங்கியின் பின் அலுவலகம் அமைக்கப்படுவதற்கு, தமிழ்நாட்டிலுள்ள சென்னை தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது சர்வதேசத் தேடுதல் மற்றும் மாநகர் வாரியான பகுப்பாய்வு ஆகியவற்றின் விளைவாகும். இறுதியாக சென்னையை உலக வங்கி தேர்ந்தெடுத்திருப்பது, பரவலான மற்றும் பலதரப்பட்ட அறிவுத்திறன், வளமான கட்டமைப்பு, தகவல் தொழில்நுட்ப மையம் என்ற முறையில் செலவு கட்டுப்பாடு ஆகிய சென்னையின் உள்ளார்ந்த வலிமைகளுக்கு அத்தாட்சியாக உள்ளது.

கடந்த சில மாதங்கள் வன்முறைகளையும், துயரங்களையும், பயங்கரவாதத்தையும் கண்டுவந்துள்ளன.

2001ஆம் ஆண்டு செப்டம்பர் 11ந் தேதி நடைபெற்ற துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகள், இந்திய நாடாளுமன்றம் மீது தாக்குதல் மற்றும் அமெரிக்கப் பொருளாதாரத்தின் வேக வீழ்ச்சி – இவையனைத்தும் பொருளாதார பின்னடைவையும், மந்தத்தையும் துரிதப்படுத்தி உள்ளன.

இந்த சோகத்துக்கிடையே, இந்திய தகவல் தொழில்நுட்பத் தொழில், நம்ப முடியாத அளவுக்கு இடைவிடாத வளர்ச்சியை தக்க வைத்தது. 33 சதவீத ஏற்றுமதி வளர்ச்சியைக் கண்டுள்ளது. இந்த அற்புதமான வெற்றிக்கு மிகப் பெரும் பகுதி பாராட்டு, வளர்ந்துவரும் IT Enabled Services மற்றும் Business Processes Outsourcing ஆகியவற்றையே சாரும். இந்த இரு பிரிவுகளும் தொடர்ந்து அவற்றின் வளர்ச்சியை தக்க வைத்துக் கொள்ளும் என்று முன் எதிர்பார்ப்புகள் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

இந்த ஆற்றலை உண்மையானதாக மாற்றும் சவாலை எனது அரசு மேற்கொண்டுள்ளது. வளர்ச்சி அடைந்த வேளாண் தொழில் அடிப்படை, சவுகரியமான மின்சார நிலைமை, நன்கு வளர்ச்சி கண்ட கட்டமைப்பு, உயர்தரக் கல்வியறிவு மற்றும் அற்புதமான மனித வளங்கள் ஆகியவற்றின் தமிழ்நாடு IT Enabled Services (தகவல் தொழில்நுட்பம் மூலமான சேவைகள்) Business Processes Outsourcing (வணிக சேவைகள் அளித்தல்) ஆகியவற்றில் தமிழ்நாடு உலகத்தின் தலைநகராக நிலை நாட்டிக் கொள்ளும்.




உலக வங்கி பின் அலுவலகத்திற்கு கோரப்பட்ட வசதிகள் அனைத்தையும், குறிப்பாக மின்சார வாரியம், தொழிலாளர் துறை, வணிகவரித்துறை, நிதித்துறை, நகராட்சி நிர்வாகம், தகவல் தொழில்நுட்ப மற்றும் உள்துறை ஆகியவற்றிடமிருந்து கோரப்பட்ட வசதிகள் அனைத்தையும் எனது அரசு உடனடியாக வழங்கியது. சுங்கம் மற்றும் மத்திய கலால் வரிகளை போன்ற மத்திய அரசின் பல அலுவலகங்களும் மதிப்புமிக்க சரியான நேர உதவியை வழங்கின.

தமிழக அரசும் உலக வங்கியும் பாரம்பரியமான, பயன்மிக்க உறவுகளைக் கொண்டுள்ளன. இதனால் தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு பலன் ஏற்பட்டுள்ளது. பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் போன்ற பல அரசுத் துறைகள், ஆழமான மனித மதிப்புடைய திட்டங்களில் உலக வங்கியும் நெருக்கமாக செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பம் ஒரு மாநகரில் மட்டுமில்லாது, மாறாக மாநிலம் முழுவதும் உள்ளது. கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி போன்ற மாநகரங்களும் உலகத்தரம் வாய்ந்த தொடர்பு உடையவைகளால் முதலீடுகளைக் கவர்ந்து வருகின்றன.

மாநிலத்தின் முழுமையான வளர்ச்சிக்கு, தகவல் தொழில்நுட்பம் எங்களது அறிவு அடிப்படையிலான மாநிலத்திற்கு மதிப்பும், செல்வமும் உருவாக்கப் பயன்படுத்தப்படும்.

மின்னணு நிர்வாக முயற்சிகள் வேலைவாய்ப்புகளை அதிகரித்தல், உயர்ந்த ஏற்றுமதி போட்டித்தயார் நிலை, மேலும் அதிகமான கல்விப் பரவல் மற்றும் கல்வியறிவு ஆகியவற்றை வழங்க தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி வாகனமாக இருக்கும்.

உலக வங்கி அதன் பின் அலுவலக செயல்பாடுகள் அனைத்தையும் சென்னைக்கு மாற்றும்படி நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த அலுவலகங்களை விரைவில் செயல்படுபவைகளாக்க எனது அரசு தேவையான பின்னணியை வழங்கும். திரு.மூத்த உதவித் தலைவர் அவர்களே, சென்னையில் உங்களது முதலீடுகள் செலவை வெட்டும் செயல் அல்ல, மாறாக மதிப்பு கூட்டும் அம்சமாகும்.

தமிழக அரசு சார்பிலும், எனது சார்பிலும், உலக வங்கி அதிகாரிகளுக்கும் சென்னையில் அதன் கணக்கு அலுவலகத் திற்கும் எனது வாழ்த்துக்களைத்



தெரிவித்துக் கொள்கிறேன். அதன் கட்டுப்பட்ட, தொழில்ரீதியான, வெற்றிகரமான செயல்பாட்டிற்கு என்னுடைய நல் வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

• • •



# மக்கள் நல்வாழ்வுத் துறையின் வலை தளம் (Web-site)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20-3-2002 அன்று தலைமைச் செயலகத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் மூலம் வடிவமைக்கப்பட்ட வலை தளத்தை (Web-site) இயக்கி வைத்தார்கள். இந்த வலை தளத்தின் முகவரி www.tnhealth.org ஆகும்.

மக்கள் நல்வாழ்வுத் துறையின் வளர்ச்சியிலும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் நலத்திட்டங்களை அமல்படுத்துவதிலும் மற்றும் தரமான மருத்துவ சேவைகள் மக்களுக்கு அளிப்பதிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

மக்கள் நல்வாழ்வுத் துறை சேவைகள் மேலும் மக்களைச் சென்றடைய தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை ஒரு வலை தளத்தை (Website) உருவாக்க தீர்மானித்தது. இந்த வலை தளம் மக்களுக்குத் தேவையான நல்வாழ்வுச் செய்திகளை அளிக்கும். தகவல் தொழில்நுட்ப வசதிகள் மூலம் பொதுமக்களுக்கு சேவை செய்வதில் இத்துறையின் பல்வேறு முயற்சிகளில் இதுவும் ஒன்றாக அமைந்துள்ளது.

இணைய தளம் (Internet), அனைத்து பொருள் குறித்தும் தகவல் அளிக்கும் ஒரு மாபெரும் தகவல் வழித்தடம். சமுதாயம் பயன்பெறும் வகையில் நல்வாழ்வு தொடர்பான தகவல்கள் உலகெங்கிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டை எல்லாத் துறைகளிலும் சிறப்புறச் செய்வதற்காக சமீபத்தில் அறிவிக்கப்பட்ட 15 அம்ச திட்ட அறிவிப்பின் விளைவாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சீரிய தலைமையின் கீழ் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை, நல்வாழ்வு சம்பந்தப்பட்ட தகவல்களை மக்களுக்கு அளிக்கும் சீரிய நோக்குடன் இந்த தனிப்பட்ட வலை தளத்தை (Website) www.tnhealth.org சிறப்புற அமைத்துள்ளது.

இந்த வலை தளத்தைத் தொடக்கிவைத்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த வலை தளத்தில் நோயாளிகள் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மருத்துவ வல்லுநர்களுடன் கணினி மூலம் நேரிடையாக தொடர்பு கொண்டு தங்கள் நோய்கள் குறித்த சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் நாள்தோறும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை உரையாடலாம் (Chatting) என்பதை அறிந்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார். இந்த வசதியை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார்கள். மேலும் தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் இந்த முயற்சியை பாராட்டுவதாகவும், இதற்காக உழைத்த அனைத்து பணியாளர்களுக்கும் தன்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்த வலை தளத்தின் (Website) சிறப்பு அம்சங்கள் :

1. மக்கள் நல்வாழ்வுத்துறை அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள வசதியாக அதன் பல்வேறு துறைகளின் நிர்வாக அமைப்பு, அதிகாரிகளின் பெயர், முகவரி மற்றும் சேவைகள் குறித்த விளக்கங்கள் இதில் கிடைக்கும்.
2. பல்வேறு மருத்துவமனைகள் மற்றும் நல்வாழ்வு நிலையங்களின் முகவரி மற்றும் விவரங்கள்.
3. அரசு மருத்துவமனைகளில் அமைந்துள்ள சி.டி.ஸ்கேன் (C.T.Scan) மற்றும் எம்.ஆர்.ஐ. (MRI Centres) மையங்களின் விவரங்கள் தொலைபேசி எண் உட்பட மற்றும் கட்டண விவரம்.
4. பிறப்பு இறப்பு பதிவு செய்யும் விண்ணப்ப படிவங்கள் மற்றும் மருந்து உரிமம் வழங்க, உரிய விண்ணப்பப் படிவங்கள்.

5. மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதற்கான நடைமுறைகள் மற்றும் அதற்கான விண்ணப்ப படிவங்கள்.

6. இந்திய மருத்துவத்தைச் சார்ந்த வீட்டு மருத்துவ சிறப்பு குறிப்புகள்.

7. சமீபத்தில் தமிழக அரசு மக்கள் நல மேம்பாட்டிற்காக மேற்கொண்டுள்ள சில முயற்சிகள் :

(i) ஹட்கோ (HUDCO) உதவியுடன், ரூபாய் 104.47 கோடி செலவில் சென்னை பொது மருத்துவமனையில் நிறுவப்படவுள்ள 2000 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை வளாகம்.

(ii) அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் ஹட்கோ உதவியுடன் ரூபாய் 12.05 கோடி செலவில் புதிதாக கட்டப்படவுள்ள பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை துறைக்கு கட்டடங்கள் அமைத்தல்.

(iii) பின்லாந்து (Finland) நாட்டு உதவியுடன் ரூபாய் 86 கோடி செலவில் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அதி நவீனக் கருவிகள் அமைத்தல்.



(iv) C.D.C., Atlanta என்ற அமெரிக்க நிறுவனத்தின் உதவியுடன் ரூபாய் 4.70 கோடி செலவில் தாம்பரத்தில் உள்ள நெஞ்சக மருத்துவமனையை மேம்படுத்துதல்.

(v) உலக சுகாதார நிறுவனத்தின் உதவியுடன் ரூபாய் 16 கோடி செலவில் மேற்கொள்ளப் படவுள்ள யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம்.

(vi) மத்திய அரசின் உதவியுடன் காசநோயை இனம் கண்டு முற்றிலுமாக ஒழிக்க ரூபாய் 11 கோடி செலவில் ஒரு திட்டம்.

8. இந்த வலை தளத்தில், மகப்பேறு மற்றும் குழந்தை நல விவரங்கள், பல்வேறு வகையான நல்வாழ்வுக் கல்வி, நல்வாழ்வுச் செய்திகள், நலத் திட்டங்கள் ஆகியவை மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

9. அத்தியாவசியமான மருந்துகளின் பட்டியல், மருந்தாளுநர்களுக்கான கையேடுகள், தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் வெளியீடுகள் மற்றும் ஆராய்ச்சி செய்திகள்.

10. பல்வேறு மனநோய்கள் பற்றிய விவரங்கள், மனநலம் பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வு மற்றும் மனநலம் தொடர்பான சட்ட சம்பந்தப்பட்ட விவரங்கள் கொண்ட விரிவான தகவல்கள்.

11. பல்வேறு துறை சார்ந்த சிறப்பு மருத்துவ வல்லுநர்களிடம் நோயாளிகள் கணினி மூலம் நேரிடையாக உரையாடி விவரங்களை பெற்றுக்கொள்ள வசதி இந்த வலைதளத்தில் செய்யப்பட்டுள்ளது. இந்த வசதியை தற்போது, தினந்தோறும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை பயன்படுத்திக் கொள்ள முடியும். இதனுடைய பயன்பாட்டைப் பொறுத்து, இந்தக் கால அளவு நீட்டிக்கப்படும். இந்த வசதி அரசு மருத்துவமனைகளைப் பொறுத்தவரை இந்தியாவிலேயே முதன் முறையாகச் செயல்படுத்தப்படுகிறது.

12. நோயாளிகள் E-mail மூலமாகவும் மருத்துவ வல்லுநர்களிடம் கேள்விகள் கேட்டு தங்களுடைய மருத்துவம் சார்ந்த சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளலாம்.

13. விபத்து, அவசரச் சிகிச்சை மற்றும் அவசர கால உதவி அளிக்கப்படும் சிகிச்சை மையங்கள் அமைந்துள்ள இடங்கள் பற்றிய விவரங்கள்.

14. பொதுமக்கள், இது தொடர்பான தங்களின் ஆலோசனைகளையும், புகார்களையும் தெரிவிக்கலாம்.

15. பொதுமக்களுக்கு தெரிவதற்காக, உடனடி மக்கள் நல்வாழ்வுச் செய்திகளும் நடப்பில் உள்ள நிகழ்ச்சிகள் பற்றியும் இந்த வலைதளத்தில் தொடர் செய்திகளாக (Status Line) வரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(33ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெண்களுக்கு, தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தினோமே – அது போல, தி.மு.க. ஆட்சியில் சொல்லிக் கொள்வதற்கு, ஏதாவது உண்டா ? அதே அடிப்படையில், இப்போது 2001 ஆம் ஆண்டு முதல், 2006 ஆம் ஆண்டு வரை, ஐந்து ஆண்டுகளில், ஐந்து இலட்சம் பெண்களுக்கு, தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கும் திட்டத்தை, நடைமுறைப் படுத்தி வருகிறோம்.

இப்படிப் பெண்களுக்கு எதுவுமே செய்யாத தி.மு.க. அரசில், மந்திரியாக இருந்த திரு. பொன்முடி அவர்கள் – Gender Equity பற்றிப் பேசலாமா ?

கடந்த ஆண்டு, மேல்நிலைப் பள்ளிகளில், +1 மற்றும் +2 வகுப்புகளில் பயிலும், ஆதிதிராவிட மாணவிகளுக்கு, இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை, வெற்றிகரமாக அமல்படுத்தி, எல்லோருடைய பாராட்டையும் பெற்றோமே, அந்த நடவடிக்கை, எங்களுடைய Gender Equity - பாலின நேர்மை நெறியைப் பறைசாற்றவில்லையா ?

மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள், கடந்த 10 மாதங்களில், எங்கள் அரசு என்ன செய்துள்ளது என்று கேட்டுள்ளார். அதே கேள்வியை எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களும் பேசினார். அவர்களுக்கு நான் இப்போது பதில் சொல்லப் போகிறேன். ஆனால் கேட்பதற்கு அவர்கள் இல்லை.

தமிழக விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன் மீதான வட்டி, மற்றும் அபராத வட்டித் தொகை, 310.51 கோடி ரூபாய் அளவில் ரத்து செய்தோம். சென்னைக் குடிநீர் தட்டுப்பாட்டினைப் போக்க, குறுகிய மற்றும் நீண்ட கால திட்டங்களை வகுத்து, லாரிகள் மூலம் ஈரோடு, நெய்வேலி மற்றும் மேட்டூரில் இருந்து தண்ணீரைக் கொண்டு வந்து, சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீரை அளித்தோம். புதிய வீராணம் திட்டத்தை இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தோம். நீலகிரி சிறு தேயிலை விவசாயிகளின் வாழ்க்கைப் பிரச்சனையைத் தீர்க்கும் வகையில், அவர்களுக்கு சலுகைகளை வழங்கி, அவர்கள் உற்பத்தி செய்கின்ற தேயிலையை, பொது விநியோகக் கடைகளில், "ஊட்டி டீ" என்ற பெயரில், விற்பனை செய்ய ஆணையிட்டோம் – தமிழகத்தின் அனைத்து ஊரகப் பகுதிகளிலும், பொருளாதார மறுமலர்ச்சி காண, மாபெரும் 50 இலட்சம் ஏக்கர் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் கொண்டு வந்தோம் – விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்காக, TKM-9 ரக அரிசிக்கு, levy-ல் இருந்து விலக்களித்தோம் – வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள, புதிதாக திருமணமான தம்பதிகளுக்கு, சமையல் எரிவாயு இலவசமாக வழங்க உத்தரவிட்டோம். Bio-Technology - உயிரி தொழில் நுட்பவியல், வருங்காலத்தில் முன்னுரிமை பெறும் என்பதை உணர்ந்து, அமெரிக்க Cornell பல்கலைக் கழகத்தோடு ஒப்பந்தம் செய்தோம் –TIDCO Centre for Life Sciences - TICEL - என்ற பூங்காவை அமைக்க



நடவடிக்கை எடுத்தோம் – ஊரக மகளிர் நலன் கருதி, ஊரகப் பகுதிகளில், தமிழ்நாட்டில் உள்ள 12,619 பஞ்சாயத்துக்களிலும் தண்ணீர் வசதியுடன் கூடிய, துப்புரவு வளாகங்கள் அமைக்கத் திட்டம் தீட்டி, அதில் 5,125 துப்புரவு வளாகங்களை இந்த நிதி ஆண்டிலேயே அமைக்க நடவடிக்கை எடுத்தோம் – இப்படி பலப்பல சாதனைகளை நான் சொல்லிக் கொண்டே போகலாம்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம், தமிழக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வெற்றிகரமாகத் தேர்தல்கள் நடைபெற்று, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள், திறம்படப் பணியாற்றி வருகின்றார்கள். இதுவும் எங்கள் அரசின் சாதனை' தான்.

தமிழக அரசு, அதன் நிறுவனங்களுக்குப் பொருள்களை வாங்கும் போது, சிறுதொழில் நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், Price Preference and Purchase Preference - அதாவது, விலை முன்னுரிமை, மற்றும் வாங்குவதற்கான முன்னுரிமை, ஆகியவற்றை வழங்கி, தி.மு.க. ஆட்சியில் அந்த நிறுவனங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் களைந்துள்ளோம். அதன் மூலம், முக்கியமான எங்கள் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றை நிறைவேற்றியுள்ளோம்.

கடந்த 10 மாதங்களில் மட்டும், எங்கள் ஆட்சியில், 29,135 மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, இயங்கி வருகின்றன.

ஆசிரியர்களுக்கு இதுவரை இல்லாத வரப் பிரசாதமாக, வெளிப்படையான மாறுதல் கொள்கையை அமல்படுத்தி, Transfers through Counselling என்ற புதிய நடைமுறையை அமல்படுத்தி, எல்லோருடைய ஒருமித்த பாராட்டையும், இந்த அரசு பெற்று இருக்கிறது.

இவை அனைத்தும், தி.மு.கவையும், அந்தக் கட்சியின் தலைவரையும் மீறி, நாங்கள் செய்த சாதனைகள்.

இந்த ஆட்சி அமைந்த முதல் நாளில் இருந்தே, முட்டுக்கட்டைகள் போடுவதையும், இடர்ப்பாடுகளை ஏற்படுத்துவதையுமே, வாடிக்கையாகக் கொண்டு இருந்தார்கள், தி.மு.க.வினர்.

ஆண்டிபட்டி இடைத் தேர்தல் நடக்குமா? என்ற சந்தேகம் வரும் அளவிற்கு, எந்தெந்த நீதிமன்றத்திலோ தடை உத்தரவு கிடைக்காதா, என்று ஏங்கி இருந்தார்கள் – காத்துக் கிடந்தார்கள். எங்களைச் செயல்படாமல் இருக்கச் செய்ய, தி.மு.க.வினர் செய்த ஒவ்வொரு முயற்சியையும் முறியடித்து, நாங்கள் வெற்றி பெற்றுள்ளோம். தி.மு.க.வினர் புயலை ஏற்படுத்தப் பார்த்தார்கள். அது வெறும் Storm in a tea cup – ஆகப் போனது – தேனீர் அருந்தும் கோப்பைக்குள் புயல் போல் ஆகிப் போனது.

தி.மு.க.வினருக்கும், தி.மு.க. தலைவருக்கும், ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஒருபோதும் நம்பிக்கை இல்லை. இருந்ததில்லை. ஆகவே, தி.மு.க.வினர், இனி ஓய்வு எடுத்துக் கொள்வது நல்லது.

மாறாக, ' நாங்கள் மக்கள் நலம் நாடும் நடவடிக்கைகளில், முழுமையான நம்பிக்கை உடையவர்கள். ஆகவே தான், நாங்கள் ஆக்கபூர்வமாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறோம். எனவே, தி.மு.க.வினருக்கு ஒதுங்கிக் கொள்ளுங்கள் என்றுதான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெயகுமார் உட்பட, சில உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதிக்கு, 82 இலட்சம் ரூபாய் என ஒதுக்கப்பட்டு இருந்தாலும், 50 இலட்சம் ரூபாய், அரசு குறிப்பிடுகின்ற திட்டங்களுக்கே போய்விடுகிறது என்றும், மீதம் உள்ள 32 இலட்ச ரூபாயில் மட்டுமே, சட்டமன்ற உறுப்பினரின் விருப்பத்திற்கு ஏற்ப, திட்டங்களை அமல்படுத்த வேண்டி இருக்கிறது என்றும், குறைப்பட்டுக் கொண்டார்கள்.

கடந்த பொதுத் தேர்தலின் போது, தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும், தேர்தல் பிரச்சாரப் பயணம் மேற்கொண்ட என்னிடம், ஊரகப் பகுதிகளில் வசிக்கும் பெண்கள், கழிப்பிடங்கள் அடங்கிய துப்புரவு வளாகங்களை, அமைத்துத் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். அதன் மூலம், அவர்களுடைய அத்தியாவசியத் தேவைகளில் அதுவும் ஒன்று என்பதை உணர்ந்தேன். அதன் அடிப்படையில், சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து, இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ய, அரசு ஆணையிட்டது. இந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் இதை அமைக்க வேண்டாம் என்று கூறுகிறார்களா ?

தேசப் பிதா மகாத்மா காந்தி அவர்கள்,

"Just as the Universe is contained in the self, so is India contained in the villages." என்றார்.

"கிராமங்கள் தான் இந்தியாவின் உயிர்நாடி"

– என்று கூறி உள்ளார்.

அந்த வகையில், அரசு நிர்வாகத்தை, கிராமத்திற்கு எடுத்துச் செல்ல நியமிக்கப்பட்டவர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள். அவர்கள் தான், கிராம மக்களுடன், நேரிடையாக தொடர்பு கொள்பவர்கள். அவர்களுக்கென தனியாக அலுவலகம் கிராமத்தில்

இருப்பது, இன்றியமையாதது – பொது மக்களுக்கு நன்மை தரத் தக்கது. ஆகவே, கிராம நிர்வாக அலுவலருக்கு, அலுவலகம் அமைக்க, M.L.A. நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் என்ன தவறு இருக்கிறது?

இது தேவையில்லை என்று இந்த மாண்புமிகு உறுப்பினர்கள் கருதுகிறார்களா? கூறுகிறார்களா?

இது சமூக நீதி நிலைநாட்டப்படும் காலம்.

ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகிய இனங்களைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு, பல ஆண்டுகளாகவே வாடகைக் கட்டடங்களிலும், மின்சாரம் இன்றி, தண்ணீர் இன்றி, வசதிக் குறைவான இடங்களிலும் தான், விடுதிகள் இயங்கி வருவதை, நாம் அனைவரும் நன்கு அறிவோம். இதை ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென்று நினைத்தேன். இந்த விடுதிகளை எல்லாம், சொந்தக் கட்டடங்களில் அமையச் செய்து, அவர்களுக்கு வசதிகளை, விரைந்து செய்து கொடுக்க வேண்டும் என விரும்பினேன். ஆகவே, அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள், இந்த விடுதிகளைக் கட்டி முடிக்க, M.L.A. நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய, அரசு ஆணையிட்டது. தந்தை பெரியாரின் வழித் தோன்றல்கள், எனக் கூறிக் கொள்ளும், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள், சமூக நீதி காக்கும் இந்தத் திட்டத்தைத் தடை செய்யலாமா? அதற்குத் தடை சொல்லலாமா?

மக்களுக்கு நல்லது என்பதற்காக, முக்கியமாகத் தேவைப்படுகின்ற சில திட்டங்களைத் தேர்ந்தெடுத்து, அந்தத் திட்டங்களை, சட்டமன்ற உறுப்பினர், தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து அமல்படுத்த, ஆணையிட்டுள்ளோம். இந்தத் திட்டங்களை ஒரு சிலர் எதிர்க்கிறார்கள் என்றால், அது அவர்களுடைய மக்கள் விரோதப் போக்கை காட்டுகிறது, என்று தானே பொருள்?

இந்த குறிப்பிட்ட திட்டங்கள், முடிவடையும் வரையில் தான், இந்த ஏற்பாடு. அதற்குப் பின்னர், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை, முழுமையாக சட்டமன்ற உறுப்பினரின் விருப்பத்திற்கு ஏற்ப, தொகுதியை மேம்படுத்தப் பயன்படுத்திக் கொள்ளலாம், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் பல வினாக்களை இங்கே எழுப்பினார். பல துறைகள் குறித்து விளக்கங்கள் கேட்டார். அவற்றையெல்லாம் இங்கே தெரிவிக்கலாம் என்று இருந்தேன். ஆனால் அவரே இங்கு இல்லை. அதனால் அவற்றையெல்லாம் ஒத்தி வைத்து அடுத்து நடைபெற உள்ள பட்ஜெட் கூட்டத் தொடரின்போது சம்பந்தப்பட்ட மானிய கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெறும் போது அப்போது தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் ராஜரத்தினம் அவர்கள், முன்மொழிந்துள்ள தீர்மானத்தின் மீது உரையாற்றி, ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கூறிய அனைத்து உறுப்பினர்களுக்கும், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், எடுத்து வைத்த வாதங்கள், சொன்ன கருத்துகள், விடுத்த வேண்டுகோள்கள் ஆகியவற்றில், ஒவ்வொன்றிற்கும் என்னுடைய பதிலை சொல்ல வேண்டும் என்று நான் விரும்பினாலும் எண்ணி இருந்தாலும், காலத்தின் அருமை கருதி, என்னுடைய பதிலுரையின் நிறைவுப் பகுதிக்கு நான் வர விரும்புகிறேன்.

மேதகு ஆளுநர் உரைக்கு, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில், பங்கேற்ற பல்வேறு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்ட பல நல்ல திட்டங்களை வரவேற்றும், பாராட்டியும் பேசியிருக்கின்றார்கள். குறிப்பாக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சந்தானம் அவர்கள், திரு. கே.என். லட்சுமணன் அவர்கள், திருமதி. யசோதா அவர்கள், தமிழக மக்களின் நலனுக்காக, ஆளுநர் உரையில் கொடுக்கப்பட்டிருந்த புதிய திட்டங்களுக்கு, தங்களது ஆதரவையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டதற்கு, எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும் போது, தமிழ் நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு, பொது விநியோகத் திட்டத்தின் கீழ், வழங்கப்படும் அரிசியின் விலை **3** ரூபாய் **50** பைசாவில் இருந்து மேலும் உயர்த்தப்பட மாட்டாது என்ற உத்தரவாதத்தை, அரசு அளிக்க வேண்டும் என்று கூறினார்.

ஆண்டிபட்டி தொகுதி இடைத்தேர்தல் பிரச்சாரத்தின் போது, நான் மிகத் தெளிவாக ஓர் உறுதிமொழியை, தமிழக மக்களுக்கு அளித்திருந்தேன். அதாவது, வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியின் விலை எக்காரணத்தைக் கொண்டும் **3** ரூபாய் **50** பைசாவில் இருந்து, நிச்சயம் உயர்த்தப்பட

மாட்டாது என்று வாக்குறுதி அளித்திருந்தேன். தேர்தல் வாக்குறுதிகள் மிகவும் புனிதமானவை என்று நான் கருதுவதால், நான் ஆண்டிபட்டியில் ஏற்கனவே கூறியபடி, இந்த வாக்குறுதி நிச்சயம் காப்பாற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த நான்கு நாட்களாக நடைபெற்ற இந்த விவாதத்தின் போது பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் தமது தொகுதிகள் மற்றும் மாவட்டங்கள் தொடர்பான பல கோரிக்கைகளை அரசுக்கு விடுத்திருந்தனர். இந்த கோரிக்கைகள் அனைத்தையும் உடனடியாக பரிசீலனை செய்து முடிந்த வரையில் நிதி நிலைக்கு ஏற்ப நிறைவேற்றித் தர வேண்டுமென அனைத்து அமைச்சர்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து நடைபெற இருக்கின்ற நிதி நிலை அறிக்கை – பட்ஜெட் கூட்டத் தொடரில், இவற்றிற்கான தக்க பதில்கள், விரிவாக அந்தந்தத் துறைகளால் அளிக்கப்படும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே.சி.கருணாகரன், திரு. ஞானசேகரன், திரு. ஹெச்.எம்.ராஜு, திரு வி.கே.லட்சுமணன், திரு. ஐ.கணேசன், திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி ஆகியோர், மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு ஒரு சில திருத்தங்களைக் கொடுத்துள்ளார்கள். மூடப்பட்ட பஞ்சாலைகளைத் திறப்பது குறித்தும், கள்ளச் சாராய, விஷச் சாராயச் சாவுகள் தடுப்புத் திட்டம் குறித்தும், கூடலூர் வட்டாரத்தில் ஏழை மக்களுக்கு பட்டா வழங்கும் திட்டம் பற்றியும், வீட்டு மனை நிலம் பத்திரப் பதிவு செய்யத் தேவையான உள்ளாட்சி நிர்வாகத் தடையில்லா சான்று பெற வேண்டும் என்ற விதியைத் தளர்த்துதல் குறித்தும், சென்னை பக்கிங்ஹாம் கால்வாயைச் சுத்தப்படுத்தும் திட்டம் குறித்தும், ஆளுநர் உரையில் குறிப்பிடுதல் வேண்டும் என, அந்தத் திருத்தங்கள் வேண்டுவதாக அறிகிறேன். மாநிலத்தில் நிலவும் அனைத்து பிரச்சனைகளைப் பற்றியும், மேதகு ஆளுநர் உரையில் குறிப்பிடுவது என்பது இயலாத ஒன்றாகும். துறை வாரியான மானியக் கோரிக்கைகள் பட்ஜெட் கூட்டத் தொடரில் வரும் போது, இவை பற்றி விரிவாக விவாதிக்க வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்து இந்தத் திருத்தங்களை வலியுறுத்த வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.


"இங்குத் தடைக் கற்கள் உண்டு என்றாலும், தடந்தோள் உண்டு எனச் சிரித்தாய்!" என்று முழங்கினார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். பாவேந்தர் சொன்னது போல், இங்குத் தடைக் கற்கள் உண்டு தான். ஆனால், அவற்றை எல்லாம் பொடிப் பொடியாக்கும் வீரமும் இங்கே உண்டு, விவேகமும் இங்கே உண்டு. எனவே, எதிர்ப்படும் இடர்ப்பாடுகளைத் தூளாக்கி, என்னோடு ஒன்றாக உள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு வாளாகவும், கேடயமாகவும் இருந்து செயல்படுவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


என்னைப் பொறுத்தவரை அறிவிக்கப்பட்டு இருக்கின்ற திட்டங்களை, உரிய முறையில், உரிய காலத்தில் நிறைவேற்றுவதே மிக முக்கியமானது என்று கருதுகிறேன். அந்தப் பணியை என் தலைமையில் அமைந்துள்ள, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, சிறப்பாக செய்யும் என்று உறுதி கூறுகிறேன்.

" இங்குத் தடைக் கற்கள் உண்டு என்றாலும்,
தடந்தோள் உண்டு எனச் சிரித்தாய்''

என்று முழங்கினார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். பாவேந்தர் சொன்னது போல், இங்குத் தடைக் கற்கள் உண்டு தான். ஆனால், அவற்றை எல்லாம் பொடிப் பொடியாக்கும் வீரமும் இங்கே உண்டு, விவேகமும் இங்கே உண்டு. எனவே, எதிர்ப்படும் இடர்ப்பாடுகளைத் தூளாக்கி, என்னோடு ஒன்றாக உள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு வாளாகவும், கேடயமாகவும் இருந்து செயல்படுவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆட்சி, ஏழை எளிய மக்களின் அரசாகச் செயல்படும் என்றும், இந்த ஆட்சி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியாகத் திகழ்ந்து, மக்கள் எங்கள் மீது வைத்துள்ள, அசைக்க முடியாத நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்போம் என்பதையும் தெரிவித்து, நான் முன்பு கூறியதைப் போலவே, தமிழகத்தை இந்தியாவிலேயே, முதன்மை மாநிலமாக ஆக்கும் வரை நான் ஓயமாட்டேன், இந்த அரசும் ஓயாது என்று தெரிவித்து அமைகிறேன்.

• • •


# நிதிநிலை அறிக்கை 2002–2003

மாண்புமிகு நிதி மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்
திரு. சி. பொன்னையன் அவர்கள்
ஆற்றிய உரை.


தமிழக அரசின் நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. சி.பொன்னையன் அவர்கள், 2001–2002 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 2002–2003 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தையும், 2002 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவை முன்வைத்து ஆற்றிய உரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசின் நடப்பாண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 2002–2003 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தையும் இம் மாமன்றத்தின் முன் வைப்பதை பெரும் வாய்ப்பாக நான் கருதுகிறேன். தொலைநோக்குச் சிந்தனையுள்ள எங்கள் தலைவி, புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் வேகமும், விவேகமும், ஆற்றலும் நிறைந்த தலைமையின்கீழ் செயல்படும் எங்கள் இயக்கம் தனது கொள்கைகள் மற்றும் செயல் திட்டங்களின் அடிப்படையில் தமிழக மக்களின் பெருவாரியான ஆதரவைப் பெற்றுள்ளது. இக்கொள்கைகளும் செயல் திட்டங்களும் ஏழு மாதங்களுக்கு முன்னர்



இப்பேரவையில் வைக்கப்பட்ட வரவு–செலவுத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளன. ஒளிவு மறைவற்ற நிதி நிர்வாகம் மற்றும் வெளிப்படையான ஆட்சி முறை அமையவேண்டுமென்ற எங்களது உறுதிப்பாட்டிற்கிணங்க, தமிழ்நாடு அரசின் நிதிநிலை பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்று சட்டமன்றப் பேரவையின்முன் வைக்கப்பட்டது. வரும் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கைக்கு உரிய செயல்வடிவம் தரும் வகையில் அரிய ஆலோசனைகளை நல்கிய மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள், அறிஞர் பெருமக்கள், பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள், தமிழக மக்கள் ஆகிய அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.




2. 2002–2003 ஆம் ஆண்டிற்கான இந்த வரவு–செலவுத் திட்ட உரை, கடந்தகால மரபுகள் மற்றும் நடைமுறைகளிலிருந்து சற்று மாறுபட்டதாக இருக்கும். வெள்ளை அறிக்கை குறித்து அரசியல் கட்சிகள், கல்வியாளர்கள், வல்லுநர்கள், வர்த்தகம் மற்றும் தொழில் சார்ந்தோர் மற்றும் ஏனைய பலரிடமிருந்து கோரிப் பெறப்பட்ட ஆலோசனைகளை உள்ளடக்கியதன்மூலம் அரசின் வரவு–செலவுத் திட்டத்தை உருவாக்கும் நடைமுறையை மேம்படுத்த முயன்றுள்ளோம். எனவே, மாநில அரசின் நிதிநிலைபற்றிய தெளிவான விளக்கத்துடன், அடுத்த நிதியாண்டில் அரசு மேற்கொள்ள வேண்டிய சீரமைப்பு நடவடிக்கைகள் பற்றியும், ஏற்கெனவே ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்ட தொலைநோக்குத் திட்டங்கள் பற்றியும் முதற்கண் எடுத்துக் கூற விழைகிறேன்.

## நிதிநிலைமை

3. அகில இந்திய அளவில், பொருளாதார, சமூகத் துறைகளில் மிகச் சிறந்த சாதனைகளுடன், சீரிய நிதி நிருவாகம் அமைந்த மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது. எனினும், கடந்த சில ஆண்டுகளில், அரசின் நிதி நிலைமை படிப்படியாக சீர்கேடடைந்து வந்துள்ளதால், ஏற்கெனவே இருந்த கட்டுக்கோப்பான நிதிநிலை தகர்ந்துவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.


4. மத்திய நிதிப் பகிர்வுகள், மாநிலத்தின் சொந்த வரி மற்றும் வரியல்லாத வருவாய் ஆகியவை உள்ளிட்ட அரசின் வருவாயினங்களின் வளர்ச்சி, 1998 ஆம் ஆண்டிலிருந்து பணியாளர்களுக்கான சம்பளம், ஓய்வூதியம், வட்டித் தொகை, உதவித் தொகைகள் போன்ற வருவாயினச் செலவுகளின் அபரிமிதமான வளர்ச்சிக்கு ஏற்ப அமையவில்லை. இந்தச் சமன்பாடற்ற நிலைமையைச் சமாளித்து, வருவாய்ப் பற்றாக்குறையை சரிக்கட்ட அரசு கடந்த காலத்தில் பெருமளவில் கடன் வாங்கியது. இதன் விளைவாக, வருவாய் மற்றும் நிதிப் பற்றாக்குறை நிலை பெரும் கவலை தருவதாகவும், இனியும் சமாளிக்க முடியாததாகவும் உருவாகியுள்ளது.

5. அரசுச் செலவுகளைத் துறை வாரியாக ஆய்வு செய்தபோது, வட்டித் தொகைகள் மற்றும் நிருவாகம் உள்ளிட்ட பொதுப் பணிகளின் பங்கைக்காட்டிலும், சமூக, பொருளாதாரப் பணிகளுக்கான பங்கு, கடந்த ஆண்டுகளில் கணிசமாகக் குறைந்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது. நடப்புச் செலவுகளுக்காக மேன்மேலும் அரசு நிதியை ஒதுக்குகின்ற, இந்த சமனற்ற போக்கு, அரசு நிதியை சொத்துக்கள் உருவாக்கும் திட்டங்களில் முதலீடு செய்வதை வேறுவழியின்றி புறக்கணிக்க வேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிவிட்டது. பொதுத்துறை நிறுவனங்களின் மோசமான செயல்பாடு இந்நிலையை மேலும் சிக்கலாக்கி உள்ளது.

6. நடப்பாண்டின் நிதி நிலைமை மாநில அரசுக்கு ஒரு மிகப்பெரிய சவாலாக அமைந்துள்ளது. தமிழ்நாடு உள்ளிட்ட வளர்ச்சியடைந்த மாநிலங்களுக்கு பதினொன்றாம் நிதிக்குழு இழைத்த அநீதி காரணமாக, இம்மாநிலத்திற்கு 2000 முதல் 2005 வரையிலான ஐந்தாண்டு காலத்தில் ரூ.2,946 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். கடந்த ஆண்டு ஆகஸ்டு திங்களில் வரவு–செலவுத் திட்டத்தை நாங்கள் இந்த அவையில் வைத்தபோது, ‘வெள்ளை அறிக்கை’ மூலமாக அரசின் நிதிநிலையை விளக்கி, மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் கருத்துக்களைக் கேட்டிருந்தோம். இப்பேரவையில் நடந்த விவாதங்களின்போதும், அவைக்கு வெளியேயும் மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்த உயரிய ஆலோசனைகள், பொதுமக்கள் பலர் அளித்த கருத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும்,

வேகமாக சீர்கேடடைந்துவரும் நிதிநிலையைக் கருத்தில் கொண்டும், இந்த அரசு வருவாயைப் பெருக்கவும், திட்டம்சாரா செலவுகளைக் குறைக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை அறிவித்தது. இருப்பினும், இம்முயற்சி போதுமானதாக அமையவில்லை. பதினொன்றாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளை மைய அரசு செயல்படுத்தியதால், இவ்வரசுக்கு ஏற்கெனவே ஏற்பட்ட பாதிப்புடன், 2001–2002 ஆம் ஆண்டில் மத்திய வரிகளில் தமிழகத்தின் நிதிப்பகிர்வில் ரூ.512 கோடி அளவிற்கு குறைத்திட மத்திய அரசு முடிவு செய்தது. இதனால் மாநில அரசுக்கு மேலும் எதிர்பாரா கூடுதல் நிதிச்சுமை ஏற்பட்டுள்ளது. தேசிய பொருளாதாரத்தில், குறிப்பாக, உற்பத்தித் துறையில் நிலவும் தற்போதைய மந்த நிலை இம்மாநில அரசின் வரி வசூல் அளவில் மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

7. முன் எப்போதும் இல்லாத அளவுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டிருப்பதனால், நடப்பாண்டின் ஏற்பளிக்கப்பட்ட திட்ட அளவை, நடைமுறையில் எய்தக் கூடிய ரூ.5,200 கோடியாகக் குறைத்திட வேண்டிய கட்டாயம் இவ்வரசுக்கு ஏற்பட்டுள்ளது.




பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் (2002–2007), அடுத்த நிதியாண்டிற்கும் தமிழ்நாட்டிற்கான மொத்தத் திட்ட ஒதுக்கீடு விவரங்கள், மத்திய திட்டக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர் அறிவிக்கப்படும்.

8. நம்முடைய அரசியலமைப்பு, கூட்டாட்சித் தன்மை வாய்ந்ததாக இருந்தபோதிலும், நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் மாநில அரசுக்கு உள்ள அதிகாரங்கள் மிகவும் குறைவு என்பதையும், நிதி ஆதரவுக்காக நாம் எப்போதும் மத்திய அரசையே எதிர்நோக்க வேண்டியுள்ளது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். ஆனால், மத்திய அரசு, தான் பொறுப்பேற்றுக்கொண்ட அளவுக்கு வரவு–செலவுத் திட்ட நிதிப் பகிர்வை இம்மாநிலத்திற்கு அளிக்கத் தவறுகின்றபோதும், இதனால் ஏற்படும் நிதி இழப்பைப் போதுமான அளவுக்கு மைய அரசு ஈடு செய்யாத போதும், மாநில அரசுக்கு வேறெங்கும் ஆதரவு தேட வழியேதுமில்லை. மாநிலங்களவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றும்போது இக்கட்டான இந்த நிலையைப் பின்வருமாறு சுட்டிக்காட்டி உள்ளார்கள்.

> "கூட்டாட்சி அமைப்பின் பல்லாண்டுகால செயல்பாடு, மாநிலங்களிடையே ஒரு ஏமாற்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது. கையேந்தும் நிறுவனங்கள் (Dole-getting corporation) என்ற நிலைக்குத் தாங்கள் விரைந்து தள்ளப்பட்டு வருவதாக மாநிலங்கள் கருதுகின்றன".

மத்திய அரசு தன்வசமுள்ள அதிக நிதி அதிகாரங்களையும், நிதி ஆதாரங்களையும் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க முன்வரவேண்டும். நாட்டின் பெரும்பாலான மாநிலங்கள், முன் எப்போதும் இல்லாத அளவிற்கு நிதி ஆதார இடர்பாடுகளில் சிக்கி உள்ளன. இதன் விளைவாக, நடப்பாண்டில் பல மாநிலங்கள், அவற்றின் திட்ட ஒதுக்கீட்டைக் குறைக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளன. இதனால் அவற்றின் வளர்ச்சி வேகம் குறைகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. மாநிலங்கள், வளமான நிதி ஆதாரங்களைப் பெற்றிருந்தால் மட்டுமே, இந்தியா ஒரு வளமான நாடாகத் திகழமுடியும். இத்தகைய கவலையளிக்கும் நிலையில், மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். **இந்த நெருக்கடியிலிருந்து மாநிலங்கள் மீளும் வண்ணம், முழு அளவிலான ஒரு கட்ட உதவித் திட்டம் (one time package) ஒன்றை மாநிலங்கள் அனைத்திற்கும் வகுக்க**

**மாநில அரசின் வரவு-செலவுத் திட்டத்தில், உற்பத்தித்திறன் குறைந்த துறைகளுக்குப் பதிலாக, வேளாண்மை, தொழில், கட்டமைப்பு மேம்பாடு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற உற்பத்தித்திறன் மிகுந்த துறைகளுக்கு நிதியொதுக்குவதில் முன்னுரிமை அளிப்பதன் மூலமாக, மாநில அரசின் நிதி முதலீடுகளை மக்களுக்குத் தகுந்த பயனளிக்குமாறு உறுதி செய்தல்.**


வேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்கள். இவ்வகையில் தமிழ்நாட்டுக்கு தேவைப்படும் நிதி உதவி ரூ.3,000 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது, தமிழ்நாட்டை, மீண்டும் முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்வதற்கு ஏதுவாக, இத்தொகையை மானியமாக அளிக்க வேண்டுமென்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை மத்திய அரசு, சாதகமாகப் பரிசீலிக்குமென்று நம்புகிறோம்.

9. மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு யஷ்வந்த் சின்கா அவர்கள், 2002–2003 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தபோது, மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு வழங்குகின்ற கடன்களுக்கான வட்டி வீதம் அடுத்த நிதி ஆண்டிலிருந்து குறைக்கப்படும் என அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம். சிறு சேமிப்புக்கான வட்டி வீதம் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளதால், சிறுசேமிப்பு வசூல் தொகை முழுவதையும் மாநில அரசுகளுக்கு வழங்குவோம் என்ற மத்திய அரசின் முடிவு, நடைமுறையில் உண்மையான, உரிய பயனளிக்கக் கூடியதாக அமையாது.

10. நாட்டின் பாதுகாப்புத் தேவைகளுக்காக, மைய வரிகள் அனைத்தின் மீதும், 5 சதவீத மேல்வரி விதிப்பது என்ற மத்திய அரசின் முடிவை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம். தேசியப் பாதுகாப்பு, மத்திய அரசின் ஒரு முக்கிய பொறுப்பு என்பதால், அதற்கான செலவினத்தை மைய அரசு தனது வருவாயினத்திலிருந்துதான் மேற்கொள்ள வேண்டும். இந்த மேல்வரி அடுத்த நிதியாண்டில் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ள, அதிலும் குறைந்த அளவேயான, நிதி ஆதாரங்களைப் பாதிக்கும் என்பதால், இதனைச் செயல்படுத்துவதை மத்திய நிதியமைச்சர் கைவிடுவார் என்று நாங்கள் நம்புகிறோம்.

11. மாநில அரசின் நிதிநிலையில் ஒரு தெளிவான முன்னேற்றம் இல்லையெனில், எந்த ஒரு அரசினாலும், தனக்கு வாக்களித்த மக்களின் ஆதரவைத் தக்கவைத்து அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய இயலாது. வருவாயினச் செலவுகளின் அச்சுறுத்தும் வளர்ச்சி வேகத்தை, சமுதாயத்தின் அடித்தள மக்களின் நலன்களைப் பாதிக்காதவகையில், எந்த அளவிற்கு விரைவாகக் குறைக்க முடியுமோ, அந்த அளவிற்கே தற்போதைய நிதி நெருக்கடியிலிருந்து நாம் மீள இயலும். அடுத்த நிதியாண்டில் அரசு மேற்கொள்ளவிருக்கும் நிதி மற்றும் வரவு–செலவுத் திட்டச்சீரமைப்புப் பற்றி முதற்கண் குறிப்பிட விரும்புகிறேன். இச்சீர்திருத்த நடவடிக்கைகளின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:–

- வருவாயினச் செலவுகளின் வளர்ச்சி வேகத்தைக் குறைத்தல்.
- அரசு வருவாயை உயர்த்துதல்.
- இனியும் சமாளிக்க முடியாத அளவிற்கு உயர்ந்துள்ள வருவாய் மற்றும் நிதிப் பற்றாக்குறைகளைக் கட்டுப்படுத்துதல்.
- மாநில அரசின் வரவு–செலவுத் திட்டத்தில், உற்பத்தித்திறன் குறைந்த துறைகளுக்குப் பதிலாக, வேளாண்மை, தொழில், கட்டமைப்பு மேம்பாடு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற உற்பத்தித்திறன் மிகுந்த துறைகளுக்கு நிதியொதுக்குவதில் முன்னுரிமை அளிப்பதன் மூலமாக, மாநில அரசின் நிதி முதலீடுகளை மக்களுக்குத் தகுந்த பயனளிக்குமாறு உறுதி செய்தல்.




### நிதிநிலைமை மற்றும் வரவு–செலவுத் திட்டச் சீரமைப்பு

12. **நடுத்தரக் கால நிதிநிலைச் சீரமைப்புத் திட்டம் :** அடுத்த ஐந்தாண்டுகளில்,

வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையின்றியும் (Revenue deficit), மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் 2 சதவீதம் என்ற அளவிற்கு நிதிப் பற்றாக்குறையைக் (Fiscal deficit) குறைக்க வேண்டும் என்ற நோக்குடனும், நடுத்தரக் கால நிதிச் சீரமைப்புத் திட்டம் ஒன்றை அரசு தயாரித்துள்ளது. பதினோராம் நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நிதிச் சீரமைப்பு வசதி நிதியத்திலிருந்து, அடுத்துவரும் **ஐந்தாண்டுகளில் ரூ.402 கோடியளவிற்கு நிதியைப் பெறுவதற்கு இயலும் வகையில், மத்திய அரசுடன் உடன்படிக்கை ஒன்றில் கையொப்பமிடப்படும்.**

13. நிருவாகச் சீர்திருத்தங்கள்: மாநில அரசின் மொத்த வருவாய்ச் செலவினங்களில், சம்பளம் மற்றும் ஒய்வூதியம் வகையிலான செலவுப் பொறுப்புக்கள், பெரும் பங்காக அமைந்துள்ளன. தேவையின் அடிப்படையில், பணியாளர்களின் எண்ணிக்கையைப் படிப்படியாக குறைக்க வேண்டிய எங்களது நிலைப்பாட்டை நாங்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளோம். மனித ஆற்றலை தேவைக்கேற்றவாறு பயன்படுத்துவதை உறுதி செய்யும் வகையில், அரசுப் பணியாளர் அமைப்புமுறையைச் சீரமைப்பதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன.

14. நாட்டின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழக அரசு தான் மிக அதிக அளவிலான, ஒய்வூதிய செலவுப் பொறுப்புகளை ஏற்றுள்ளது. மொத்த வருவாயினச் செலவினங்களில், மிகவும் வேகமாக வளர்ந்துவரும் செலவினங்களில் இதுவும் ஒன்றாகும். 2001 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் முதல் தேதியிலிருந்து பணியில் நியமிக்கப்படும் அனைத்துப் பணியாளர்களும், மத்திய அரசினால் அமைக்கப்பட்டுவரும் பங்கேற்பு ஒய்வூதியத் திட்டத்தைப் (Contributory Pension Scheme) போன்றதொரு புதிய திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவர் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.


15. இந்திய ஆட்சிப் பணியிலிருந்து ஒய்வுபெற்ற திரு. ஏ.எம். சுவாமிநாதன் அவர்களின் தலைமையின் கீழ், "பணியாளர் மற்றும் செலவுச் சீராய்வுக் குழு" ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழு, ஏற்கெனவே மூன்று இடைக்கால அறிக்கைகளை அளித்துள்ளது. **தலைமைச் செயலகத்தில் உள்ள துறைகளைச் சீரமைப்பது, நிருவாகச் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகியவை தொடர்பான இரு அறிக்கைகளின்மீது அரசு முடிவெடுத்துள்ளது. இந்த முடிவுகள் பற்றி அரசாணைகள் பிறப்பிக்கப்பட உள்ளன.**

16. **தேவையடிப்படையிலான நிதி ஒதுக்கமுறை (Zero Base Budgeting) மற்றும் நிறுவனங்களுக்கு உதவித் தொகைகள், ஒட்டுமொத்த மானியங்கள் மற்றும் உதவி மானியங்கள் வழங்குவதைச் சீரமைத்தல்:** பயனற்ற திட்டங்களைக் கண்டறிந்து அவற்றை நீக்கும் நோக்குடன், தேவையடிப்படையிலான நிதியொதுக்க முறை (Zero-Base Budgeting) மேற்கொள்ளப்படவேண்டுமென்று அனைத்து நிருவாகத் துறைகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இச்செயல்பாட்டின்மூலம், ஆதாயமற்ற திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஆதாரங்களை பயனளிக்கக் கூடிய வேறு திட்டங்களுக்கு மாற்ற இயலும்.

17. தகுதியுள்ள பயனாளிகளைக் குறிப்பிடாமலும், எவ்வித வரையறையின்றியும் அளிக்கப்பட்டு வரும் மானிய உதவித் திட்டங்கள், மாநில அரசின் நிதி நிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. தேவையினடிப்படையிலும், தகுதியின் அடிப்படையிலும் மட்டுமே உதவித் தொகைப் பயன்கள் மக்களைச் சென்றடையும் வகையில், தற்போதுள்ள திட்டங்களைத் திருத்தியமைக்குமாறு அனைத்துத் துறைகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

18. பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஒட்டுமொத்த மானியங்கள் அல்லது உதவி மானியங்களின் தேவை குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. பள்ளிக் கல்வித் துறையிடமிருந்து உதவி மானியங்கள் பெறும் தனியார் மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான நிதியுதவியின் அளவு நடப்பு ஆண்டு அளவிலேயே நிலை நிறுத்தப்படும். அறிவாலோசனை வழங்கல், (consultancy), செலவில் சிக்கனம் பேணுதல் மற்றும் ஏழை மாணவர்களைப் பாதிக்காத வண்ணம் பிற மாணவர்களிடமிருந்து பயன்பாட்டுக் கட்டணங்களை ஓரளவுக்காவது வசூலித்தல் போன்றவற்றின்மூலம், பல்கலைக் கழகங்களும், நிதியுதவி பெறும் கல்லூரிகளும் தங்களது சொந்த நிதி ஆதாரங்களைப் பெருக்கிக்கொள்ள ஊக்குவிக்கப்படும். இதனை ஒட்டி, இந்நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுவரும் அரசு நிதியுதவி படிப்படியாக குறைக்கப்படும்.

19. **பொது விநியோக முறையில் சீர்திருத்தம் : தற்போது புழக்கத்திலுள்ள "போலி குடும்ப அட்டைகளை" ஒழிக்கும் நோக்குடன், பொது விநியோக முறையில் அரிசியைப் பெறுவதற்காக, 1.7.2002 முதல் "அடையாளச் சீட்டு முறையை" (Coupon System) கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது.** இந்த முறையில், அரிசி பெறத் தகுதிபெற்ற குடும்ப அட்டை வைத்துள்ளவர்களுக்கு, ஓராண்டிற்குரிய "அரிசி




பெறுவதற்கான அடையாளச் சீட்டுகள்" வழங்கப்படும். இந்த அடையாளச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளும்போது, அரிசிக்கான விலையைச் செலுத்தவேண்டியதில்லை. அவ்வப்போது நியாய விலைக் கடைகளிலிருந்து அரிசியை வாங்கும்போது, இந்த அடையாளச் சீட்டுகளைக் குடும்ப அட்டையுடன் சேர்த்து அளிக்க வேண்டும். போலியாகப் பட்டியிடுதலையும் (Bogus Billing), அதன் விளைவாக பொது விநியோகத் திட்டத்திற்கு அப்பாற்பட்டு பொருட்கள் பெருமளவில் விற்கப்படுவதையும் இந்தச் செயல்முறை தடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

20. **அரசு உத்தரவாதங்கள் :** சட்டப்படி அமைந்துள்ள வாரியங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றுக்குக் கடனுதவி அளிக்கும் நிதி நிறுவனங்களுக்கு மாநில அரசு உத்தரவாதம் அளித்துவருகிறது. கடன் பெற்ற நிறுவனங்கள் கடனைத் திருப்பிக் கொடுக்க இயலாதபோது, உத்தரவாதம் அளிக்கப்பட்ட தொகையை அரசே செலுத்தித் தீர்க்கும் என்பது இதன் பொருளாகும்.

21. இவ்வாறு நிலுவையாகவுள்ள உத்தரவாதத் தொகையின் அளவு அரசுக்கு மிகுந்த கவலை அளிப்பதாக உள்ளது. எனவே, அரசு அளிக்கும் உத்தரவாதத்தின் மொத்த அளவு, அரசின் வருவாய் வரவுகளில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்திற்கு உட்பட்டு இருக்கும் வகையில், சட்டமியற்ற கருதப்பட்டுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டி நெறிமுறைகளை ஒட்டி சம்பந்தப்பட்ட திட்டங்களின் நிதியுதவி பெறும் தகுதி மற்றும் இலாபம் ஈட்டும் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே திட்டங்களுக்கான உத்தரவாதங்கள் வழங்கப்படும். **கடனுதவி அளிக்கும் நிறுவனங்கள், உத்தரவாதம் அளிக்கப்பட்ட தொகைகளைத் திருப்பிச் செலுத்தக்கோரும்போது, குறித்த காலத்தில் கொடுத்துத் தீர்ப்பதற்கு ஏதுவாக, "உத்தரவாத மீட்பு நிதி" (Guarantee Redemption Fund) ஒன்றை ஏற்படுத்த நாங்கள் கருதியுள்ளோம்.** மாநில அரசின் உத்தரவாதத்தைப் பயன்படுத்தி கடன் பெற்ற நிறுவனங்கள், தாம் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறுமாயின், அவைகளுக்கு வழங்கப்பட்ட உத்தரவாதம் புதுப்பிக்கப்படமாட்டாது; புதியதாக உத்தரவாதம் எதுவும் அளிக்கப்படமாட்டாது.


22. **கடன் நிருவாகம் :** மத்திய அரசுக்கு செலுத்தவேண்டிய கடன்கள், ஏனைய உள்நாட்டுக் கடன்கள் போன்ற நீண்டகாலக் கடன்களின் அளவு, மாநில அரசின் நிதிப் பற்றாக்குறையில் சுமார் மூன்றில் இரண்டு பங்காகும். சிறுசேமிப்பு, மாநில வருங்கால வைப்பு நிதிகள் போன்ற பொதுக் கணக்கு இருப்புகள் மூலமாக எஞ்சியுள்ள பற்றாக்குறை சரிக்கட்டப்படுகிறது. நிலுவைக் கடன்தொகை மற்றும் வட்டிப் பொறுப்புகள் ஆகியவை முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்துவருவது அரசுக்கு மிகவும் கவலையளிக்கிறது.

23. மத்திய அரசிடமிருந்தும், ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்தும் பெற்ற அதிக வட்டியிலான கடன் நிலுவைத் தொகைகளை, குறைந்த வட்டிக் கடன்களாக மாநில அரசுகள் மாற்றியமைத்துக் கொள்ள அனுமதித்து, மத்திய நிதி அமைச்சர் அறிவித்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். இந்திய ரிசர்வ் வங்கி மூலமாகத் திரட்டப்படும் வெளிச் சந்தைக் கடன் ஒதுக்கீட்டளவினை தமிழகத்திற்கு அதிகரித்துத்தரும்படி மத்தியத் திட்டக்குழுவிடம் கோரப்படும். இதன்மூலம், மாநில அரசு, சந்தையில் தற்போது நிலவிவரும் குறைந்த வட்டி வீதத்தில் கடன்பெறும் பலனை அடைய முடியும்.

24. **பொதுத் துறை, கூட்டுறவுத் துறை நிறுவனங்களில் சீர்திருத்தங்கள்:** இலாபம் ஈட்டும் அரசு பொதுத்துறை நிறுவனங்களில் செய்த முதலீட்டைத் திரும்பப் பெறவும், நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை மொத்தமாக விற்பதற்கும் அரசு முடிவெடுத்து அறிவித்துள்ளது. **இலாபம் ஈட்டும்**

பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து அரசு முதலீடுகளைத் திரும்பப் பெறவும், நட்டத்தில் இயங்கும் அரசு பொதுத்துறை மற்றும் கூட்டுறவு நிறுவனங்களைத் தனியார் மயமாக்கவும், ஏற்ற வழிகாட்டி நெறிமுறைகளை உருவாக்கிட, முதலீட்டை திரும்பப் பெறும் ஆணையம் (Disinvestment Commission) ஒன்று ஏற்படுத்தப்படும். அரசுப் பணியாளர்களுக்கும், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுத் துறைப் பணியாளர்களுக்குமான கவர்ச்சிகரமான விருப்ப ஓய்வுத் திட்டம் உள்ளிட்ட பொதுத் துறை சீர்திருத்தத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது. இதற்காக வெளி நிதி நிறுவனங்களின் உதவி கோரப்படும்.

25. போக்குவரத்துத் துறையில் சீர்திருத்தம்: தமிழ்நாட்டிலுள்ள அரசு போக்குவரத்து நிறுவனங்களின் நலிவுற்ற நிதிநிலை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். அரசுப் போக்குவரத்து



நிறுவனங்களின் கட்டுப்பாட்டின் கீழ் தற்போதுள்ள சில தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடங்களையும், பணிகள் மற்றும் செயல்பாடுகளையும் படிப்படியாகத் தனியார்மயமாக்க அரசு முடிவு செய்துள்ளது. மேற்கூறியவாறு தனியார்மயமாக்குவதற்கும், அரசு போக்குவரத்து நிறுவனங்களைச் சீரமைப்பதற்கும், உரிய நடைமுறைகளை வகுக்க உயர் நிலைக்குழு ஒன்று அமைக்கப்படும். இக்குழு மூன்று மாத காலத்திற்குள் அதன் அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

26. மின்துறை சீர்திருத்தம் : நமது மக்களின் நலனைப் பாதுகாக்கும் அதே நேரத்தில், தனித்தியங்கும் திறன் கொண்டதும், வணிகரீதியில் இலாபகரமானதுமான நிறுவனமாக, தமிழ்நாடு மின்சார வாரியத்தை மாற்றியமைக்க இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. மின்துறையில் முக்கியமான தொலைநோக்கு சீர்திருத்தங்களை உள்ளடக்கிய உடன்படிக்கை ஒன்றில் 9.1.2002 அன்று மத்திய அரசுடன் இம்மாநில அரசு கையொப்பமிட்டுள்ளது. இந்த உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:–

- மத்திய பொதுத்துறை நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் திருப்பித்தர வேண்டிய நிலுவைத் தொகைகளைக் கடன் பத்திரங்களாக மாற்ற அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கு ஏதுவாக, 8.5 சதவீத வட்டிபெறும் வரியில்லாக் கடன் பத்திரங்களை வெளியிட்டு ஒரே நேரத்தில் இக்கடனைக் கொடுத்துத் தீர்த்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

- மாநில மின் ஒழுங்குமுறை ஆணையத்தின் பணிகள் (State Electricity Regulatory Commission) அரசால் முடுக்கிவிடப்படும்.

- தமிழ்நாடு மின்சார வாரியம் மாநிலத்தில், வழங்கியுள்ள மின் இணைப்புகள் அனைத்துக்கும் மின்னளவைக் கருவிகளைப் பொருத்தும் முழுமையான திட்டம் ஒன்றை செயல்படுத்தும். இந்த நடவடிக்கை, மின் திருட்டைக் கண்காணித்துத் தடுத்திடவும், மின் அனுப்புகை மற்றும் பகிர்வு இழப்புகளை கணக்கிட்டுக் குறைத்திடவும் வழிவகுக்கும்.

இதன் பயனாக, விரைவுபடுத்தப்பட்ட மின்சக்தி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தேவையான நிதியுதவியினை மத்திய அரசு அளிப்பதாக உறுதியளித்துள்ளது. இந்த நிதி உதவி மின் அனுப்புகை – பகிர்வு கட்டமைப்புகளையும், பழைய மற்றும் புதிய அனல் / புனல் மின் நிலையங்களையும் சீரமைத்து, நவீனப்படுத்தி அவற்றின் தரத்தை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும்.

27. வரவு–செலவுத் திட்ட சீர்திருத்தங்கள் : வரவு–செலவுத் திட்டம் தயாரித்தல் மற்றும் அதன் செயலாக்கம் தொடர்பான நடைமுறைகளில் போதிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளாவிடில், நிதிச் சீரமைப்பு

நடவடிக்கை முழுமைபெறாது. வரவு–செலவுத் திட்ட முடிவுகளை மேற்கொள்வதில் வல்லுநர்கள், பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தோர், பொதுமக்கள் ஆகியோர்களது கருத்துக்களைப்பெற்று இந்த அரசு தேவையான நடவடிக்கை எடுக்கும். **இதனை ஒட்டி தமிழ்நாடு அரசின் அலுவல்முறையிலான இணையதளம் www.tn.nic.in தகவல் பரிமாற்றத்திற்கு ஏற்றதாக மேம்படுத்தப்படும்.**

28. சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவுடன் கலந்தாலோசித்து, வரவு–செலவுத் திட்டம் தயாரிக்கும் நடைமுறை மேலும் சீரமைக்கப்பட்டு வருகிறது. துறைத் தலைவர்கள் வாரியான வரவு–செலவுத் திட்டம் தயாரிக்கும் முறையை இவ்வாண்டிலிருந்து செயல்படுத்தஉள்ளோம். நடைமுறைகளை எளிமையாக்குவதற்கும், ரொக்க இருப்பு நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கும், வரவு–செலவுத் திட்டச் செயல்பாடுகளில் இணக்கத்தையும் செயல்விரைவையும் கொண்டுவருவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

29. பொருளாதார நெருக்கடியின் காரணமாக, கடுமையான முடிவுகளை எடுக்கவேண்டிய அதே நேரத்தில், சமுதாயத்தின் அடித்தளத்து மக்களின் இன்றியமையா நலன்களைப் பாதுகாக்கவேண்டிய கடமையும் நமக்கு உள்ளது. நிதிநிலைமையில் காணும் சமச்சீரற்ற நிலை, மாநில அரசின் செயல்பாடுகளை முழுவதுமாக முடக்குவதற்கு முன்னர், இந்த சமச் சீரற்ற நிலையைத் திருத்திட தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்கமுடியாது. மாநிலத்தின் ஒட்டுமொத்த நலனைப் பாதுகாத்திட சீரடைந்த நிதி நிலையை மீளப் பெறுவதே நமது தலையாய கடமையாகும். இதனை எய்திட எடுக்கப்படும் நடவடிக்கைகள் அரசியல் வேறுபாடுகள், நிர்ப்பந்தங்கள் மற்றும் விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கவேண்டும். இந்த முயற்சியில் நாங்கள் வெளிப்படையாகச் செயல்பட முனைந்துள்ளோம். நாம் சந்தித்துவரும் இக்கடுமையான நிதிநெருக்கடிப் பிரச்சனையிலிருந்து மீள்வதற்கு அனைத்துத் தரப்பினரும் நல்கிடும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வரவேற்கிறோம்.

## உள்ளாட்சி நிர்வாகத்தை வலுப்படுத்தல்

30. இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், 2002–2007 காலத்திற்கு ஊரக, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியாதாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக அரசு பின்பற்றவுள்ள நிதிப்பகிர்வு கோட்பாட்டினை இத்தருணத்தில் அறிவிக்க விரும்புகிறேன். இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மீதான விரிவான அறிக்கை இப்பேரவையின்முன் வைக்கப்படும்.

- **கேளிக்கை வரி வரவுகளைக் கழித்த பின்னர், மாநிலங்களின் சொந்த வரி வருவாயில் 8 சதவீதம் ஊரக, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும். ஊரக, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே நிதி ஆதாரப் பகிர்வு முறை 58 : 42 என்ற விகிதாச்சாரத்தில் இருக்கும்.**


- **நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் மொத்தப் பகிர்வு, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்குக்கிடையே முறையே 31 : 34 : 35 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்தளிக்கப்படும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் பகிர்வு, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கிடையே தற்போதுள்ள 47 : 45 : 8 என்ற விகிதாச்சாரத்திலேயே பகிர்வு செய்யப்படும்.**

31. நடப்பாண்டில் குறித்த காலத்தில், மாநில நிதி ஆணைய மானியங்களை அரசு வழங்க இயலாததால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகளை நாங்கள் அறிவோம். அடுத்த நிதியாண்டில் மாநில நிதி ஆணைய பகிர்வுகளுக்காக ரூ.1505 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2002–2003 **ஆம் ஆண்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில நிதி ஆணைய மானியங்களை மாதந்தோறும் வழங்க இவ்வரசு முடிவு செய்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.**

## மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டம்

32. சமூக பொருளாதாரக் குறியீடுகளில் உலகளவில் தலைசிறந்த இடத்தைப் பெற்றதாகவும், எல்லா துறைகளிலும் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகவும் தமிழகத்தை விளங்கச் செய்ய தான் உறுதி பூண்டிருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்த

வகையில், அண்மையில் இப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையில் அறிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டம், அடுத்த நான்காண்டுகளில் இந்த அரசுக்கு கொள்கைரீதியான வழிகாட்டியாக அமையும். அடுத்த நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை எய்துவதற்குத் தேவையான திட்டங்களையும், கொள்கைகளையும் கொண்டுள்ளது.




## தொடர் பசுமைப் புரட்சி

33. 1996-2001 கால அளவில் வேளாண்மைத் துறையின் நலிந்த செயல்பாடு காரணமாக, இத்துறையின் வளர்ச்சி வீதம் 2.72 சதவீதமாக மட்டுமே இருந்தது. இதன் விளைவாக, தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி வளர்ச்சி வீதம் 6.22 சதவீதமாக மட்டுமே அமைந்தது. **இம்மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் வேளாண்மை சார்ந்த வேலைவாய்ப்பைப் பெறுவதனால், (2002-2007) பத்தாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இத்துறையில் குறைந்தது 4 சதவீத வளர்ச்சி வீதத்தை எய்துவதற்கு இவ்வரசு முயற்சி மேற்கொள்ளும்.** தொழில்நுட்ப மேம்பாடுகளையும், உரிய விற்பனை வசதித் திட்டங்களையும் உள்ளடக்கியதும், சிறு மற்றும் குறு விவசாயிகள் பங்கேற்கக் கூடியதுமான, ஒரு விரிவான வேளாண்மைக் கொள்கை தொடர் பசுமைப் புரட்சிக்கு இன்றியமையாததாகும்.

34. எனவே, வேளாண்மை உற்பத்தியை அதிகரித்தல், தரிசுநில மேம்பாட்டின் மூலம் பயிரிடும் பரப்பளவை அதிகரித்தல், பாசன வசதிகளை விரிவுபடுத்தி நவீனப்படுத்துதல் ஆகியவை வேளாண்மைக்கொள்கையின் அணுகுமுறைகளாக இருக்கும். உற்பத்திக்கு ஏற்றவாறு திட்டமிட்டு, விவசாயிகள் ஆதாயமான வருவாய் பெற இயலும் வகையில், அவர்களுக்குப் பருவநிலை விவரங்கள், விற்பனை மற்றும் மேலாண்மைத் தகவல்கள் ஆகியன கிடைக்க வழிவகை செய்யப்படும்.

35. நீர்வரத்துப் பகுதி மேம்பாடு, மழைநீர் சேகரிப்பு ஆகிவற்றுடன், தரிசுநிலச் சீரமைப்புப் பணியை ஒருங்கிணைப்பதில், தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. பயிரிடும் பரப்பளவை மேலும் அதிகரித்தல், அதிக விற்பனைத் தேவை உள்ள பயிர்களுக்கு இலாபகரமான பயிர் சுழற்சி முறையைப் புகுத்துதல், விவசாயத்திற்கான பாசன வசதிகளை அதிகரித்தல் முதலியன எங்களுடைய குறிக்கோளாக இருக்கும். அடுத்த நிதியாண்டில் தரிசுநில மேம்பாட்டுக்காக ரூ.40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. **தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவதில் தனியார் துறை பங்கேற்பை ஊக்குவிக்கும் பொருட்டு, பெரும்பரப்பிலான தரிசு நிலங்களையும், தரங்குறைந்த நிலங்களையும் நீண்டகால அடிப்படையில் குத்தகைக்குவிட அரசு தயாராக உள்ளது.**

36. **வேளாண்மைத் துறையின் வளர்ச்சி இயந்திரமாக தோட்டக்கலை உருவாகிவருவதைக் கருத்தில்கொண்டு, கனிகள், காய்கறிகள், மலர்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கு இம்மாநிலத்தில் உள்ள சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் (Mission for Horticulture Development) ஒன்றை ஏற்படுத்த இவ்வரசு முடிவுசெய்துள்ளது.** இந்த இயக்கத்தின் அணுகுமுறை, சாகுபடியில் மட்டுமல்லாமல், அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் சேமிப்பு வசதி ஆகியவற்றிலும் கவனம் செலுத்துவதாக அமையும். பின்வரும் நோக்கங்களை எய்துவதே இந்த இயக்கத்தின் முக்கிய குறிக்கோளாக அமையும்.

- சரிவிகித சத்துமிக்க உர நிருவாகத்தின் வாயிலாக உற்பத்தியைப் பெருக்குதல்.

- விவசாயிகளுக்குத் தரமான பயிரிடு பொருட்கள்,(Planting material) கிடைப்பதை முறைப்படுத்தவும், தேவை அடிப்படையிலான ஆராய்ச்சிக்கு ஊக்கம்

அளிக்கவும் தகுந்த அமைப்பினை உருவாக்குதல்.

- அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் விற்பனை ஆகியவற்றிற்குப் போதிய கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

- நவீன தொழில்நுட்ப நடைமுறைகளைப் பின்பற்றுவதில் உழவர் சங்கங்கள் தீவிரமாக பங்கேற்பதை ஊக்குவித்தல்.

37. தமிழ்நாட்டில் பாசன ஏற்பாட்டுமுறைகளை நவீனப்படுத்துவதையும், நிலை உயர்த்துவதையும்




நோக்கமாகக் கொண்டு ரூ.2900 கோடி மதிப்பீட்டில் நீர் ஆதாரத் தொகுப்புத் திட்டம் – II என்ற புதிய திட்டம் தயாரிக்கப்பட்டு நிதியுதவி வேண்டி உலக வங்கிக்கு அனுப்பப்படுகிறது. சிறு மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களை நவீனப்படுத்திடவும், நிலை உயர்த்திடவும், அடுத்த நிதியாண்டில் ‘நபார்டு’ வங்கி மூலம் ரூ.250 கோடி பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

38. கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட கடன் தொகையில் காலங்கடந்த நிலுவைத் தொகைகளின் மீதான வட்டி மற்றும் அபராத வட்டி என்ற வகையில் ரூ.310.50 கோடி அளவிற்கு தள்ளுபடி அளித்து, சென்ற ஆண்டு வரவு–செலவுத் திட்ட அறிக்கையில் அரசு அறிவித்திருந்தது. 6,11,193 விவசாயிகள் ரூ.226 கோடி அளவிற்கு இவ்வசதியைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நடப்பாண்டில் இதுவரை இத்திட்டத்திற்காக கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு ரூ.80 கோடி வழங்கியுள்ளது. இவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட வட்டி மற்றும் அபராத வட்டித் தொகையில், ஏற்கெனவே வழங்கியதுபோக எஞ்சிய தொகையைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்குவதற்காக 2002–2003 ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.146 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

39. மேலே குறிப்பிட்டுளள திட்டத்தின்கீழ் வராத விவசாயப் பெருமக்களுக்கும், கடன்பெற்ற ஏனையோருக்கும் நிவாரணம் அளிக்கவேண்டுமென பல கோரிக்கைகள் அரசுக்கு வந்துள்ளன. நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் கூட்டுறவுத் துறைமூலம் கடன்பெற்றவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும், அதன்மூலம் நீண்ட காலமாக உள்ள நிலுவைத் தொகைகளை வசூலிக்க வழிவகுத்திடவும் “ஒரே தவணையில் கடனைத் தீர்க்கும் சலுகைத் திட்டம்” (One Time Settlement Scheme) என்ற திட்டத்தை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இத்திட்டத்தின்கீழ், அபராத வட்டியை முழுமையாக தள்ளுபடி செய்வதோடு, 31.3.1998 அன்றைய நிலவரப்படி வட்டி உட்பட்ட நிலுவைத் தொகையை அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் தீர்வு செய்யப்படும். இவ்வாறு கணக்கிடப்படும் தொகை ஒரே தவணையிலோ அல்லது அதிகபட்சமாக 3 மாத கால அளவிலோ வசூலிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் சுமார் 4.5 இலட்சம் கடனாளிகள் பயன்பெறுவர் என்றும், இதற்காக ரூ.110 கோடி செலவாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இச்செலவை கூட்டுறவு வங்கிகள் ஏற்க ஒப்புக்கொண்டுள்ளன. இத்திட்டம் உடனடியாக நடைமுறைக்கு வரத் தொடங்கி, 30.6.2002 வரை செயலில் இருக்கும்.

## உணவுப் பாதுகாப்பு

40. குழந்தைகள் மற்றும் கருவுற்ற தாய்மார்களுக்கு மேம்படுத்தப்பட்ட சத்துணவு வழங்குவதற்காக பாராட்டத்தக்க நடவடிக்கைகள் பலவற்றை எடுத்ததன் மூலம், தமிழ்நாடு நாட்டிலேயே முன்னணியில் உள்ளது. இந்நிலையைத் தொடர்ந்து பேணி, வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களின், குறிப்பாக கருவுற்ற தாய்மார்கள், சிசுக்கள், முதியோர்களின் சத்துணவுத் தேவைகளில் சிறப்பு





கவனம் செலுத்தும் வகையில், "வாழ்நாள் முழுமைக்கும் சத்துணவுப் பாதுகாப்புத் திட்டம்" என்ற சீரிய திட்டத்தை வகுப்பதில் நாட்டிலேயே முதல் மாநிலம் தமிழகம் என்ற நிலையை உருவாக்குவதே எங்களுடைய குறிக்கோளாகும். வரவு–செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ.286 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

41. ஏழை மக்களின் நலனைக் பாதுகாத்திடும்வகையில், பொது விநியோக முறை மூலம் விற்கப்படும் அரிசியின் வழங்கல் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற அளவிலேயே தொடர்ந்து நீடிக்கும் என்றும், வரவு–செலவுத் திட்டத்தில் உணவு மானியத்திற்கு ரூ.1240 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

42. ஊரகப் பகுதிகளில் நிலையான சமுதாய சொத்துக்களை உருவாக்குவதும், இன்றியமையாத கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதும் முழுமையான கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் (Sampoorna Grameen Rozgar Yojana) முக்கிய நோக்கமாகும். தொழிலாளர்களுக்கு ஊதியத்தின் ஒரு பகுதியாக, மனித உழைப்பு நாள் ஒன்றுக்கு 5 கிலோ உணவு தானியம் வழங்குவதன் மூலம், உணவுப் பாதுகாப்பு அளிப்பதிலும் இத்திட்டம் கவனம் செலுத்தும். 2002–2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு ரூ.292 கோடியாகும். இதில் மாநில அரசின் பங்கு ரூ.58 கோடியாகும்.

43. ஊரகப் பகுதிகளில் மக்கள் தங்கள் துணை வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக, கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு, நெருப்புக் கோழி வளர்ப்பு போன்ற உப தொழில்களை மேற்கொள்வதற்கு தக்க ஊக்கமளிப்போம். நிலமற்ற குடும்பங்களும், ஏழை விவசாயிகளும் கால்நடை வளர்ப்பை மேற்கொள்ள இயலும் வகையில், உள்ளூர் சுய உதவிக் குழுக்கள் மூலம் சமுதாய தீவன வங்கிகள் ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை இவ்வரசு ஆராய்ந்து வருகிறது.

44. கால்நடை பாதுகாப்புத் திட்டம் மேலும் வலுப்படுத்தப்படும் வகையில் வரவு–செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ.2.31 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



பத்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கால்நடை மற்றும் எருமை இனப்பெருக்கத்திற்கான ஒரு புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இதற்காக வரும்நிதியாண்டில் ரூ.2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

45. பால் பண்ணைத் துறையில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் பொருட்டு, தருமபுரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், வேலூர், விழுப்புரம், திருச்சி ஆகிய மாவட்டங்களில் 10,000 மகளிர் பயன்பெறும் வகையில், 145 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தும் புதிய திட்டம் ஒன்று, 2002–2003 இல் செயல்படுத்தப்படும். இதற்காக ரூ.6.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

46. மீனளத் துறையில் வேலைவாய்ப்பை அதிகரித்து, மீனவர்களின் வருமானத்தைப் பெருக்கும் நோக்குடன், மீனள மேம்பாட்டு இயக்கம் (**Fisheries Development Mission**) அமைக்கப்பட உள்ளது. மீனவர்களுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும் வகையில், கடல்சார் மற்றும் உள்நாட்டு மீனினவகை மற்றும் அடர்த்தியைப் பெருக்குதல், மீன்பிடி தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல், மதிப்புக் கூட்டும் துணைத் தொழில்களை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு மீன்வள மேம்பாட்டுப்பணிகளை இவ்வியக்கம் ஒருங்கிணைக்க முற்படும். இதற்காக அடுத்தாண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.


## நீர்வளப் பாதுகாப்பு

47. தமிழ்நாடு, நில மேற்பரப்பு நீர்வளத்தை ஏறத்தாழ முழுமையாகவும், நிலத்தடி நீர்வளத்தில் பெரும்பகுதியையும் பயன்படுத்திவிட்டது. இந்நிலையில், மக்களின் வீட்டுப் பயனுக்காகவும், வேளாண்மை மற்றும் தொழிற்சாலை ஆகியவற்றின் பயனுக்காகவும், நீர் ஆதாரங்களைப் பெருக்கி, அவற்றைத் தொடர்ந்து பாதுகாப்பதற்கான அவசர நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

48. கடந்த ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கிணங்க, நீர்ப்பற்றாக்குறை உள்ள ஊரகப் பகுதிகளில், 2001–2002 ஆம் ஆண்டில், நிலமட்ட நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய 4389 சிறிய விசைப் பம்புகள் நிறுவப்பட்டுள்ளன என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஊரகப் பகுதியிலுள்ள மகளிர், இத்திட்டத்திற்கு அளித்த உற்சாகமான வரவேற்பைக் கருத்தில்கொண்டு, அடுத்த நிதியாண்டில், 8000 கைப்பம்புகளை சிறிய விசைப் பம்புகளாக மாற்றிடவும், 6500 ஊரகக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

49. தொலை உணர்வுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி (remote sensing technology) இம்மாநிலத்தில், 13,000 இடங்களில் நிலத்தடி நீர்வளத்தைப் புதுப்பிக்கத்தக்க கட்டமைப்புகளை நிறுவும் பெருந்திட்டம் ஒன்று நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேசிய சுற்றுச் சூழல் மற்றும் எரிசக்தி ஆராய்ச்சி நிறுவனம் (National Environment and Energy Research Institute) மற்றும் ஏனைய தொழில்நுட்ப நிறுவனங்களின் ஆலோசனைகளைப் பெற்று, நீராதார இடங்களிலேயே குறைந்த செலவிலான சுத்திகரிப்புத் நிலையங்கள் நிறுவுவதற்கான பணிகள் 50 இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

50. சென்னை மாநகரின் நீர்த் தேக்கங்களில் தற்போது உள்ள நீரின் அளவு அவற்றின் மொத்தக் கொள்ளளவில் சுமார் 45 சதவீதம் ஆகும். கடந்த ஆண்டைக் காட்டிலும், தற்போதுள்ள நிலைமை மேம்பட்டிருந்தாலும், அடுத்துவரும் கோடை மாதங்களில் மீண்டும் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படாமல் தவிர்க்கும் பொருட்டு, தற்போதுள்ள நீரைக் கவனமாகப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்குத் திட்டம் – II ன் கீழ், தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள் போன்றவற்றைக் கட்டுவதற்காக, தொடக்க நிலை ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அம்பத்தூர், கொரட்டூர், இரட்டை ஏரி, மாதவரம் ஆகிய ஏரிகளில் தூர்வாரும் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.





51. தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்காக, கழிவுநீரைச் சுத்திகரித்து, நாளொன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் நீர் வழங்கும் திறன்கொண்ட எதிர் சவ்வூடு பரவல் முறையிலான சுத்திகரிப்பு நிலையம் (Reverse Osmosis Plant) ஒன்றை

ஏற்படுத்துவதற்கான திட்டம் நிறைவேற்றப்பட்டுவருகிறது. **சென்னையிலுள்ள தொழிற்சாலைகளின் எதிர்கால தண்ணீர்த் தேவையினை இந்நிலையத்தின் மூலமாகவே முழுமையாக நிறைவு செய்யமுடியும் என்று நம்பப்படுகிறது. நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் நீரைச் சுத்திகரிக்கும் மற்றொரு நிலையம் செம்பரம்பாக்கத்தில் நிறுவப்படும். இதன் மூலம் சென்னைப் பெரு நகரின் ஒட்டுமொத்த குடிநீர் நிலைமை சீரடைய வாய்ப்புள்ளது.**

52. அடுத்த நிதியாண்டில், சென்னை குடிநீர் வழங்கல் பெருக்குத் திட்டம்–I க்கான (**புதிய வீராணம் திட்டம்**) தனது பங்குத் தொகையாக மாநில அரசு சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றும் வாரியத்திற்கு ரூ.77.38 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

53. அவினாசி–அத்திக்கடவு குடிநீர் வழங்கல் திட்டம் **ரூ.270 கோடி செலவில் வகுக்கப்பட்டுள்ளது. நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று படிப்படியாக இத்திட்டத்தைச் செயற்படுத்த இவ்வரசு கருதுகிறது.**





54. ரூ.40 கோடி செலவில் செயல்படுத்தப்பட்ட துறை சீரமைப்புத் திட்டத்தின்கீழ், (Sector Reforms Programmes) கோயம்புத்தூர் மற்றும் வேலூர் மாவட்டங்களைச் சிறந்த சாதனை படைத்த மாவட்டங்களாக மத்திய அரசு மதிப்பிட்டுள்ளது என்பதை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். **ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டங்களில் சமுதாயப் பங்கேற்பை அமைப்பு ரீதியாக உறுதி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்குக் கிடைத்த உற்சாகமான வரவேற்பினால் ஊக்குவிக்கப்பட்டு இவ்வரசு, அடுத்த நிதியாண்டில் இத்திட்டத்தை காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர் ஆகிய மாவட்டங்களுக்கு நீட்டிக்கக் கருதுகிறது.**

## சுகாதாரப் பாதுகாப்பு

55. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டகால இறுதிக்குள், 1000 க்கு 19.3 என்ற அளவிலுள்ள பிறப்பு வீதத்தை 1000 க்கு 15 என்றும், 1000 க்கு 52 என்ற அளவிலுள்ள சிசு இறப்பு வீதத்தை 1000 க்கு 28 என்றும், ஒரு இலட்சம் பிறப்பிற்கு 140 இறப்பு என்ற அளவிலுள்ள பேறுகால இறப்பு வீதத்தை ஒரு இலட்சத்திற்கு 100 க்குக் குறைவாகவும், 1000 க்கு 8 என்ற அளவிலுள்ள இறப்பு வீதத்தை 1000 க்கு 6 என்றும் குறைக்க நாங்கள் இலக்கிட்டுள்ளோம். தமிழ்நாட்டு மக்களுக்கு எளிதில் பெறத்தக்கதும், தரமானதுமான சுகாதாரப் பாதுகாப்பினை வழங்குவதற்கு ஏற்ற பொருத்தமான கொள்கைகளை வகுப்பதன் மூலம் இந்த இலக்குகள் எய்தப்படும்.

56. மக்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு அளிப்பதில், வட்டம் மற்றும் வட்டம் சாரா மேல்நிலை மருத்துவமனைகள் முனைப்புடன் செயல்பட வேண்டும் என நாங்கள் கருதுகிறோம். இதன்மூலம், மக்களுக்கு உள்ளூரிலேயே தரமான சுகாதாரப் பாதுகாப்பை அளிக்கச் செய்வதோடு, மாநகர மருத்துவமனைகளை நாடும் நோயாளிகளின் எண்ணிக்கை பெருகுவதைக் கட்டுப்படுத்தவும் இயலும். **ரூ.11 கோடி செலவில் புதிதாக 200 துணை சுகாதார நிலையங்களைக் கட்டவும், ரூ.8 கோடி செலவில் 25 ஆரம்பச் சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலை உயர்த்தவும் கருதப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளிலுள்ள வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள், அறுவை சிகிச்சைக்கூடங்கள், எக்ஸ்–கதிர் (X-Ray) வசதிகளுடன், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்படும். இத்தகைய மருத்துவமனைகள் தேசிய நெடுஞ்சாலை அல்லது மாநில நெடுஞ்சாலைகளுக்கு அருகிலிருந்தால், அவை**

விபத்து அவசர சிகிச்சை மையங்களாகவும் செயல்படும்.




57. தாம்பரத்திலுள்ள அரசினர் நெஞ்சக மருத்துவமனை, எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதிலும், ஆலோசனை வழங்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இம்மருத்துவமனையிலுள்ள வசதிகள் அடுத்த நிதியாண்டில் ரூ.4.7 கோடி செலவில் மேம்படுத்தப்படும். இம்மருத்துவமனையை எய்ட்ஸ் நோய்த் தடுப்பு மற்றும் ஆலோசனைக்கான வட்டார மருத்துவநிலையமாக நிலை உயர்த்துமாறு மத்திய அரசிடம் கோரப்படும். சென்னை எழும்பூரிலுள்ள குழந்தைகள் நல மருத்துவமனை, ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ரூ.21 கோடி செலவில் நவீனப்படுத்தப்பட்டு நிலை உயர்த்தப்படும்.

58. 1.1.2005 லிருந்து உலக வர்த்தக நிறுவனத்தின் கோட்பாடுகளின்படி, பொருள்களுக்கான காப்புரிமை முறையைக் (Product Patent Regime) கொண்டுவந்தால், பணவீக்கத்தின் தாக்கத்திற்கு உள்ளாகி அலோபதி மருந்துகளின் விலைகள் பெரிதும் உயர்ந்துவிடும் என்பது குறித்து அரசு கவலை கொண்டுள்ளது. இந்நிலையில் சித்தா, யுனானி, ஆயுர்வேதா போன்ற இந்திய மருத்துவ முறைகளை மேலும் வலுப்படுத்த வேண்டுமென்று இவ்வரசு விழைகிறது. இதனால் ஏழைகள் மற்றும் வசதிவாய்ப்பற்றோர் நலனில் சிறப்புக் கவனம் செலுத்தும்வகையில், எளிதில் பெறத்தக்கதும் முழுமையானதுமான சுகாதாரப் பாதுகாப்பை இந்திய மருத்துவமுறையின் மூலம் தரமுடியுமென அரசு கருதுகிறது. மாவட்டங்களிலுள்ள அரசு மருத்துவமனைகளில் இந்திய மருத்துவமுறை வகைகளுக்கான தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகளை 2002–2003 ஆம் ஆண்டில் மேம்படுத்துவதோடு, பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இந்திய மருத்துவமுறை மேம்பாட்டிற்கு ஊக்கம் அளிக்கும் வகையில், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து தக்க நிதி உதவிகளைப் பெற பெருந்திட்டமொன்றை வகுக்க வேண்டுமென்றும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்திய முறை மருத்துவத்திற்கான மத்திய அதிகார மன்றத்தின் (Central Council of Indian Medicine) இசைவைப் பெற்று, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில், முழுவீதக் கட்டணத்தில் புதிதாக 30 இடங்கள் ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

59. அரசு–தனியார் பங்கேற்புடன் இந்திய முறை மருத்துவ அடிப்படையில் உலகத்தரம் வாய்ந்த மருத்துவமனை ஒன்றை சென்னையில் ஏற்படுத்தவும் இவ்வரசு கருதியுள்ளது. இந்த மருத்துவமனை கட்டுவதற்குத் தேவையான நிலத்தை அரசு அளிக்கும். அவ்வாறு வழங்கப்படும் நிலத்தின் மதிப்பு, திட்டத்திற்கான அரசின் பங்கு முதலீடாக இருக்கும். இதற்கான வழிமுறைகளை முடிவு செய்ய, நெறிப்படுத்தும் குழு (Steering Committee) ஒன்று அமைக்கப்படுகிறது. இந்த வகையில் இத்திட்டம், இந்தியாவிலேயே முதலாவதாக இருக்கும்.

60. நமது முதியோர்கள் கண்ணியத்துடனும், மதிப்புடனும் வாழ்க்கையை நடத்த ஏதுவாக, "முதியோர்களுக்கான மாநிலக் கொள்கை" ஒன்றை இவ்வரசு வகுத்துள்ளது. முதியோர்களுக்கு நிறுவனம் சாரா சேவைகளை வழங்குவதற்கு, தன்னார்வ நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும். வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள முதியோர்களுக்கு, சிறப்பு மருத்துவச் சிகிச்சைப் பிரிவுகளைப் பெற்ற அரசு மருத்துவமனைகளில், தரமான மருத்துவ வசதிகள் அளிக்கும் வகையில் "மருத்துவ வசதி அட்டை" (Health Card) முறையை அறிமுகப்படுத்த இவ்வரசு கருதியுள்ளது.

61. தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, தேனி, இராமநாதபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களில் ஏலாமையுற்றவர்களுக்குச் (Disabled) சமுதாய அடிப்படையில் ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவையை அளிக்கும்பொருட்டு, அரசு சாரா அமைப்புகள் மூலம் "ஏலாமையுற்றவர்களுக்கு மறுவாழ்வளிக்கும் தேசியத் திட்டத்தைச்"

செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக மாநில வளவாய்ப்பு மற்றும் பயிற்சி மையம் ஒன்றை சென்னையில் ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.3.8 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

## வாழ்வாதாரப் பாதுகாப்பு

62. வேளாண்மை விளை பொருள்களுக்கு மதிப்புக் கூட்டுவதன் மூலம், ஊரகப் பகுதிகளில், வாழ்வு ஆதாரப் பாதுகாப்பை மேம்படுத்தலாம். ஊரகப் பொருளாதார மேம்பாட்டில் வேளாண் அடிப்படையிலான தொழில்கள் வகிக்கக்கூடிய முக்கிய பங்கினைக் கருத்தில் கொண்டு, உழவர்களுக்கு இலாபகரமான வருவாயும், வேளாண் தொழிலாளர்களுக்கு அதிக ஊதியமும் கிடைப்பதை உறுதி செய்யும்வகையில், இத் தொழில்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. 2002–2003 வரவு–செலவுத் திட்டத்தில் கிராமச் சந்தை மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக நபார்டு வங்கியின் நிதியுதவி கோரப்படும்.

63. அதிக ஆதாயம் தரத்தக்க வணிகப் பயிர் உற்பத்திக்கான வழிமுறைகள் குறித்து, ஒரு இலட்சம் உழவர்களுக்கு மூன்றாண்டு கால அளவில் பயிற்சியளிப்பதற்கான, புதிய திட்டம் ஒன்றைத் தொடங்க இவ்வரசு உத்தேசித்துள்ளது. உழவர்களுக்குத் தொடர்ந்து தொழில்நுட்ப உதவி கிடைக்கச் செய்ய, தேவையான அடிப்படை வசதிகள் அளிக்கப்படும். உயிரினக் கழிவுமூலம் மின்உற்பத்தி நிலையங்கள், ஜாட்ரோஃபா மற்றும் பாரடைஸ் தாவரங்களிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் பிரிவுகள், எத்தனால் தயாரிப்புப் பிரிவுகள் போன்ற வேளாண் அடிப்படையிலான 1000 ஊரகத் தொழில்களை உருவாக்க இத்திட்டம் வகை செய்யும். இத்திட்டத்தின் மூலம் ஊரகப் பகுதிகளில் புதிய வேலைவாய்ப்புகள் பெருகும்.

64. இம்மாநிலத்தில் வேளாண் அடிப்படையிலான ஊரகத் தொழில்களுக்குத் தனி முக்கியத்துவம் அளிக்கும் நோக்குடன் தற்போதுள்ள அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை மாற்றியமைக்க அரசு முடிவு செய்துள்ளது. ஆளுநர் அவர்களின் உரையில் அறிவிக்கப்பட்டவாறு, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், இம்மாநிலத்தின் 385 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம் குறைந்தது ரூ.1 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்படும். வேளாண் அடிப்படையிலான இந்த பொருளாதார செயல் திட்டத்திற்கு ஊக்கம் அளிக்கப்பட்டு, இத்திட்டத்திற்கான நிதி ஆதாரத்திற்கு வகைசெய்யப்படும். நிதி ஆதாரங்களுக்குத் திட்டமிடுதல், செயலாக்கம் மற்றும் சொத்துக்களைப் பராமரித்தல் ஆகியவற்றில் சமுதாய மக்களைப் பங்கேற்கச் செய்யக்கூடிய கிராமத் தன்னிறைவுத் திட்டத்திற்கு ரூ.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

65. விரைவுபடுத்தப்பட்ட தொழில் வளர்ச்சியும், அடிப்படை வசதி மேம்பாடும், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க வழிகோலும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இவ்வரசு புதிய தொழில் கொள்கையை வகுத்துள்ளது. இதன் முக்கிய அம்சங்களாவன:


- ஊக்க உதவித் திட்டங்களை பொருள்பட ஆராய்ந்து சீரமைத்தல்
- திறன்கொண்ட, விரைவான முடிவை மையமாகக் கொண்டு செயல்படக்கூடிய ஒற்றைச் சாளர முறையை நடைமுறைப்படுத்துதல்; இதற்கான பொது விண்ணப்பப் படிவத்தை அறிமுகப்படுத்துதல்
- நடைமுறைகளை எளிமையாக்குதல் மற்றும் தற்சான்றளிக்கும் முறையை அறிமுகப்படுத்துதல்
- பெருமளவில் தனியார் துறை பங்கேற்புக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கக்கூடிய அடிப்படை வசதி மேம்பாட்டுக்கு முன்னுரிமை அளித்தல்.

66. இந்த அரசு, தொழிற்பேட்டைகள், வர்த்தக மேம்பாட்டுப் பணிகள், பொதுவசதி மையங்கள் முதலியவற்றில் கட்டமைப்பு வசதிகளைப் பராமரிக்க பொது மற்றும் தனியார்த் துறை பங்கேற்பை ஊக்குவிக்கும். தொழில் உற்பத்தியையும் ஏற்றுமதியையும் அதிகரித்து, வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் சிறு தொழில்கள் முக்கிய பங்கு வகிப்பதால், தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில்களை வலுப்படுத்த அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். மாவட்ட அளவில் ஏற்றுமதி வழிகாட்டிப் பிரிவுகளாகவும் செயல்பட இயலும் வகையில் மாவட்ட தொழில் மையங்கள் தக்கவாறு மாற்றியமைக்கப்படும். இம்மாநிலத்தில் தொழில் முனைவுத் திறனை ஊக்குவிக்கும் நோக்குடன், சென்னையில் தொழில் முனைவுத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி நிறுவனம் (Enterprenership Development Institute) ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறு தொழில்களை இணைய தளம் மூலமாக (online) உடனடியாகப் பதிவு செய்யும் திட்டம்




இவ்வாண்டிலிருந்து படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் முனைவோர், இணையதளம் வாயிலாக சிறு தொழில் தற்காலிக சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பத்தை பதிவு செய்யலாம். சிறுதொழில் முனைவோர், இணையதளம் வழியாக தற்காலிகச் சான்றிதழ் பெறும் முறை நாட்டிலேயே, தமிழகத்தில்தான் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

67. கடந்த இரண்டாண்டுகளாக நீலகிரி மாவட்டத்தில் தேயிலை பயிரிடுவோருக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து இவ்வரசு மிகுந்த கவலை கொண்டுள்ளது. தேயிலைப் பயிரிடுவோர் ஆதாய விலையைப் பெற இயலும் வகையிலும், அதே நேரத்தில் மாநிலத்தின் வருவாயைப் பாதுகாக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.




## உறைவிடப் பாதுகாப்பு

68. தமிழ்நாடு விரைவாக நகரமயமாகி வரும் மாநிலம் என்பதையும், ஊரகப் பகுதிக்கும் நகர்ப் பகுதிக்கும் இடையே வேறுபாடுகள் வெகுவாக குறைந்து வருவதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக, வீட்டுவசதித் துறையில் பெருமளவு முதலீடு செய்ய வேண்டியதும், அடிப்படை வசதிகளை செய்துகொடுக்க வேண்டியதும் அவசியமாகிறது.

தற்போதுள்ள 15,000 சாதாரண வீடுகள் நிலை உயர்த்தப்படும். இதற்கென, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.57 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

69. ஊரக மற்றும் நகர்ப் பகுதி வீட்டு வசதித் திட்டங்களுக்கு நிதியுதவியளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், ரூ.337 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி அளிப்பது இவ்வரசின் முக்கிய நோக்கமாகும். 2002-2003 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்கும் ஏனையோருக்கும் புதிதாக 31,000 வீடுகளை இவ்வரசு கட்டிக்கொடுக்கும்.

70. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் குடிசைப்பகுதி மேம்பாட்டிற்காக, பெருந்திட்டம் ஒன்றை வரும் நிதியாண்டில் அரசு செயல்படுத்தும். இதற்கென, ரூ.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.


71. சென்னையிலுள்ள குடிசைப்பகுதி

குடியிருப்புகளுக்குச் சிறப்புப் பழுதுபார்ப்பு மற்றும் நிலை உயர்த்தும் புதிய திட்டம் ஒன்று 2002–2003 ஆம் ஆண்டில் ரூ.25 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். பயனீட்டாளர்கள் நேரடி பங்கேற்பு மற்றும் பங்குநிதியுடன், தற்போதுள்ள குடிசைப் பகுதிகளில், சாலைகள், தெருவிளக்குகள், வெள்ள நீர் வடிகால்கள் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## உயிரின வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பு

72. சுற்றுச்சூழல் பாதுகாப்பே மக்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கை வசதியை உறுதிசெய்வதற்கான திறவுகோலாகும். தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டத்தின்கீழ் 2002–2003 ஆம் ஆண்டில் 108 கிராமங்களைக் கூட்டு வனவள மேலாண்மைத் திட்டத்தின்கீழ் கொண்டுவர கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பாதுகாக்கப்பட்ட காடுகளில் அழிந்துவிட்ட நிலையிலுள்ள 86,240 ஏக்கர் பரப்பில் ரூ.82.99 கோடி மதிப்பீட்டுச் செலவில் காடுவளர்ப்புப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

73. 6.17 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பைப் பசுமைப்படுத்தும் நோக்கத்துடன், "தமிழ்நாடு இயற்கை வள மேலாண்மைத் திட்டம்" ஒன்றை அரசு வகுத்துள்ளது. ரூ.779 கோடி செலவில் நிறைவேற்றப்படவுள்ள இத்திட்டத்திற்கு, பன்னாட்டு நிறுவன நிதியுதவி வேண்டி, மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.




74. நமது கிராமப்புற வீடுகளில் 11 சதவீத வீடுகள் மட்டுமே முறையான துப்புரவு வசதிகளைக் கொண்டுள்ளன. இது தேசிய அளவான 15 சதவீதத்திற்கும் குறைவாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, கிராம மற்றும் நகர்ப்பகுதிகளிலுள்ள மகளிருக்கு ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் கட்டுவதற்கான திட்டம் ஒன்றை இவ்வரசு செயல்படுத்திவருகிறது. 2002–2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.183 கோடி செலவிடப்படும். குறிப்பாக, நகர்ப்பகுதிகளில் துப்புரவு வசதிகளை மேம்படுத்துவதில் தனியார் பங்கேற்பதை அரசு ஊக்கப்படுத்தும்.

## எரிசக்தி பாதுகாப்பு

75. போதிய அளவுக்குத் தங்குதடையின்றி மின்சக்தி வழங்கப்படுவது எரிசக்தி பாதுகாப்பின் ஒரு முக்கிய அம்சம் ஆகும். மேலும் மாநில பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் இது ஒரு முக்கியப் பங்கினை வகிக்கின்றது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் தமிழ்நாட்டில் மின்துறைக்கான உத்தேச மூலதனச் செலவு ரூ.7000 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த நிதியாண்டில், இதற்கானத் திட்ட மூலதனச் செலவு ரூ.1209 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

76. இம்மாநிலத்தில் மின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், 2002–2003 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம், வழுதூரில் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 100 மெகாவாட் திறனுடைய மாநில அரசு மின் உற்பத்தித் திட்டம் செயல்பட உள்ளது. பழுப்பு நிலக்கரியை ஆதாரமாகக் கொண்ட 250 மெகாவாட் திறனுள்ள தனியார் துறை மின் உற்பத்தித் திட்டம் ஒன்றும் 2002 நவம்பரில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கூடங்குளத்தில் 2000 மெகாவாட் திறன் கொண்ட அணுமின் நிலையம் ஒன்றை அணுமின் நிறுவனம் அமைக்கவிருக்கிறது என்பதை இம்மாமன்றத்திற்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

77. தமிழ்நாட்டில் அனல் மின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதோடு, பொருத்தமான கொள்கைகளை உருவாக்குவதன் மூலம், சூரிய சக்தி, காற்று, உயிரினக் கழிவு எரிசக்தி

போன்ற மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தின் அளவைப் பெருக்குவதிலும் இந்த அரசு கவனம் செலுத்தும்.

## வளர்ச்சிக்கான கட்டமைப்பு வசதி


78. விரைந்த தொழில் வளர்ச்சிக்கு, தரமான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் போதுமான அளவில் கிடைக்கச் செய்வது அவசியமாகும். இது பொது மக்களுக்கு ஆதாயம் தரத்தக்க வேலைவாய்ப்பை உருவாக்க வகைசெய்யும். 2002–2003 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பொதுத்துறை மற்றும் தனியார் பங்கேற்புமூலம் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் இந்த அரசு தனிக்கவனம் செலுத்தும்.

79. 500 க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட குடியிருப்புப் பகுதிகளில், 2004 ஆம் ஆண்டுக்குள் அனைத்து பருவ காலத்திற்கும் ஏற்ற சாலைகளை ஏற்படுத்தி, ஊரகப் பகுதிகளில் முழுமையான தொடர்பு வசதிகளை ஏற்படுத்துவது என்ற எண்ணத்தை நாங்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளோம். இந்த நோக்கத்தை எய்திடும்பொருட்டு பெருந்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக, 2002–2003 ஆம் ஆண்டுக்கு ரூ.245.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

80. நகர்ப்பகுதி போக்குவரத்து கட்டமைப்புகளில், குறிப்பாக சென்னை மாநகரத்தில், பெருகிவரும் போக்குவரத்து நெரிசல் குறித்து அரசு மிகவும் கவலை கொண்டுள்ளது. திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரை செல்லும் ரூ.689 கோடி மதிப்பீட்டுச் செலவிலான பெருநகர் விரைவு ரயில் போக்குவரத்துத் திட்டப்பணி–II, டிசம்பர் 2002 ல் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெருநகர விரைவு ரயில் போக்குவரத்துத் திட்டம்–II ஐ பரங்கிமலை வரை நீட்டித்து, சென்னை கடற்கரை – தாம்பரம் புறநகர் பாதையுடன் இணைக்கும் திட்டப்பணி–III க்கு மத்திய அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

81. அரசுப் போக்குவரத்து நிறுவனங்களில் பழைய பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்துவருவதைக் கருத்தில்கொண்டு, 2002–2003 ல் ரூ.227.50 கோடி செலவில் 2275 புதிய பேருந்துகளை வாங்க அரசு முடிவு செய்துள்ளது.

82. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) மற்றும் அடிப்படைவசதி குத்தகை நிதியுதவி நிறுவனம் (IL & FS) (Infrastructure Leasing and Financial Services Corporation) ஆகியவற்றின் சரிபாதி அடிப்படையிலான கூட்டு முயற்சியில் அமைந்த தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக்கழகம் (Tamilnadu Road Development Company), சென்னையிலிருந்து பாண்டிச்சேரிவரையிலான கிழக்குக் கடற்கரைச் சாலையை குறித்தகால, செலவு அளவுக்குள் உலக தரத்திற்கு இணையாக நிலை உயர்த்தியுள்ளது என்பதை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். கிழக்குக் கடற்கரைச் சாலையில், மேற்குறிப்பிட்ட திட்டத்தில் சேராத திருவான்மியூரிலிருந்து சோழிங்கநல்லூர் வரையில் அதாவது 11/8 கி.மீட்டரிலிருந்து 22/3 கி.மீட்டர் வரையில் உள்ள சாலையை நான்கு வழிப் பாதையாக அமைக்கும் பணி 18 மாத காலத்திற்குள் முடிக்கப்படவுள்ளது




83. குளச்சல் துறைமுகத்தைச் சரக்குப் பெட்டக போக்குவரத்துத் துறைமுகமாக மாற்றும் செயற்குறிப்பு ஒன்று நீண்ட காலமாக பரிசீலனையிலுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மலேசிய அரசின் மாண்புமிகு, பணிகள் துறை அமைச்சருடன் அண்மையில் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, இவ்விரு அரசுகளுக்கிடையிலான அடிப்படையில் இத்திட்டத்தைப் படிப்படியாகச் செயற்படுத்த இவ்வரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் நான்

மகிழ்ச்சியடைகிறேன். முதல் கட்டப்பணிக்கு ரூ.2772 கோடி செலவாகும். இதுபற்றிய விவரங்கள் கணக்கிடப்பட்டு வருகின்றன.

84. தமிழ்நாட்டில் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தவும், குறிப்பாக வேலைவாய்ப்பை பெருக்குவதற்கும், சுற்றுலாத் தொழிலுக்கு புதுவடிவம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தென்




இந்தியாவிலேயே, சுற்றுலாப் பயணிகள் அவசியம் வந்து, தங்கிப் பார்க்கக்கூடிய ஈர்ப்புசக்தி மிக்க சுற்றுலா மையமாக சென்னையை உருவாக்குவதற்கு, பன்னாட்டு மற்றும் தேசிய சுற்றுலா கருத்தரங்குகளை நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கருநாடகம் மற்றும் ஆந்திரப் பிரதேசம், ஆகிய மாநிலங்களின் அரசு சுற்றுலா நிறுவனங்களுடன் சுற்றுலாப் பயணிகள்பரிமாற்றத் திட்டங்கள் மற்றும் விற்பனை, விளம்பரம் உள்ளடக்கிய சுற்றுலா வளர்ச்சிக்கான உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டுள்ளது. 2002–2003 ஆம் ஆண்டிற்குச் சுற்றுலாத் துறைக்கு ரூ.25 கோடியாக உயர்த்தி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## எழுத்தறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவு

85. இம்மாநிலத்தில் தொடக்கக் கல்வி மற்றும் பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்குத் தேவைப்படுகிற சில முக்கிய நடவடிக்கைகளை நாங்கள்இனம் கண்டுள்ளோம். அனைத்து குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பதற்கான சிறப்பு நடவடிக்கைகள், பள்ளிப்படிப்பை இடையிலேயே நிறுத்திவிடாமல் தடுப்பது, பாடத் திட்டத்தின் தரத்தை உயர்த்துவது, பள்ளிக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து பணியில் ஊக்குவித்தல், குறைந்தபட்ச கல்வி கற்றலை உறுதிசெய்தல், பள்ளிகளின் நிருவாகத்தில் பெற்றோர்களையும் பெருமளவு ஈடுபடச் செய்வது ஆகியன இந்நடவடிக்கைகளில் அடங்கும்.

86. அடுத்த நிதியாண்டில் 17 மாவட்டங்களில் சில குறிப்பிட்ட குடியிருப்புப் பகுதிகளில் 252 கல்வி மையங்களில் "கல்வி உத்தரவாதத் திட்டம்" செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் 6000 க்கும் அதிகமான குழந்தைகள் பயனடைவர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இடையில் பள்ளிப் படிப்பை நிறுத்திவிடும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கத்துடன், "மாற்று–புதுமைக் கல்வித் திட்டம்" என்ற மற்றொரு திட்டமும் 21 மாவட்டங்களில் 1622 கல்வி மையங்களில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் மாநிலத்தில் 61,305 குழந்தைகள் பயனடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

87. ஆளுநர் உரையில் அறிவித்தவாறு, வாழ்க்கைத் தொழில் பயிற்சிப் பள்ளிகள் அடுத்த நிதியாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்படும். இப்பயிற்சிப் பள்ளிகளைத் துவக்குவதற்காக 2002–2003 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் முதற்கண் ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் குறித்து மதிப்பீடு செய்து விரிவான திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்து, அடுத்த நான்கு ஆண்டுகளில் அப்பள்ளிகளுக்குத் தேவையான நிதியுதவியை அளிப்பதற்கான வழிமுறைகளைப் பள்ளிக் கல்வித் துறை வகுக்கும்.

## நாட்டுப்புற, பாரம்பரிய மற்றும் நவீனக் கலை, பண்பாடு, நாடகம்

88. இம்மாநிலத்தின், சமுதாயம், பண்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைச் சித்தரிக்கும் வகையில், "அமைதிப் பூங்கா" ஒன்றை சென்னை மாநகரை ஒட்டி அமைக்க அரசு கருதியுள்ளது. இதற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.50 இலட்சம் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த நினைவுச் சின்னத்தின் வடிவமைப்பு மற்றும் அமையவிருக்கும் இடம் பற்றி




முடிவு செய்த பின்னர், 2002 ஆம் ஆண்டு மத்தியில் இதற்கான பணி தொடங்கவுள்ளது.

89. தமிழ்நாடு வெவ்வேறு பண்பாட்டுச் சிறப்புகளையும் பாரம்பரியத்தையும் தன்னகத்தே பெருமையுடன் கொண்டுள்ளது. இவற்றைப் போற்றி பேணி பாதுகாப்பது அவசியம் ஆகும். இம்மாநிலத்தின் மரபுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காக நிறைவேற்றப்படவேண்டிய பல்வேறு திட்டங்களுக்காக வரவு–செலவுத் திட்டத்தில் அரசு ரூ.4 கோடி ஒதுக்கியுள்ளது.

## பாலின நேர்மை நெறி **(Gender Equity)**

90. அடுத்த நிதியாண்டில், கல்வி, சுயவேலைவாய்ப்பு, பயிற்சி ஆகியவற்றிற்குத் தக்க வாய்ப்புகள் அளிப்பதன் மூலமாக, பெண்களுக்கு சமூக–பொருளாதார உரிமைகளை வழங்குவதில் அரசு தனி கவனம் செலுத்தும். சிறப்பு வாய்ந்த 'தொட்டில் குழந்தைத் திட்டம்' நாடெங்கிலும் பெருவாரியான ஆதரவைப் பெற்றுள்ளது. பெண் சிசுக்கொலை என்னும் கொடிய பழக்கத்திற்கு எதிரான பன்முகப் பிரச்சாரத்தை நாங்கள் தீவிரப்படுத்த உள்ளோம். அதேபோன்று, செம்மைப்படுத்தப்பட்ட 'பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்' புதிய வேகத்துடன் செயல்படுத்தப்படும். இதற்காக ரூ.22.07கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பல்வேறு சுயவேலைவாய்ப்புத் துறைகளில் பெண்களுக்குப் பயிற்சி அளித்துவரும் தற்போது நடைமுறையில் உள்ள திட்டம் அடுத்த நிதியாண்டில் மேலும் வலுப்படுத்தப்படும்.

91. எளிய கடன்–சேமிப்பு வசதிகளை நல்கும் முக்கிய ஆதாரங்களாக, 17.5 இலட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சுமார் 1.02 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள், உருவாகியுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துகொள்கிறேன். **இம்மாநிலத்தில் ஒவ்வொரு வளர்ச்சி வட்டார அளவிலும், இத்தகைய சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பு ஏற்படுத்துவதற்கு அரசு துணைபுரியும்.**

92. அரசு மற்றும் தனியார் முயற்சிகளில் மகளிரின் மேம்பாட்டுக்கான முழுமையான கொள்கை ஒன்றை இந்த அரசு வகுக்கும். மகளிர் மனித உரிமையையும், அடிப்படை உரிமைகளையும் உறுதிப்படுத்துதல், முடிவுகளை எடுக்கின்ற நடைமுறையில் சரிசமமாக மகளிரைப் பங்குகொள்ளச் செய்தல் ஆகியவற்றின் மூலம் பாலின நேர்மை ஊக்குவிக்கப்படும். **மகளிர் மீதான குற்றங்களை விசாரிப்பதற்கென்றே சென்னையில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரு மகளிர் நீதிமன்றங்களை அடுத்த நிதியாண்டில் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.**

## ஒடுக்கப்பட்ட மக்களுக்கான புதிய அணுகுமுறை


93. ஆதிதிராவிட–பழங்குடியின மக்களின் சமூக – பொருளாதார நிலையை மேம்படுத்துவது இவ்வரசின் உயரிய முன்னுரிமைகளில் ஒன்றாகும். ஆதிதிராவிட–பழங்குடியின மாணவியர்களுக்கு அரசு கல்வி நிறுவனங்களில் பட்ட மேற்படிப்புவரை இலவசக் கல்வி வழங்குவதாக அளித்த உறுதிமொழியை நாங்கள் நிறைவேற்றியுள்ளோம். **அரசுப் பள்ளிகளில் பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 படிக்கும் ஆதிதிராவிட, பழங்குடியின மாணவியர்களுக்கான இலவச மிதி வண்டி அளிக்கும் திட்டம், தொடர்ந்து அடுத்த நிதியாண்டிலும் ரூ.6 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். இச்சமூகத்தைச் சார்ந்த மாணவர்களுக்கான விடுதிகள் ரூ.45.05 கோடி செலவில் கட்டப்படும்.**

94. ஆதிதிராவிடர்–பழங்குடியினர் நலனுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆய்வுசெய்தபோது, இச்சமுதாய மக்களின் நலனுக்கான நிதி ஆதாரங்களை உரிய அளவில் ஒதுக்கீடு செய்ததில் குறைபாடுகள் இருப்பது தெரியவந்துள்ளது. ஆதிதிராவிட–பழங்குடியின மக்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கேற்ப, இந்த இரு திட்டங்களின் கீழான திட்டங்களை முன்னுரிமைப் படுத்துவதற்காக உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

95. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் (தாட்கோ) சீரமைக்கப்பட்டு வருகிறது. வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களுக்காக வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும், வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பயிற்சித் திட்டங்களைக் கொண்டுவருவதற்கும் தனிக் கவனம் செலுத்தப்படும்.

96. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர், சிறுபான்மையினர் ஆகியோருக்குக் கல்வி மற்றும் பொருளாதார உரிமைகளை உறுதிசெய்யும் நடவடிக்கைகளை இவ்வரசு தொடர்ந்து மேற்கொள்ளும். இச்சமுதாய மக்களுக்கு சுய வேலைவாய்ப்பு வழிவகைகளை அதிகரிப்பதற்காக, அவர்களுக்கு எளிய கடன் வசதிகள் விரைவில் கிடைக்க இயலும்வகையில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் (TABCEDCO) பணிகள் மேலும் சீரமைக்கப்படும்.

97. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகிய சமுதாயங்களைச் சார்ந்த மாணவர் இல்லம் கட்டும் பெரும் திட்டம் ஒன்றை ரூ.36.99 கோடி செலவில் அரசு மேற்கொண்டுள்ளது. இவ்வகுப்பினருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ள இடங்களில் தெருவிளக்கு, வடிகால் வசதி, குடிநீர் வழங்கல் வசதி போன்ற அடிப்படை வசதிகளை அளிப்பதற்காக சிறப்புத் திட்டம் ஒன்றையும் இவ்வரசு மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் அடுத்த நிதியாண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.




98. ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டவாறு, சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக் கழகம் என்ற புதிய பல்கலைக் கழகம் ஒன்று துவக்கப்படும். இதற்காக அடுத்த நிதியாண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.50 இலட்சம் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

99. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் 1994 ஆம் ஆண்டில் வஃக்பு வாரியத்திற்கு மானியமாக ஒரு கோடி ரூபாய் அளித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூறலாம். இவ்வாரியம் தனக்கான சொந்த அலுவலகக் கட்டிடத்தைக் கட்டிக்கொள்வதற்காக இவ்வாண்டு ரூ.40 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. பொது வளாகங்கள் சட்டத்தின் ஆய்வு வரம்பிற்குள் வஃக்பு வாரியத்தின் சொத்துக்களைச் சேர்த்திட ஏதுவாக அச்சட்டத்தைத் திருத்தவும், இவ்வாரியத்தின் நிதிநிலையை மேம்படுத்தவும், அனுமதியற்ற அனுபோகதாரர்களை வெளியேற்றுவது தொடர்பான விதிமுறைகளை மேலும் கடுமையாக்கவும் இந்து சமய

அறநிலையச் சட்டத்தில் உள்ளதுபோன்று, 1995 ஆம் ஆண்டு வஃக்பு வாரிய சட்டத்திலும் மாநில அளவில் தக்க திருத்தங்கள் செய்யவும் இவ்வரசு கருதிவருகிறது.

## அதிவிரைவு தொழில்நுட்ப முன்னேற்றம்

100. இந்நாட்டிலேயே, அந்நிய முதலீடுகளை ஈர்க்கும் முக்கிய மாநிலமாக தமிழ்நாடு உருவாகி வருவது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும். மத்திய அரசின் தொழில் உதவி தலைமைச் செயலகம் தெரிவித்தபடி, 2001 செப்டம்பர் வரை நம்முடைய மாநிலத்திற்கு ஏற்பளிக்கப்பட்ட மொத்த வெளிநாட்டு முதலீடுகள் ரூ.22,493 கோடி ஆகும். வெளிநாட்டு நேரடி முதலீடுகளில், தமிழ்நாடு இந்நாட்டில் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. பெரும் தொழில் திட்டங்கள் பல இம்மாநிலத்தில் விரைவில் அமையவுள்ளன.

101. வேலைவாய்ப்பு மற்றும் முதலீட்டு ஆதாரங்களைப் பெருக்குவதையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட, உயிரி–தொழில்நுட்பம், தகவல்தொழில்நுட்பம் போன்ற அறிவியல் முன்னணித் தொழில்நுட்ப ஆராய்ச்சிக்குச் சிறப்புக் கவனம் தரப்படும்.

102. டிட்கோ நிறுவனம் சென்னையில் உயிரி தொழில்நுட்ப வளர்ச்சிப் பூங்கா (Bio-technology Park) ஒன்றை நிறுவி வருகிறது. **இப்பூங்கா உயிரின ஆதார மைய வசதியையும், தனித்தன்மை வாய்ந்த ஆய்வக வசதிகளையும் கொண்டிருக்கும். இத்திட்டத்தின்மூலம் இம்மாநிலத்திற்கு ரூ.1000 கோடி அளவிற்கு முதலீடுகள் கிட்டிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.** உயிரி–தகவல் தொழில்நுட்பம் (Bio informatics) மற்றும் மரபணுசார் அதிநவீன மையம் (Genomics Centre) ஒன்றும் ரூ.20 கோடி திட்டசெலவில் ஏற்படுத்தப்பட்டுவருகிறது. இத்திட்டம் டிஎன்ஏ (DNA - De-Oxi Ribo Nucleic Acid sequencing) சோதனைக்குரிய, வணிக ரீதியிலான நவீன ஆய்வக தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கும்.

103. சென்னையில் அமையவிருக்கும், தகவல்–தொழில்நுட்ப பெருவழி (IT Highway), உலகத் தரம்வாய்ந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும் கொண்டிருக்கும். அறிவுசார் தொழில்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், அறிவுசார் தொழில் நகரியங்கள் (Knowledge Industries Townships) அரசு மற்றும் தனியார் பங்கேற்புடன் ஏற்படுத்தப்படும். **வினாடிக்கு 11 டெராபிட்ஸ் (Terabits) திறன்கொண்ட, சென்னையை கடல்வழியாக இணைக்கக்கூடிய, கண்ணாடி இழை கம்பிவட இணைப்பக (Optic Fibre Cable Network) வசதி அளிக்கும் இரண்டு திட்டங்கள் செவ்வனே நடைபெற்றுவருகின்றன. இப்பணிகள் முடிவடைந்ததும், சென்னை, இந்தியாவின் மிகமுக்கியமான இணையதள நுழைவாயிலாக அமையும். இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) மூலமாக பன்னாட்டு ஆராய்ச்சி மற்றும் அறிவுத்திறன் மேம்பாட்டு பூங்கா (International Research and Development Knowledge Park) ஒன்று சென்னையில் ஏற்படுத்தப்படும்.**

104. தகவல்–தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் முதலீடு செய்வதற்குரிய மையங்களாக, சென்னையோடு கோயம்புத்தூர், மதுரை, திருச்சி ஆகிய பிற இடங்களையும் மேம்படுத்தி, ஊக்குவிப்பதற்காக தனி அமைப்பு ஒன்றைத் துவக்குவது குறித்து இவ்வரசு ஆராய்ந்து வருகிறது. தமிழ்நாட்டில், மின்னணு செய்தி போக்குவரத்து வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கத்துடன் உயர்திறன் (Broad Band) கண்ணாடி இழை கம்பிவடம் 5000 கிலோ மீட்டர் நீளத்துக்குப் பதிக்கப்பட்டுள்ளது என்பதையும், இது மேலும் அதிகரிக்கப்படும் என்பதையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். **ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கிடையே உள்ள தகவலியல் இடைவெளியைப் (rural - urban digital divide) போக்கும் நோக்குடன், "வில்" (Wireless in Local Loop Technology) தொழில்நுட்ப அடிப்படையில் அமைந்த இந்திய ஊரக பகுதிகளிடையேயான நீடித்த தொடர்புத் திட்டம் (SARI - Sustainable Access in Rural India Project) செயல்படுத்தப்படும்.**

105. "www.tn.highways.org" என்ற இணைய தளத்தை தமிழக நெடுஞ்சாலைத் துறை விரைவில் துவக்கவுள்ளது. இத்தளத்தில் இத்துறை பற்றிய முக்கிய நடவடிக்கைகள், ஆலோசகர்களுக்கான அழைப்புக் கடிதங்கள், ஏல ஆவணங்கள் முதலியன இடம்பெறும். இதன்மூலம் வெளிப்படையான

ஒப்பந்தப்புள்ளி முறைகளை ஊக்குவிக்கவும், ஏலமுறை போட்டிகளின் தரத்தை உயர்த்தவும் வகைசெய்யப்படும்.

## நிருவாகம்

106. கடந்த சில ஆண்டுகளாகவே அரசுக் கட்டிடங்களைப் பராமரிப்பதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. **அடுத்த நிதியாண்டில் சென்னையிலும், அனைத்து மற்ற மாவட்டங்களிலும் உள்ள முக்கிய அரசு கட்டிடங்களை ரூ.110 கோடி செலவில் சிறப்புப் பழுதுபார்க்கவும், மேம்படுத்தவும் இவ்வரசு திட்டமிட்டு உள்ளது.**

107. அரசு நிர்வாகத்தில் தகவல் தொழில்நுட்பத்துக்கும், அது சார்ந்த பணிகளுக்கும் முக்கியத்துவம் அளித்து, மாநிலத் தலைமைச் செயலகத்திலும், மாவட்டத் தலைமையிடங்களிலும் நிருவாகத்தைக் கணினி மயமாக்கும் திட்டத்தை அரசு விரைவில் செயல்படுத்தும். இதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

108. 'நிருவாக வசதியை மக்களின் வாழ்விடங்களுக்கே கொண்டு செல்லுதல்' (Administration at the door-steps of the people) என்பதே இவ்வரசின் முழக்கம் ஆகும். இந்நோக்கத்தை எய்துவதற்காக, கிராம நிருவாக அலுவலர்களுக்கான அலுவலகம் கட்டும் திட்டம் ரூ.9.90 கோடி மூலதனச் செலவில் அடுத்த நிதியாண்டில் தொடரப்படும்.

109. அரசுப் பணியாளர்கள் எந்தவொரு அரசு நிருவாக அமைப்பிலும் அதன் முதுகெலும்பாக விளங்குகின்றனர். அரசின் நிதிநிலைமை சீரடைந்ததும், தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள பணிப்பயன்கள் அனைத்தும் திரும்பக் கிடைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஏற்கெனவே உறுதியளித்துள்ளவாறு, அரசுப் பணியாளர்களுக்கு வீடுகட்டும் முன்பணம் தாராளமாக வழங்கிடும் வகையில் நடப்பு ஆண்டுத் திருத்த மதிப்பீடுகளில் ரூ.150 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

110. திறமை மற்றும் அறிவு ஆற்றலைத் தொடர்ந்து உயர்த்துவதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, நம் மாநில அலுவலர்கள் சிறப்புப் பயிற்சிகளையும், உயர் கல்வியையும் உள்நாட்டிலேயே பெறுவதற்காக ரூ.1 கோடி ஒதுக்க அரசு முடிவு செய்துள்ளது.

## நிதி நிலைமை கணிப்புகள் (Fiscal Projections)

111. 2002–2003 ஆம் ஆண்டில் மாநில அரசின் மொத்த வருவாய்ச் செலவு ரூ.26861.54 கோடி என்றும், வருவாய் வரவுகள் ரூ.20628.32 கோடி எனவும் இதன் விளைவாக, வருவாய் பற்றாக்குறை ரூ.6233.22 கோடி என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் மாநில அரசின் நிதிப்பற்றாக்குறை ரூ.8895.04 கோடியாக இருக்கும்.

112. 2002–2003 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூ.1330.24 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய நிதி மற்றும் நிதிநிலைப் பிரச்சினைகளிலிருந்து மாநில அரசு மீள நடைமுறைச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நான் குறிப்பிட்டுள்ள சீரிய நிதிச்சீர்திருத்தத் திட்டம், உதவிகரமாக அமையும். அடுத்த நிதியாண்டிற்கான வரி விதிப்புச் செயற் குறிப்புகளை இப்பேரவையில் வைக்க விழைகிறேன்.

## வணிக வரிகள்

113. 2001ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் இந்த சட்டப் பேரவையில் வைக்கப்பட்ட வெள்ளை அறிக்கையில், தமிழக அரசின் சொந்த நிதி வருவாயில் 66 விழுக்காடு வணிகவரி மூலம் பெறப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. 2001–2002ஆம் நிதியாண்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு இத்தகைய வருவாய் இனங்களின் வளர்ச்சியை பாதித்துள்ளது. இத்தகைய பின்னடைவில், உடனடியாக மாற்றம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இல்லாததால், எதிர்நோக்கும் கூடுதல் நிதிப் பற்றாக்குறை, நிதி நிலைமையை மேலும் சிக்கலாக்குகிறது.

114. கடந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையில், மதிப்புக் கூட்டு வரி முறையினை செயல்படுத்தும்போது எழக்கூடிய பல்வேறு பிரச்சினைகளை விரிவான ஆய்வு செய்ய

இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. தற்போதுள்ள நிலவரப்படி, நாடு முழுவதுமாக 1.4.2003 முதல் மதிப்புக்கூட்டுவரி முறை அமல்படுத்தப் படவிருக்கிறது. மாநில நிதியமைச்சர்கள் அடங்கிய அதிகாரமளிக்கப்பட்ட குழுவினால் முடிவு செய்யப்பட்ட வழிமுறைகளின்படி, வணிகவரி ஆணையர் அலுவலகத்தின் இணைய தளத்தில் (website), மதிப்புக் கூட்டுவரி செயல்படுத்தல் குறித்த ஆலோசனைகளை வழங்கக் கோரி ஒரு 'விவாதக் குறிப்பு' வைக்கப்பட்டுள்ளது. மதிப்புக் கூட்டுவரியினை நன்முறையில் செயல்படுத்துவதற்கு, புள்ளி விவரங்களை அனுப்புவதற்குத் தேவையான திறன் கொண்ட முழுமையான கணினிமயமாக்குதல் அவசியம். ஆகவே வணிக வரித் துறையினை கணினிமயமாக்குவதற்கான ஒரு விரிவான திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

115. எனவே 2002–2003 நிதியாண்டிற்கான புதிய வரிவிதிப்பு திட்டங்களை முடிவு செய்யும்போது, பொருளாதாரப் பின்னடைவினால் ஏற்பட்ட வருவாய் வளர்ச்சிச் சரிவினை ஈடுகட்ட கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதையும், அடுத்த நிதியாண்டில் மதிப்புக் கூட்டுவரித் திட்டத்தை அமல்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய முன் ஏற்பாடுகளையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இந்த அடிப்படையிலேயே, தொழில் மற்றும் வணிக நிறுவனங்களிடமிருந்து பல்வேறு காலக்கட்டங்களில் பெறப்பட்ட கருத்துக்களும், 18.1.2002 அன்று நடத்தப்பட்ட நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டத்தில் பெறப்பட்ட கருத்துக்களும் பரிசீலிக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையிலான வரிவிதிப்புகள் பற்றிய விவரங்களை, நான் அளிக்க விழைகின்றேன்.

116. மதிப்புக் கூட்டுவரி முறையின்கீழ், பின்வரும் பொருட்கள் தவிர்த்து, ஏனைய பொருட்கள் மீது மூன்று விதமான விகிதங்களில் வரிவிதிக்க நேரிடும்.

- வரிவிலக்கிற்குரிய பொருட்கள்
- மதிப்புக் கூட்டு வரிக்குட்படாத பொருட்கள்
- சரியீட்டுக் கொள்கைக்கு (set-off) உட்படாத பொருட்கள்

ஒருசில பொருட்களுக்கு சிறப்புக் கூடுதல் வரி (SAT) விதிக்கப்படுவதற்குட்பட்டு. இந்த வரிவிகிதங்கள் குறிப்பிட்ட 1 விழுக்காடு, 4 விழுக்காடு மற்றும் வருவாய் சமநிலை வரிவிகிதம் (RNR) என்ற அளவில் இருக்கும். வருவாய் சமநிலை விகிதம் 12 விழுக்காடு அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் இருக்கக் கூடும். எனவே தற்போது வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள பொருட்களின் பட்டியலை சீராய்வு செய்ய வேண்டிய தேவையேற்பட்டுள்ளதோடு, தற்போதுள்ள 8 விழுக்காடு வரிவிகிதத்திலிருந்து வருவாய் சமநிலை வரிவிகிதத்திற்கு அடுத்த ஓராண்டிற்குள் வர நாம் தயாராக வேண்டிய நிலையும் எழுந்துள்ளது. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழுள்ள அட்டவணைகள் (Schedules) மற்றும் பகுதிகளைச் (Parts) சீரமைக்கும் நோக்கில், இச்சட்டத்திலுள்ள அட்டவணைகள் (Schedules) மற்றும் பகுதிகளில் (Parts) குறிப்பிட்டுள்ள பதிவுத் தொகுதிகளை (grouping of entries), மறு ஆய்வு செய்து, தற்போதுள்ள நானூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட பதிவுகள், முந்நூறுக்கும் கீழே குறைக்கப்படுகின்றன.

117. எனவே, தற்போதைய 8 விழுக்காடு வரி விதிப்பிற்குரிய பொருட்கள் பிரித்தெடுக்கப்பட்டு, அவற்றை 4 விழுக்காடு, 10 விழுக்காடு, மற்றும் 12 விழுக்காடு கொண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்லக் கருதப்பட்டுள்ளது. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959ன் கீழ் ஒரு புதிய அட்டவணையினை ஏற்படுத்தி, அதில், பெட்ரோலியப் பொருட்கள், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள், வெளிநாட்டு மதுவகைகள், கரும்பு, புகையிலை இல்லாத பான் மசாலா, சர்க்கரைக் கழிவு, 12 விழுக்காடு மற்றும் 16 விழுக்காடு வரி விகிதத்தைக் கொண்ட பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டு பொருட்களுக்கு இணையான வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் ஆகியவை கொண்டு வரப்படும். இது தவிர, 1 விழுக்காடு வரி விதிப்பிற்குரிய அட்டவணை ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதன்கீழ் தங்கம், வெள்ளிப் பாளங்கள் ஆகியவையும் மற்றும் பயனற்ற அல்லது தட்டிய நகைகளும் கொண்டுவரப்படும்.

118. பல மாநிலங்களில் அரிசி, கோதுமை, வெல்லம், மிளகு, பருப்பு வகைகள் மீது வரி விதிக்கப்படுகிறது. வரி ஆதாரங்களைப் பெருக்கும்வகையில், இந்தப் பொருட்களின்மீது நமது மாநிலத்தில் அளிக்கப்பட்டுள்ள வரிவிலக்கை

மறுஆய்வு செய்ய கருதப்பட்டது. அரிசி மற்றும் கோதுமையின் முதற்கட்ட விற்பனைமீது, குறைந்த வரியாக 2 விழுக்காடு விதிக்கக் கருதப்பட்டுள்ளது. பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசி மற்றும் கோதுமைக்கு வரிவிதிக்கப்பட மாட்டாது. வெல்லம், மிளகு, பருப்பு வகைகள் மீது 4 விழுக்காடு வரி விதிக்கப்படும். அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் ஆகியவை மீது கூடுதல் விற்பனைவரி விதிக்கப்படமாட்டாது. கொப்பரைத் தேங்காய்மீது வெளிமாநில விற்பனையின்போது விதிக்கப்பட்டு வரும் 1 விழுக்காடு வரி, 2 விழுக்காடு வரியாக உயர்த்தப்படும். தற்போது வரிவிலக்கு பெற்றுள்ள சித்தா மற்றும் யுனானி மருந்துகள் மீது, ஆயுர்வேத மருந்துகள் மற்றும் ஹோமியோபதி மருந்துகளுக்கு விதிக்கப்படுவது போல 4 விழுக்காடு வரி விதிக்கப்படும்.

119. வரிவிலக்கு அளிக்கப்பட்ட மற்றும் 4 விழுக்காடு வரிவிதிப்பிற்குரிய பொருட்களை சீராய்வு செய்ததின் தொடர்ச்சியாக, சாம்பிராணி (Gum Benzoin) மற்றும் உடனடி சாம்பிராணிமீது, கற்பூரம் மற்றும் ஊதுவத்திகளுக்கு விதிக்கப்படுவது போல 4 விழுக்காடு வரிவிதிக்கப்படும். தைக்கப்பட்ட கைக்குட்டைகள் மீது 4 விழுக்காடு வரி விதிக்கப்படும். அதிகபட்ச சில்லரை விற்பனை விலை ரூபாய் நூறுக்குக் குறைவாக உள்ள காலணிகள்மீது வரிவிலக்கு தொடர்ந்து இருக்கும். ஆனால், ஆண்டுக்கு ரூபாய் மூன்று இலட்சத்திற்கு மேல் விற்றுமுதல் (turnover) உள்ள வணிகர்களால் விற்கப்படும் காலணிப் பட்டிகள் மீது, காலணி விற்பனை மீது விதிக்கப்படும் 10 விழுக்காடு வரியே விதிக்கப்படும். சூரிய சக்தியால் இயங்கும் சமையற் கருவிகள், நகர கழிவுகளை எரிசக்தியாக மாற்றியமைக்கும் சாதனங்கள், எரிசக்தி சேமிக்கும் அடுப்புகள் (chulas) ஆகியவை மீதுள்ள வரிவிலக்கு தொடரும். இதர மீள்சக்தி சேமிப்புக் கருவிகள் (renewable energy conservation devices) மீது 4 விழுக்காடு வரிவிதிக்கப்படும். துணிக் கழிவுகளை, பருத்திக் கழிவு மற்றும் இதரக் கழிவுகள் என்ற வகையோடு சேர்த்து, அவற்றின்மீது 4 விழுக்காடு விரிவிதிக்கப்படும். பருத்திக் கொட்டைப் பொட்டு, நெல் உமி என்ற வகையோடு சேர்க்கப்பட்டு, அதற்கு வரிவிலக்கு அளிக்கப்படும். வேப்பம் பிண்ணாக்கு, ஒரு பூசணக் கொல்லி (fungicide) என்பதால், இதற்கு வரிவிலக்கு அளிக்கப்படும். தற்போது 4 விழுக்காடு வரிவிதிக்கப்பட்டு வரும் இரப்பர் விளையாட்டு பலூன்கள் மற்றும் மீன்பிடி வலைகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும். மேலும் தற்போது 4 விழுக்காடு வரி விதிக்கப்பட்டு வரும் உடற்கட்டமைப்புக்கான சாதனங்கள் உள்ளடக்கிய உடற்பயிற்சிப் பொருட்கள் மற்றும் சாதனங்கள், எண்ணெய் ஒட்டாத பாத்திரங்கள் மற்றும் தொலைக்காட்சி வானலை வாங்கிகள் (antennas) ஆகியவற்றின் மீது 12 விழுக்காடு வரி விதிக்கப்படும். தேங்காய்த் துருவல்கள் (Desiceated coconuts) மீது 4 விழுக்காடு வரி விதிக்கப்படும்.

120. எட்டு விழுக்காடு வரி விதிப்புப் பகுதியினைப் பிரித்தமைக்கும்போது, பின்வரும் பொருட்களின் மீதான வரிவிகிதம் 4 விழுக்காடாகக் குறைக்கப்படும் :

மூங்கில், புட்டி மூடிகள், வணிகச் சின்னமிடாத மிட்டாய்கள் மற்றும் தின்பண்டங்கள், வணிகச் சின்னமிடாத கேக் மற்றும் ஐஸ் கிரீம் உள்ளிட்ட வணிகச் சின்னமிடாத உணவுப் பொருட்கள், பருத்தி நூல் கழிவு, கைவினைப் பொருட்கள், பளிச்சீடு செய்யப்பட்ட சணற் பைகள், பனைக் கொழுப்பு அமிலம், வெளுப்புத் திரவம், உயரடர்த்தி பாலி எத்திலீன்(Poly Ethylene) மற்றும் பாலி பொரபலின்(Poly Propylene) ஆகியவற்றால் நெய்யப்பட்ட துண்டுப்பட்டைகள், மற்றும் துணி, குடைகள், தகரக் கொள்கலன்கள், இலகு மேற்கூரைத் தகடுகள், பதிவு பெறாத வணிகச் சின்னமுடைய பிஸ்கட்டுகள். மேலும், வணிகச் சின்னமிட்டு சிப்பமாக்கப்பட்ட (packed) பச்சைக் காய்கறிகள் மற்றும் வணிகச் சின்னமிடாத வெண்ணெய் ஆகியவற்றிற்கு • வரிவிலக்கு அளிக்கப்படும். வீட்டு உபயோகப் பாத்திரங்கள் தவிர்த்த உலோகப் பாத்திரங்கள், அழுத்த மற்றும் சூடு எதிர்ப்புச் சமையற் பாத்திரங்கள், மின் விசிறிகள், மின்னணுவால் இயங்கும் பொருட்கள், டம்ப்பர்கள் (dumpers) மற்றும் மண்வாரி இயந்திரங்கள் ஆகியவை 12 விழுக்காட்டிற்குரிய பகுதிக்குக் கொண்டு செல்லப்படும். எஞ்சியுள்ள 8 விழுக்காட்டிற்குரிய பகுதியிலுள்ள பொருட்கள் அனைத்தும் 10 விழுக்காட்டிற்குரிய பகுதிக்குக் கொண்டு செல்லப்படும். தேயிலை, காபி மற்றும் இரப்பர் மீது உள்ள வரிவிகிதம், மலைத் தோட்டத்தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையினைக் கருதி, அறிவிக்கையின்படி தற்போதுள்ள வரிவிகிதத்திலேயே தொடரும்.

121. மின் மற்றும் மின்னணு பொருட்களை மறுவகைப்படுத்தும் முயற்சியை இத்தருணத்தில் குறிப்பிட வேண்டியுள்ளது. கணினி, மற்றும் கணினி

புற உறுப்புகள், மென்பொருள், மற்றும் அறிவிக்கை செய்யப்பட்ட மின்னணுப் பொருட்கள் மீது 4 விழுக்காடு வரிவிதிக்கப்படும்போது, அனைத்து மின் மற்றும் மின்னணு பாகங்கள், துணைப் பொருட்கள், மின்சக்தி மற்றும் மின்கடத்து மின்னியல் உறைகலன்கள் (power and shunt capacitors) ஆகியவை 10 விழுக்காட்டிற்குரிய விரிவான பகுதிக்கு கொண்டு செல்லப்படும். இதர மின் மற்றும் மின்னணுப் பொருட்களின்மீது 12 விழுக்காடு வரி விதிக்கப்படும். எனினும், முன்பு இந்திய அரசுத் துறையாக இருந்து தற்போது வணிகக் கழகங்களாக மாற்றப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்படும், தொலைதொடர்புச் சாதனங்களுக்கும், அறிவிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கும் 4 விழுக்காடு வரி விதிக்கப்படும்.

122. தற்போது 12 விழுக்காட்டில் வரிவிதிக்கப்படும் பொருட்களை சீராய்வு செய்தபோது, மென்பானங்கள் உள்ளிட்ட கரியமிலவாயு கலந்த நீர்மீது அதிகபட்ச சில்லறை விற்பனைத் தொகை அடிப்படையில் விதிக்கப்படும் மாறுபட்ட வரிமுறையினை நீக்கிட முடிவு செய்யப்படுகிறது. வணிகச் சின்னமுடைய பழச்சாறுகள், மற்றும் பழப்பானங்கள் ஆகியவற்றுக்கு 12 விழுக்காட்டிலேயே வரிவிதிக்கப்படும். பதிவு பெற்ற வணிகச் சின்னமுடைய கரியமிலவாயு கலந்த அனைத்து மென்பானங்கள், ஏனைய பதிவு பெற்ற வணிகச் சின்னமுடைய உணவுப் பொருட்களுடன் சேர்க்கப்பட்டு, அதன்மீது 16 விழுக்காடு வரி விதிக்கப்படும். பதிவு பெறாத வணிகச் சின்னமுடைய வறுவல்கள் (chips) மீது 10 விழுக்காடு வரிவிதிக்கப்படும்.

123. தானியங்கிகள் மற்றும் அவற்றின் துணைப் பொருட்களை மறுவகைப்படுத்தும்போது, அனற்பொறியூட்டும் செருகிகள் (spark plug) மீது தற்போது விதிக்கப்படும் 20 விழுக்காடு வரி 12 விழுக்காடாகக் குறைக்கப்படும். ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் மீது தற்போது விதிக்கப்படும் 16 விழுக்காடு வரி, 12 விழுக்காடாகக் குறைக்கப்படும். 12 மற்றும் 16 விழுக்காடு வரி விதிப்பிற்குரிய பகுதிகளில் குறிப்பிட்டுள்ள பொருட்கள், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து விற்கப்படும்போது அவற்றின்மீது 20 விழுக்காடு வரி விதிக்கப்படும்.

124. மாநிலத்திற்குக் கிடைக்கப்பெறும் வருவாயில், பெட்ரோலியப் பொருட்கள்மீது விதிக்கப்படும் வரியின்மூலம் கிடைக்கும் வருவாய் பெருமளவில் உள்ளது. எனவே, பெட்ரோலியப் பொருட்களின் விலை நிர்ணய அமைப்பு (Administered Price Mechanism) கலைக்கப்பட இருப்பதால், அதன் விளைவுகளைத் தக்க முறையில் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஆண்டுக்கு 10 இலட்சம் முதல் 25 இலட்சம் வரை விற்றுமுதல் தொகை கொண்டுள்ள உணவு விடுதிகள் மீது ஆண்டிற்கு ரூபாய் 12,000 விதிக்கப்படும் வகையில் கூடுதலாக ஒரு இணக்க விகிதவரி (Compounding tax rate) அறிமுகப்படுத்தப்படும்.

125. 1996 முதல் 2001ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், முந்தைய அரசின் தவறான கொள்கையால் தத்தளிக்கும் தொழில் நிறுவனங்களுக்கு, குறிப்பாக சிறுதொழில் நிறுவனங்களுக்கு, புத்துயிர் அளிக்கும் வகையில் இந்த அரசு சிறப்பு முயற்சிகள் பலவற்றை எடுத்து வருகிறது. இந்த அரசினால் இதுகாறும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு வலுவூட்டி, மேலும் சலுகைகளை வழங்குவதன்மூலம், தொழில் வளர்ச்சியும், அதற்கேற்ப வருவாய் வளர்ச்சியும் ஒருசேர அமையும் நிலை உருவாக்கப்படும். கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு, மோட்டார் ஸ்பிரிட், டீசல் மற்றும் சிமெண்ட் நீங்கலான பொருட்களை இந்த மாநிலத்தில் உள்ள வணிகர்கள் (dealers) விற்பனை செய்யும்போது, 4 விழுக்காடு சலுகைவரி விதிக்கப்படும்.

- தமிழ்நாடு அரசுத் துறைகள்
- தமிழ்நாடு மின்வாரியம்
- நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
- சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்
- மருத்துவ சேவைக் கழகம்
- மாநில போக்குவரத்துக் கழகங்கள்

கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான டர்ன்–கீ முறையில் (turnkey) செய்யப்படும் விற்பனைக்கும் இச்சலுகையானது குறிப்பிட்ட உறுதிமொழிப் படிவத்தின் அடிப்படையில் வழங்கப்படும்.

- தமிழ்நாடு மின்வாரியம்
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
- சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்

சர்க்கரைக் கழிவினை மூலமாகக் கொண்டு மருந்து மற்றும் வேதிப் பொருட்கள் தயாரிக்கும் தமிழ்நாட்டில் உள்ள, அறிவிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்யப்படும் சர்க்கரைக் கழிவின் மீது வரி குறைக்கப்பட்டு குறிப்பிட்ட உறுதிமொழிப் படிவத்தின் அடிப்படையில் 20 விழுக்காடு வரி விதிக்கக் கருதப்பட்டுள்ளது. இதே தருணத்தில், சேலம் சேகோ சர்வ் என்ற கூட்டுறவு நிறுவனத்திற்கு கூடுதல் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கவும், அவர்களுடைய விற்பனை மீதுள்ள பொது விற்பனை வரியினை சரிக்கட்டி 4 விழுக்காடு வரி விதிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. சென்னை பெட்ரோலியம் கார்ப்பேரஷன் நிறுவனத்தின் அதிகரிக்கப்பட்ட உற்பத்தித் திறனை உபயோகித்து, அரசுக்கு கூடுதல் வரியினை ஈட்டித் தரும் வகையில், எண்ணெய் நிறுவனங்கள் கொள்முதல் செய்யும் லூப் எண்ணெய் (Lube base oil) மீதான கொள்முதல் வரியில் 7 விழுக்காடுவரை ஈடுகட்டிக் கொள்ள அனுமதிக்கப்படும். இரப்பர் தொழில் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படும் கொள்முதல் வரியில், இயற்கை இரப்பர் மீது செலுத்தப்பட்ட மத்திய விற்பனைவரியினை ஈடுசெய்து கொள்ள அனுமதி வழங்கப்படும். சிறு தொழிலகங்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்படும் பாரபின் மெழுகிற்கு (paraffin wax) 4 விழுக்காடு வரி விதிக்கப்படும். மின் கட்டுப்பாட்டுப் பலகைகள் (electrical control panels) மூலதனப் பொருளாகக் கருதப்பட்டு அவை மீது சலுகை வரியாக 3 விழுக்காடு விதிக்கப்படும்.

126. மதிப்புக் கூட்டு வரி விதிப்பின் விளைவுகளை அறிந்துகொள்ளும்வண்ணம், வரி ஈடுகட்டும் கோட்பாட்டினை (concept of set-off) சோதனை முறையில் அறிமுகப்படுத்துவது சரியாக இருக்குமென கருதப்படுகிறது. முதற்கட்டமாக, கீழ்க்கண்ட பொருட்களின் விற்பனையின்மீது செலுத்தப்பட வேண்டிய தமிழ்நாடு பொது விற்பனை வரி மற்றும் மத்திய விற்பனைவரியில், இப்பொருட்களை தயாரிப்பதற்கான (எரிபொருள் நீங்கலான) உள்ளீட்டுப் பொருட்கள் உறுப்புகள், மற்ற உதிரிப் பாகங்களின்மீது, படிவம்–17ன்கீழ் செலுத்தியுள்ள வரியினை முழுவதுமாக அறிவிக்கப்படும் நாளிலிருந்து முழுவதுமாக ஈடுகட்டிக் கொள்ளலாம்:–

- 12 விழுக்காடு வரிக்குரிய மின் மற்றும் மின்னணுப் பொருட்கள், கையால் செய்யப்பட்ட சோப்புகள்
- 10 விழுக்காடு வரிக்குரியதாக உள்ள இயந்திரத்தால் செய்யப்பட்ட தீப்பெட்டிகள் மற்றும் காகிதங்கள்

இச்சலுகையானது, ஒப்படைப்பு விற்பனைக்கு (consignment transfers) அனுப்பப்படும் பொருட்களுக்கு வழங்கப்பட மாட்டாது என தெளிவுப்படுத்தப்படுகிறது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனைமீது, 4 விழுக்காடு மத்திய விற்பனை வரியினை செலுத்தியுள்ள இனங்களில் மட்டும், செலுத்தப்பட்ட மத்திய விற்பனைவரியில் 50 விழுக்காடு வரை ஈடுகட்டிக் கொள்ளலாம். தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டம் அல்லது மத்திய விற்பனைவரிச் சட்டத்தின்கீழ் சலுகை அடிப்படையில் நடைபெறும் விற்பனைகளுக்கு மேற்கூறிய ஈடுகட்டும் சலுகை கிடையாது. மாநிலத்திலுள்ள அச்சுத் தொழிலகங்களுக்கு நிவாரணம் அளிக்கும்வகையில், இத்தொழிலகங்களால் நமது மாநிலத்தில் வாங்கப்பட்ட காகிதம் மற்றும் அச்சு மை முதல் விற்பனை மீது நேரடியாகச் செலுத்தப்பட்ட வரித் தொகையினை, அரசு அறிவிக்கும் நாளிலிருந்து ஈடுசெய்து கொள்ள வழிவகுக்கப்படும். தமிழ்நாட்டில் நடைபெறும் அச்சடிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மற்றும் ஒப்பந்தப் பணி தொடர்பான பிரச்சனைகளைக் குறைக்கும் வகையில், 3 விழுக்காடு இணக்க விகித வரி செலுத்த வழி

செய்யப்படும். இந்த இணக்க விகித வரி இனங்களுக்கு வரி ஈடு கட்டும் சலுகை இல்லை. இந்த வரி ஈடுகட்டும் சலுகை வழங்குவதின் மூலமாக அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 21 கோடி அளவில் வருவாய் இழப்பு இருக்குமென மதிப்பிடப்படுகிறது. இச்சலுகையினால் கிடைக்கும் பயனை இத்தொழிலகங்கள் நுகர்வோர்களுடன் பகிர்ந்து கொள்ளுமென அரசு நம்புகிறது. பொய்யான கோரிக்கைகளை ஏற்படுத்துதல் மூலம் இச்சலுகையினை தவறாகப் பயன்படுத்தினாலோ அல்லது சாதகமான விளைவுகள் இல்லாது போனாலோ இச்சலுகை திரும்பப் பெறப்படும்.

127. வருவாயினை உயர்த்தவும், அதனைப் பாதுகாக்கவும் பல சட்ட மற்றும் நடைமுறை வழிகள் செயல்படுத்தப்படவுள்ளன. அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் அறிவிக்கப்பட்டுள்ள பொருட்கள் (Declared goods) நீங்கலாக அனைத்துப் பொருட்களின் மறுவிற்பனைமீது வரிவிதிக்கக் கருதப்பட்டுள்ளது. இரண்டாவது மற்றும் அடுத்துவரும் விற்பனையாளர்களின் விற்பனைமீது இவ்வரி குறைந்த அளவில் 1 விழுக்காடாக இருக்கும். இந்த நடவடிக்கையானது அரசின் வருவாயினைப் பெருக்கும்பொருட்டும், மதிப்புக் கூட்டு வரி முறையில் அனைத்து நிலை விற்பனைமீதும் வரிவிதிக்கும் நிலையை எதிர்கொள்ளும் வகையிலும் எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், ரூபாய் 10 இலட்சத்திற்குக் குறைவாக ஆண்டு விற்றுமுதல் கொண்ட வணிகர்கள், இந்த மறுவிற்பனைமீது வரிவசூலிக்கவோ, செலுத்தவோ வேண்டியதில்லை.

128. கடந்த 1-12-2001 முதல் ஒரு சில பொருட்கள் மீது நுழைவுவரி விதிக்கப்பட்டது. கீழ்க்கண்ட பொருட்களை நுழைவு வரி விதிப்பிற்குரிய பொருட்களின் பட்டியலில் கூடுதலாகச் சேர்க்கக் கருதப்பட்டுள்ளது.

1. மோட்டார் ஸ்பிரிட்
2. லூப்ரிகேட்டிங் ஆயில் (Lubricating oil), கிரீஸ் மற்றும் லூப் பேஸ் ஆயில் (Lube base oil)
3. பிட்டுமென்(Bitumen)
4. அலுமினியம்
5. கல்நார் சிமெண்ட் தகடுகள்
6. உயரழுத்த பாலிதீன் குருணைகள், பிவிசி ரெசின் மற்றும் பிவிசி குழாய்கள்
7. உயரழுத்த பாலி எத்திலீன் (Poly Ethylene) மற்றும் பாலி புரொபாலினால் (Poly Propylene) நெய்யப்பட்ட துணிகள்
8. சலவைக் கற்கள் (Marbles) , கருங்கல் (Granites), செராமிக் ஓடுகள்
9. பொட்டாசியம் குளோரேட், லேப் (LAB), சோடா ஆஷ், காஸ்டிக் சோடா, மற்றும் குளோரின்
10. சானிடரிவேர்
11. பூச்சிடப்பட்ட காகிதம், டிஷ்யூ காகிதம், எம்.ஐ.சி.ஆர் (MICR), எலக்ட்ரிகல் தர காகிதம், கிளாசின் கோப்பு அட்டைகள் (Glassine file boards) நீங்கலான, காகிதம், காகித அட்டைகள் மற்றும் செய்தித் தாள் காகிதம்.
12. கோதுமைப் பொருட்கள்
13. இரும்பு மற்றும் எஃகு
14. கம்ப்ரஸ்ஸர் மற்றும் குளிர் பதன இயந்திரங்கள், காற்று பதன இயந்திரங்கள், அவற்றின் பாகங்களும் துணைக்கருவிகளும்
15. பீடி நீங்கலான புகையிலை மற்றும் புகையிலைப் பொருட்கள்

நுழைவு வரியானது, பீடி நீங்கலாக புகையிலை மற்றும் புகையிலை பொருட்களுக்கு 10 விழுக்காடும், ஏனைய பொருட்களுக்கு தமிழ்நாடு

பொதுவிற்பனைவரிச் சட்டத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரிவிகிதத்திலும் விதிக்கப்படும். அறிவிக்கப்பட்ட சுயேச்சையான மின் உற்பத்தியாளர்களுக்கு விற்கப்படும் LSHS (Low Sulphur Heavy Stock) மீது, அரசு அறிவித்த நாளிலிருந்து ஓர் ஆண்டுக்கு நுழைவு வரி 3 விழுக்காடாகக் குறைக்கப்படும்.

129. சிமெண்ட் விற்பனைவிலையில் அடிக்கடி காணப்படும் அதிகமான விலை உயர்வு அரசினையும், பொதுமக்களையும் கவலை கொள்ளச் செய்துள்ளது. **OPC மற்றும் PPC சிமெண்ட் விற்பனை விலை மூட்டைக்கு முறையே ரூ.145 மற்றும் ரூ.135க்கு மேலே இருப்பின் அவ்விற்பனைமீது 24 விழுக்காடு வரிவிதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட விற்பனைவிலை விற்பனைவரியினை உள்ளடக்கியதாகும். இவ்வகையிலான சிமெண்டின், இரண்டாவது மற்றும் அதன்பின் நடைபெறும் விற்பனைமீது 5 விழுக்காடு வரிவிதிக்கப்படும். மேற்கூறப்பட்ட விற்பனை விலைக்குக் கீழே விற்கப்படும் சிமெண்ட் மீது, தற்போதுள்ள வரிவிகிதப்படி முதல் விற்பனையில் 16 விழுக்காடு வரியும், இரண்டாவது மற்றும் இதர விற்பனையில் 1 விழுக்காடு வரியும் விதிக்கப்படும். வெள்ளை சிமெண்ட் மற்றும் ரெஃப்ராக்டரி சிமெண்ட் உள்ளடக்கிய சிமெண்ட் மீதான நுழைவு வரி நீக்கப்படும். இந்த நடவடிக்கைகளால், சிமெண்ட் நியாயமான விலையில் கிடைக்க வழிவகுக்குமென நம்பப்படுகிறது.**

130. நகை மற்றும் உயர்மதிப்புக் கற்களின் வியாபார நடவடிக்கைகளில் வணிகர்கள் வரி செலுத்துவதைத் தவிர்ப்பது கணிசமான அளவில் உள்ளதால் இதனைச் சீர் செய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். **ஒவ்வொரு மாதமும் கூடுதலாக இருப்பில் சேரும், ரூபாய் 3,000க்கு மேற்பட்ட விலையில் கொள்முதல் செய்யப்பட்டுள்ள பட்டுப் புடவைகளின் இருப்பு மதிப்பின்மீது, குறைந்த அளவிலான 1 விழுக்காடு ஆடம்பர வரிவிதிக்கும் வகையில் ஆடம்பர வரிச் சட்டம் திருத்தியமைக்கப்படும். விளம்பர வரிச் சட்டத்தின் நோக்கம் விரிவாக்கப்படும்.**

131. மக்களுக்குத் தரமான வாழ்க்கை வசதிகளை அளிக்கவும், வணிகம் மற்றும் தொழில்கள் சிறப்பாகச் செயல்படத் தேவையான சூழ்நிலையை உருவாக்கவும், கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கிட வேண்டியது இன்றியமையாததாக உள்ளது. மிகவும் தேவையான இத்துறையின் வளர்ச்சிக்காக, அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், சமையல் வாயு மற்றும் அறிவிக்கப்பட்ட பொருட்கள் (Declared Goods) தவிர்த்து ஏனைய பொருட்களின் மீது தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படும் விற்பனைவரி மீது 5 விழுக்காடு உள்கட்டமைப்பு உபவரி (Infrastructure surcharge) விதிக்கப்படும். இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் மீதான விற்பனை வரி சமீபத்தில் 50 விழுக்காட்டிலிருந்து 55 விழுக்காடாக உயர்த்தப்பட்டதால் இப்பொருட்களின் மீது இந்த உப வரி விதிக்கப்படமாட்டாது. இந்த உள்கட்டமைப்பு உபவரி மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 230 கோடி அளவில் வருவாய் கிடைக்குமென கருதப்படுகிறது.

132. **இவ்வகையான வரிவிதிப்பு, உபவரிவிதிப்பு மற்றும் வரிச்சலுகைகளின் விளைவாக, ஆண்டொன்றுக்கு சுமார் ரூபாய் 690 கோடி அளவில் கூடுதல் வருவாய் அரசுக்கு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.**

133. பெருமளவில் விவாதத்திற்கு உள்ளாகியுள்ள வணிகவரி நிலுவை பற்றி சில கருத்துக்களைக் குறிப்பிட விழைகின்றேன். வணிகவரி நிலுவையினை வசூலித்திருந்தால் அரசின் நிதிப் பற்றாக்குறை சரி செய்யப்பட்டிருக்கும் என்பது போன்ற அறிக்கைகள் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. நிலுவையாக உள்ள விற்பனைவரியில் ஏறக்குறைய 90 விழுக்காடு, கீழ்க்கண்ட பரந்த தலைப்புகளின்கீழ் வருமென நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அ. பல்வேறு நீதிமன்றங்களின்முன் நிலுவையாக உள்ள வழக்குகளினால் வசூலிக்க இயலாதவை அல்லது மேல்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் வரிநிலுவை நீக்கம் செய்யப்பட வேண்டியவை

ஆ. மத்திய, மாநில, வருவாய் மீட்புச் சட்டங்களின்கீழ் நடவடிக்கை தொடரப்பட்டு நிலுவையாக உள்ளவை, வரி கைவிடுதல் மற்றும் வரி தள்ளுபடி செய்ய வேண்டியுள்ள இனங்கள், வரி செலுத்துவதைத் தள்ளிப்போடும் திட்டத்தின்கீழ் (Deferral scheme) உள்ளவை மற்றும்

தவணைமுறைச் சலுகையில் வரிசெலுத்த அனுமதிக்கப்பட்ட இனங்கள்.

1996–97ஆம் ஆண்டுமுதல் 1999–2000 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் வரிநிலுவையானது சற்றேறக்குறைய மூன்று மடங்காக உயர்ந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் நிலுவையிலுள்ள வரிவிதிப்பினால் முடிக்க வேண்டுமென்ற நோக்கில் செயல்பட்டது இதற்கு ஒரு காரணமாகும். அதிக அளவில், அனுமானத்தின் அடிப்படையிலான மிகச் சிறந்த தீர்ப்பின்படி (Best of Judgment) வரிவிதிப்புகள் முடிக்கப்பட்டதால், அவற்றை எதிர்த்து வழக்குகள் பெருகிய சூழல் ஏற்பட்டது. இந்த அரசு, நீதிமன்றங்களில் தேங்கியுள்ள வழக்குகளை விரைவில் முடிக்கவும், நடைமுறை மாற்றங்களைக் கொண்டு வரவும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கும். புலனாய்வுப் பணியில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களைப் பயன்படுத்தி, தற்போது கண்டுபிடிக்க இயலவில்லை என தெரிவிக்கப்பட்ட வணிகர்களைக் கண்டுபிடித்து அவர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படும். நிர்வாகத்தைச் சீர்படுத்தும் வகையிலும், அனுமானத்தின் அடிப்படையிலான மிகச் சிறந்த தீர்ப்பின்படி (Best of Judgment) இறுதிவரிவிதிப்பு செய்வதைக் கண்காணிக்கும் வகையிலும், கடுமையான தண்டம் விதிக்கும் வகையிலும், அந்தந்த சட்டங்களில் தகுந்த திருத்தங்கள் கொண்டு வரப்படும்.

134. பதிவுச் சான்றுக் கட்டணத்தையும், பதிவுச் சான்று புதுப்பித்தலுக்கான நாளினையும் மாற்றியமைக்க, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டத்தில், திருத்தங்கள் செய்ய அரசு முடிவுசெய்துள்ளது. 2002–2003ஆம் ஆண்டிற்கு, அபராதத் தொகையின்றி ஏப்ரல் 30ஆம் தேதிக்குள்ளும், அபராதத் தொகையுடன் ஆகஸ்ட் 31ஆம் தேதிக்குள்ளும் பதிவுச் சான்று புதுப்பிக்கப்பட வேண்டும்.

135. பணி ஒப்பந்தக்காரர்களின் நீண்டகாலக் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், இந்த ஆண்டு, சோதனை முறையில், வருவாயில் வரிப் பிடித்தம் (Tax Deduction at Source) செய்வதைக் கண்காணிக்க மையப்படுத்தப்பட்ட வட்டம் ஒன்று சென்னையில் ஏற்படுத்தப்படும். இது திருப்தியளிக்கும் வகையில் செயல்பட்டால், இம்முறை மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்தப்படும்.

136. "சமாதானத் திட்டம்–2002" என்ற திட்டத்தினை மூன்று மாதங்களுக்குச் செயல் படுத்தியும், குறிப்பிட்ட வகையான வரிநிலுவைகளை முடிவு செய்ய "தீர்வாணையம்" (Settlement Commission) ஒன்றினை ஒரு குறுகிய காலத்திற்கு அமைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தில், வணிகர்கள் சமாதானத் திட்டத்தின்கீழ் வரும் முறையீடுகளை சமாதானத்தின்பேரில் திரும்பப் பெற்றுக் கொள்ளவும், சர்ச்சைக்குரிய தொகையில் முன்னர் செலுத்தியுள்ள தொகைகளை வரவு வைக்கவும் வழிவகுக்கக் கருதப்பட்டுள்ளது.

137. இந்த தீர்வாணையம் (Settlement Commission), 1–4–1995க்கு முன்பு வணிகத்தை நிறுத்திவிட்ட, 28–2–2002 அன்று மேல்முறையீடு ஏதும் நிலுவையில் இல்லாததுமான வணிகர்களின் வரிநிலுவை இனங்கள், 1–4–1996க்கு முன்னுள்ள பரிசுச் சீட்டு வணிகர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய வரி நிலுவைகள், அறிவிக்கப்பட்ட தேதியில் நிலுவையாக உள்ள, தமிழக அரசின் தன்னாட்சி நிறுவனங்கள் மற்றும் வாரியங்கள், சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் உள்ளடங்கிய மத்திய அரசு எண்ணெய் நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட சர்ச்சைகள், மற்றும் 28.2.2002 அன்று மேல்முறையீடு நிலுவையில் இல்லாமலும், 1.4.1999க்கு முந்தைய காலத்தில் நிலுவையாகவும் உள்ள வரிநிலுவை கைவிடுதல் (waiver) கோரிக்கைகள் ஆகியவற்றை தீர்வு செய்யும். இந்த இனங்கள் சமாதானத் திட்டத்தின் கீழ் வராது.

138. சுயவரிவிதிப்புக்கான தற்போதைய நடைமுறையினை அரசு ஆய்வு செய்துள்ளது. 1999–2000ஆம் ஆண்டு முதல், ஒரு கோடி ரூபாய் வரை விற்றுமுதல் உள்ள இனங்களில், 20 இலட்சத்திற்கு மேல் விற்றுமுதல் உள்ள வணிகர்கள், பட்டயக் கணக்கர்களின் (Chartered Accountants) சான்றிதழுடன் நமூனாவை சமர்ப்பிக்க வேண்டுமென்ற ஒரே நிபந்தனையுடன் கூடிய சுயவரிவிதிப்பு முறையினை முந்தைய அரசு அமைத்திருந்தது. ஏனைய மாநிலங்களில் செயல்படுத்தப்படும் சுயவரிவிதிப்பு முறையினை ஆய்வு செய்ததின்பேரிலும், சான்றிதழ் வழங்குவது தொடர்பாக பெறப்பட்ட முறையீடுகளின்பேரிலும் இந்த சுயவரி விதிப்பு முறையைத் திருத்தியமைக்க வேண்டிய அவசியம் எழுந்ததுள்ளது. 2001–2002

வரிவிதிப்பு ஆண்டு முதல், ஒரு சில நிபந்தனைகளுக்குட்பட்டு, ஆண்டுக்கு ரூபாய் 40 இலட்சத்திற்குமேல் விற்றுமுதல் உள்ள வணிகர்களுக்கு மட்டும் பட்டயக் கணக்கர் (Chartered Accountant) அல்லது விலை மதீப்பீட்டுக் கணக்கர் ( Cost Accountant) என்பவரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் தர வேண்டுமென்ற அடிப்படையில், சுயவரிவிதிப்பு முறை விரிவுபடுத்தப்படும். இந்த சுயவரிவிதிப்பு முறையானது ரூ.10 கோடி வரை விற்று முதலுள்ள வணிகர்களுக்கும், இதர நிபந்தனைகளுடன், அவர்களால் செலுத்தப்பட்ட வரியானது கடந்த ஆண்டினைவிட15 விழுக்காடு கூடுதலாக இருக்கும்பட்சத்தில் விரிவுபடுத்தப்படும். அக்டோபர் திங்கள் 31ஆம் தேதிக்குள் ஆண்டு நமூனாவைச் சமர்ப்பிக்காத வணிகர்கள், சுயவரிவிதிப்பு முறைக்கு உரிமை கோர இயலாதவர்களாக தீர்மானிக்கப்படுவதுடன், அவர்களுடைய வரிவிதிப்பு வழக்கமான முறையில் முடிவு செய்யப்படும்.

139. 1998–1999ஆம் ஆண்டு முடிய நிலுவையிலுள்ள வரிவிதிப்புகளை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1998–99ஆம் ஆண்டுவரை நிலுவையிலுள்ள பூசலுக்குட்படாத வரிவிதிப்புகள், வணிகர்கள் அனைத்து நமூனாக்களையும், வரித் தொகையினையும், சலுகை வரிக்கான உறுதி மொழிப் படிவம் அல்லது சான்றிதழ்களையும் 30–9–2002க்கு முன் சமர்ப்பித்தால், கணக்குகள் தணிக்கையிடப்படாமலேயே, இறுதி செய்யப்படும். C மற்றும் D படிவங்களைத் தாக்கல் செய்ய இயலாத வணிகர்கள், மத்திய விற்பனைவரிச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட வரிவிகிதத்திற்குமேல் 2 விழுக்காடு பிழை பொறுத்தல் கட்டணமாக செலுத்துவதுடன், துறையினால் கோரப்படும் மாற்று ஆவணங்களை வரிவிதிப்பினை முடிக்கும் வகையில் சமர்ப்பிக்க வேண்டும்.

140. இதுவரை நமூனாக்களை சமர்ப்பிக்காத, வரிவிதிப்பிற்கு உட்படாத வணிகர்கள், மற்றும் 2000–2001 முடிய உள்ள வரிவிதிப்பு ஆண்டுகளுக்கான ஆண்டு நமூனாக்களை சமர்ப்பிக்காதவர்கள், 30–9–2002க்குள் ஆண்டு நமூனாக்களை சமர்ப்பிக்க ஒரு சிறப்பு ஏற்பாடு செய்யப்படும். நமூனாவைச் சமர்ப்பிக்கும்படி அறிவிப்பு வழங்கிய பின்னரும், மேலே குறிப்பிட்ட தேதிக்குள் நமூனா சமர்ப்பிக்கப்படவில்லையெனில், தேவையான நடவடிக்கை எடுப்பதுடன் இவ்வணிகர்களின் பதிவுச் சான்றும் இரத்து செய்யப்படும்.

141. நீண்ட காலமாக நிலுவையாக உள்ள பிரச்சினைகளை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு இந்த அரசு வழங்கியுள்ள நல்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும், அரசின் வருவாயினைப் பெருக்கிட உறுதுணை நல்குமாறும் வணிகர் சமுதாயத்தினை அரசு கேட்டுக் கொள்கிறது. இந்த அரசானது சட்டவிதிமுறைகளை ஏற்று செயல்படும் வணிகர்களைக் கண்டறிந்து, வேறுபடுத்தி அவர்களை ஊக்குவிக்கவும், அவ்வாறல்லாதவர்களை நெறிப்படுத்தவும் உறுதி பூண்டுள்ளது.

142. மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில், மத்திய விற்பனை வரிச் சட்டத்திற்கு சில திருத்தங்கள் கொண்டுவர கருதப்பட்டுள்ளது. சட்டம் அமல்படுத்தப்பட்டவுடன், உறுதி மொழிப் படிவங்கள் சமர்ப்பிப்பது கட்டாயமாகும். மேலும், ஏற்கெனவே வெளியிடப்பட்ட அறிவிக்கைகளுக்கு உரிய மாற்றங்கள் செய்யப்படும்.

143. இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபானத்தை அருந்துவோர், தாம் அமர்ந்து உட்கொள்வதற்கேற்ற இடவசதி வேண்டும் என்று தொடர்ந்து வேண்டுகோள்விடுத்து வந்துள்ளனர். **எனவே, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகிய பகுதிகளில், முறையே ரூ.3 இலட்சம், ரூ.2 இலட்சம் மற்றும் ரூ.1 இலட்சம் உரிமக் கட்டண விதிப்புக்குட்பட்டு, இந்தியாவில் தயாரிக்கும் வெளிநாட்டு மதுபான வகைகள் விற்பனை செய்யப்படும் கடைகளில் (Bars) மது அருந்துவதற்கு தக்க இடவசதி செய்து கொடுக்க அனுமதியளிக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.**

144. மாநிலத்தில், குறிப்பாக ஊரகப் பகுதிகளில் பல உயிர்களைப் பலிகொண்ட கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதையும் உட்கொள்ளப் படுவதையும் தவிர்க்கும் எண்ணத்துடன் 1.1.2002 முதற்கொண்டு மலிவு விலை மது விற்பனைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் கடந்த மூன்று மாத காலத்தில் நமக்குக் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில் எந்த நோக்கத்திற்காக இத்திட்டம் தொடங்கப்பட்டதோ அந்த நோக்கம்

நிறைவேறவில்லை எனத் தெரிகிறது. இத்திட்டத்தினால் மாநிலத்திற்கு வெகுவான நிதி இழப்புதான் ஏற்பட்டுள்ளது. தற்போது மாநிலத்தில் உள்ள நெருக்கடியான நிதிநிலையில் எந்த ஒரு வருவாய்க் குறைவையும் ஏற்கும் நிலையில் மாநிலம் இல்லை இத்திட்டத்தை இரத்து செய்ய வேண்டுமென மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. **எனவே மலிவு விலை மது விற்பனைத் திட்டத்தை 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் நாளிலிருந்து நிறுத்திவிடுவதென அரசு முடிவு செய்துள்ளது.** மாற்று ஏற்பாடுகள் செய்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை சமாளிப்பதற்காக இருவார கால அவகாசம் தேவைப்படுகிறது. கள்ளச்சாராயம் காய்ச்சுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் முனைப்புடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என அரசு உறுதியளிக்கிறது.

## நிதி நிருவாகம்

145. வரிவிதிப்பில் மேற்கொள்ள இருக்கின்ற உத்தேச மாற்றங்களைக் கணக்கில் கொண்டால், வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஏற்படும் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூ.640.24 கோடியாகக் குறையும். வரி நிலுவைத் தொகைகள் வசூலிப்பை உயர்த்துவதன் மூலமாகவும், காலங்கடந்த, பயன் தரவியலாத திட்டங்களில் முடங்கிய நிதி ஆதாரங்களை விடுவிப்பதைநோக்கமாகக் கொண்ட, நிதிச் சீர்திருத்தங்களை செவ்வனே மேற்கொள்வதன் மூலமாகவும் இப்பற்றாக்குறை சரிக்கட்டப்படும். தேவையடிப்படையில் திட்டங்களுக்கு நிதியொதுக்கும் முறை (Zero Base Budgeting) முழு வேகத்துடன் தொடர்ந்து செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

146. இவ்வரசு கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்து வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்தச் சூழ்நிலையில் சில கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியது அவசியமாகிறது. **புகழ்பெற்ற பொருளாதார வல்லுநர் டாக்டர் இராஜா ஜே செல்லையா அவர்களது தலைமையின்கீழ் “வரி சீரமைப்பு மற்றும் வருவாய் அதிகரிப்பு ஆணையம்” ஒன்றை ஏற்படுத்த அரசு முடிவுசெய்துள்ளது.** மாநிலத்தின் நிதிநிலையைச் சீரமைத்து தமிழகத்தை மீண்டும் வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்ல இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் மற்றும் தமிழக மக்களின் முழு ஆதரவை இவ்வரசு நாடுகிறது. அரசின் வருவாயினை உயர்த்தவும், பயனற்ற செலவினங்களைக் குறைக்கவும் தக்க ஆலோசனைகளை நல்குமாறு மாமன்ற உறுப்பினர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

147. இந்த வரவு–செலவுத் திட்டத்தை உருவாக்குவதில் முழு ஈடுபாட்டினையும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் போற்றுதற்குரிய வழிகாட்டுதலையும் நல்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறேன்.

148. நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள், மாநிலத்தின் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் நிலவிடும் வறுமைப் பிணியைப் போக்கிடவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கிடவும் உறுதிபூண்டுள்ளார்கள். தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் மீண்டும் நிலைநிறுத்தி, இந்தியாவிலேயே அனைத்துத் துறைகளிலும் தலைசிறந்த மாநிலமாகத் தமிழகத்தை உயர்த்திட புரட்சித்தலைவி அவர்கள் தீவிர செயல் திட்டங்களை மேற்கொண்டுள்ளார்கள். அவருடைய தொலைநோக்குச் சிந்தனைகள் ஆக்கபூர்வமான செயல் திட்டங்களாக மலர்வதற்கு இந்த வரவு–செலவுத் திட்டம் வழிவகுக்கும்.

149. இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதில் பேருதவியையும், பெரும் ஒத்துழைப்பையும் நல்கிய நிதித்துறைச் செயலர் திரு. ஆர். சந்தானம், இ.ஆ.ப. அவர்களுக்கும், அயராது பணியாற்றிய இத்துறையைச் சேர்ந்த பணியாளர் குழுவிற்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

150. 2002–2003 ஆம் ஆண்டுக்கான ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

• • •

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **தேவ. ஜோதி ஜெகராஜன்,** இ.ஆ.ப, இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : **5368926/5364906**



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 30–3–2002 அன்று தூத்துக்குடி மாவட்டம், சங்கரலிங்கபுரம் கிராமத்திற்குச் சென்று, அண்மையில் அப்பகுதியில் நிகழ்ந்த சம்பவத்தில், உயிரிழந்த காவலர் முருகன் அவர்களின் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் கூறினார்கள்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 30–3–2002 அன்று தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த சங்கரலிங்கபுரம் கிராமத்திற்குச் சென்று, அண்மையில் அப்பகுதியில் நிகழ்ந்த சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட 145 நபர்களுக்கு மொத்தம் ரூ.13,33,700 மதிப்பிலான நிவாரண உதவிகளை நேரில் வழங்கி அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.


தமிழரசு
R.N.I.No.21446/70
Licence No.G/TN/CPMG/190, WPP-130